பக்கங்கள்: பதினாறு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 7.00

சுடர்17 வள்ளுவர் ஆண்டு 2033 புரட்டாதி 24 வியாழக்கிழமை (10-10-2002) UTHAYAN - A Lively National Tamil Daily கதிர்:317

### கிழக்கில் பொதுமக்களின் பேரணி மீது

# அதிரடிப் படையினர் சுட்டதில் 7பேர் மரணம்; 16பேர் காயம்!

## அம்பாறை மாவட்டம் எங்கும் பதற்றநிலை வீதிகளில் ரயர் எரிப்பு; போக்குவரத்து தடை

அம்பாறை,ஒக்ரோபர்10

**அம்பாறை மாவட்டம் திருக்கோயில் பகுதியில் நேற்றுக்காலை விடுதலைப் புலிகள் மூவர் விசேட அதிரடிப் படையினரால் தாக்கப்பட்டனர். அதை எதிர்த்து மாலையில் பொதுமக்கள் ஆயிரக்கணக்கில் திரண்டு பேரணியாகச் சென்றபோது அவர்கள் மீது அதிரடிப் படையினர் சரமாரியாகச் சுட்டதில் ஏழுபேர் கொல்லப்பட்டனர்; 16பேர் காயமடைந்தனர்.**

**காலையும் மாலையும் நடந்த சம்பவங்களால் மக்கள் கொதிப்படைந் திருக்கிறார்கள். அம்பாறை தமிழ்ப் பகுதிகள் எங்கும் வீதிகளில் ரயர்கள் போட்டு எரிக்கப்பட்டன; போக்குவரத்துகள் ஸ்தம்பித்தன; பதற்றநிலை ஏற் பட்டது.**

நேற்றுக்காலை விசேட அதிரடிப் படையினரின் தாக்குதலில் காயம டைந்த புலிகள் இயக்க உறுப்பினர் களில் ஒருவர் கோமாரி அரசியல் துறை பொறுப்பாளர் விசுவநாதன் மற்றவர் அவரது உதவியாளர் கிருஷ் ணராஜ் மூன்றாமவர் டிராக்டர் சாரதி.

கஞ்சிகுடிசாற்றிலுள்ள மாவீரர் இல்லத்தை துப்புரவு செய்வதற்கு விசேட அதிரடிப்படை முகாம் அமைந் துள்ள காஞ்சிரங்குடா ஊடாக டிராக டரில் சென்றபோதே மூவரையும் முகாமுக்கு முன்னால் வழிமறித்த விசேட அதிரடிப்படையினர் தாக்கி னர் எனக் கூறப்பட்டது.

தமது தேவைக்கு டிராக்டரைத் தரும்படி விசேட அதிரடிப் படையி

(16ஆம் பக்கம் பார்க்க)

### வடக்கு - கிழக்கில் மாலதி நினைவு நிகழ்வுகள்

## தமிழீழப் பெண்கள் எழுச்சிநாள் கிளிநொச்சியில் பிரதான நிகழ்வு

### குடாநாட்டிலிருந்து இலவச போக்குவரத்துச் சேவை

யாழ்ப்பாணம்,ஒக்.10

தமிழீழ விடுதலைப் புலிகளின் முதல் பெண் மாவீரர் 2ஆம் லெப்டி னண்ட் மாலதியின் 15 ஆம் ஆண்டு நினைவு நிகழ்வுகள் மற்றும் தமிழீ ழப் பெண்கள் எழுச்சி நாள் என்பன தமிழீழப் பிரதேசமெங்கும் இன்று பெரும் எழுச்சியுடன் அனுஷ்டிக்கப் படவுள்ளன.

☛ மகளிர் அரசியல்துறையின் அறிக்கை 15ஆம் பக்கத்தில்

யாழ்ப்பாணம், கிளிநொச்சி, மட் டக்களப்பு ஆகிய இடங்களில் விசேட நிகழ்வுகள் ஏற்பாடு செய்யப் பட்டுள்ளன.

இரண்டாம் லெப்.மாலதி, இந் திய இராணுவத்துடனான நேரடி மோத லில் சயனைட் அருந்தி வீரமரணம டைந்த இடமான, கோப்பாய் செல்வ புரம் பகுதியில் இன்று காலை 9

(16ஆம் பக்கம் பார்க்க)

## குடாநாட்டு மக்கள் ஒருமித்து தமிழ்க் கைதிகளுக்கு ஆதரவு

### நேற்று இயல்பு வாழ்க்கை ஒருமணி நேரம் ஸ்தம்பிதம்

யாழ்ப்பாணம்,ஒக்.10

ஸ்ரீலங்கா சிறைகளில் விசார ணைகள் ஏதுமின்றி நீண்டகாலமா கத் தடுத்துவைக்கப்பட்டுள்ள தமிழ்க் கைதிகளை விடுதலை செய்யக் கோரியும்-

அவர்கள் தற்சமயம் மேற்கொண் டுள்ள உண்ணாவிரதப் போராட்டத் திற்கு ஆதரவு தெரிவித்தும் -

நேற்று நண்பகல் 12 மணிமுதல் சுமார் ஒருமணி நேரம் நடத்தப்பட்ட எதிர்ப்புப் போராட்டம் காரணமாக குடாநாட்டில் மக்களின் இயல்பு வாழ்க்கை ஸ்தம்பிதமடைந்தது.

பாடசாலைகள் திணைக்களங்கள்

(16ஆம் பக்கம் பார்க்க)

☛ களுத்துறைச் சிறைக் கைதிகள் மேற்கொண்டு வந்த உண்ணாவிரதப் போராட் டம் நேற்றுடன் முடிந்தது. அது தொடர்பான விரிவான செய்திகள் 2ஆம் பக்கத்தில்.

## 9 முஸ்லிம் காங்கிரஸ் எம்.பிக்கள் நாடாளுமன்றப் பகிஷ்கரிப்பில்!

நாடாளுமன்ற அமர்வுகளை பகிஷ் கரிப்பதென்று ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் 9 எம்.பிக்கள் முடிவு செய்திருக்கின்றனர்.

இடைக்கால நிர்வாக சபையில் முஸ்லிம்களின் பங்கு மற்றும் வடக்கு - கிழக்கு முஸ்லிம்களுக்கு தனி யான நிர்வாக அலகு ஆகிய விட யங்கள் தொடர்பாக பிரதமரும், தமது கட்சியின் தலைவரான அமைச்சர் ஹக் கீமும் சரியான நிலைப்பாட்டை தெளிவு படுத்தும்வரை இப்பகிஷ்கரிப்பு தொட ரும் என்று அவர்கள் தெரிவித்துள்ள னர்.

திகாமடுள்ள மாவட்ட நாடாளு மன்ற உறுப்பினர்களான அன்வர் இஸ் மாயில் எச்.எம்.எம்.ஹரீஸும் நேற்று

(16ஆம் பக்கம் பார்க்க)

## புலிகள் இருவரும் பிணையில் விடுவிப்பு அதையடுத்து 6 படையினரும் விடுதலை

திருகோணமலை,ஒக்.10

அரச படைகளினால் கைதுசெய் யப்பட்ட புலிகள் இயக்க உறுப்பினர் கள் இருவரும், புலிகளால் கைது செய்யப்பட்டுத் தடுத்து வைக்கப்பட் டிருந்த ஆறுபடையினரும் நேற்று பரஸ்பரம் விடுவிக்கப்பட்டனர்.

கந்தளாய் காட்டுப்பகுதியில் வைத் துக் கடந்த மாத முற்பகுதியில் இரண்டு புலி உறுப்பினர்கள் படை யினரால் கைது செய்யப்பட்டனர். நீதிமன்ற உத்தரவின் பேரில் அவர் கள் விளக்கமறியலில் வைக்கப்பட் டனர்.

இந்நிலையில் கடந்த 25 ஆம் திகதியில் திருமலை வில்கம் விகா ரைப்பகுதியில் வைத்து 7 இராணு வத்தினரை புலிகள் கைது செய்த னர். அவர்களில் ஒருவர் பின்னர் மனி

(16ஆம் பக்கம் பார்க்க)



விடுவிக்கப்பட்ட புலி உறுப்பினர்கள் இருவரும் நீதிமன்றத்திலிருந்து வெளியேறும் காட்சி.



விடுதலைப் புலிகளால் நேற்று விடுவிக்கப்பட்ட படையினர் அறுவர்.

### பயணச்சீட்டுக் கிடைப்பதில் தாமதம்

## இன்று கட்டுநாயக்கா வரவிருந்த பாலாவின் பயணம் ஒத்திவைப்பு!

கொழும்பு,ஒக்.10

தமிழீழ விடுதலைப் புலிகள் இயக் கத்தின் அரசியல் ஆலோசகரும் தத்து வாசியருமான அன்ரன் பாலசிங்க மும் அவரது துணைவியார் அடேல் பாலசிங்கமும் 'ஸ்ரீலங்கன்' விமானம் மூலம் இன்று மாலை கட்டுநாயக்கா விமான நிலையத்தில் வந்திறங்குவ தற்கான ஏற்பாடுகள் நேற்று செய் யப்பட்டிருந்தன.

ஆனால், விமானப் பயணச்சீட் டுக் கிடைப்பதில் ஏற்பட்ட தாமதம் காரணமாக அந்தப் பயணம் இறுதி நேரத்தில் தள்ளிப்போடப்பட்டுள்ளது.

நேற்றிரவு லண்டன் நேரப்படி இரவு 10 மணிக்கு(இலங்கை நேரப் படி இன்று அதிகாலை 4 மணிக்கு) அவர்கள் இருவரும் லண்டனில் இருந்து புறப்படுவதற்கு ஏற்பாடாகியி ருந்தது. இந்தப் பயணத்துக்கான பயணச்சீட்டுக்களை நோர்வே அரசு ஏற்பாடு செய்திருந்தது. சம்பந்தப்பட் விமான சேவை நிறுவனம் லண்ட

(16ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

# களுத்துறை தமிழ் அரசியல் கைதிகளின் உண்ணாவிரதப் போராட்டம் முடிவுற்றது!

## அமைச்சர் மிலிந்த நேரில் சென்று உறுதிமொழி

கொழும்பு,ஒக்ரோபர்10

**களுத்துறைச் சிறையில் கடந்த ஒன்பது நாள்களாக சாகும்வரை உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபட்டிருந்த 131 தமிழ் அரசியல் கைதிகள் நேற்று பிற்பகல் தமது போராட்டத்தைக் கைவிட்டனர்.**

அரசின் பிரதிநிதியாகப் பொருளாதார மறுசீரமைப்பு அமைச்சர் மிலிந்த மொறகொட நேற்று முற்பகல் களுத்துறைச் சிறைச்சாலைக்குச் சென்று கைதிகளைச் சந்தித்து பேச்சு நடத்தியதன் பயனாகவே கைதிகளின் உண்ணாவிரதம் கைவிடப்பட்டது.

கைதிகளுடன் பேச்சு நடத்திய அமைச்சர் மொறகொட அடுத்த ஒருமாத காலத்துக்குள் கைதிகளின் பிரச்சினைக்கு தாம் தகுந்த பதில் ஒன்றை அளிப்பதாக உறுதிகூறினார்.

உண்ணாவிரதமிருந்த கைதிகள் இதனை ஏற்றுக் கொண்டனர்.

உண்ணாவிரதத்தை கைவிட கைதிகள் முன்வந்ததையடுத்து, அங்கு சென்றிருந்த மன்னார் ஆயர் இராயப்பு யோசப் உண்ணாவிரதிகளுக்கு பால் வழங்கி உண்ணாவிரதத்தை முடித்து வைத்தார்.

களுத்துறைச் சிறைக்கைதிகளுடன் பேச்சு நடத்துவதற்கு அமைச்சர் மிலிந்த மொறகொடவுடன் அமைச்சர்கள் ஜயலத் ஜயவர்த்தன, தி.மகேஸ்வரன் மற்றும் தமிழ்க் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் இரா.சம்பந்தன், அ.விநாயகமூர்த்தி, மாவை சேனாதிராசா, என்.ரவிராஜ், கஜேந்திரகுமார், தங்கவடிவேல், கிருஷ்ணபிள்ளை, இராஜ் குகனேஸ்வரன், சிவசக்தி ஆனந்தன், துரைரட்ணசிங்கம், மலைய மக்கள் முன்னணி எம்.பியான இராதாகிருஷ்ணன் ஆகியோரும் களுத்துறைச் சிறைக்குச் சென்றிருந்தனர்.

தடுத்து வைக்கப்பட்டிருக்கும் கைதிகளுக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்யப்பட்டிருப்பதால் உடனடியாக அவர்களை விடுதலை செய்வது சாத்தியமாகாது என்று கைதிகளிடம் விளக்கினார் அமைச்சர் மலிந்த மொறகொட.

"கைதிகளை விடுவிப்பதில் சட்டச் சிக்கல்கள் உள்ளன. சட்டமா அதிபருடன் நாம் ஆலோசனை நடத்துகின்றோம். கைதிகள் விடுதலையைத் துரிதப்படுத்துவோம். எப்படியாயினும் அடுத்த சுற்றுத் தாய்லாந்துப் பேச்சுக்களை முடித்துக்கொண்டு ஒரு மாத காலத்துக்குள் - உங்களைச் சந்திக்க வருவேன் அப்போது உங்களில் பலர் விடுதலை செய்யப்பட்டிருப்பீர்கள். இதுவிடயத்தில் பெரும் முன்னேற்றம் இருக்கும் என உறுதிகூறுகின்றேன்" - இப்படி அமைச்சர் மிலிந்த மொறகொட கைதிகளிடம் மேலும் கூறினார்.

3மணிநேரம் கைதிகளுடன் அவர் பேச்சு நடத்தினார்.

அமைச்சரின் கோரிக்கையை ஏற்று உண்ணாவிரதத்தைக் கைவிடக் கைதிகள் இணங்கினர்.

அடுத்த தடவை ஒரு மாத காலத்துக்குள் அமைச்சர் மிலிந்த மொறகொட மீண்டும் களுத்துறைச் சிறைக்கு ஓர் இணக்கமாக தீர்வுடன் வராவிட்டால் திரும்பவும் தாங்கள் உண்ணாவிரதப்போராட்டத்தில் குதிப்பார்கள் என்று கைதிகள் தெரிவித்தனர். (ம)

## மட்டு.கைதிகளில் 4 பேரின் நிலைமோசம்;

## 11பேர் தொடர்ந்து உண்ணாவிரதம் 6கைதிகள் போராட்டத்தைக் கைவிட்டனர்

செங்கலடி,ஒக்.10

மட்டக்களப்பு சிறைச்சாலையில் சாகும்வரை உண்ணாவிரதம் மேற்கொண்டிருக்கும் தமிழ் அரசியல் கைதிகளில் நால்வரின் உடல்நிலை மிகவும் மோசமடைந்திருப்பதாக சிறைச்சாலை வட்டாரங்கள் தெரிவித்தன.

உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபட்ட 17 கைதிகளில் 11 பேர் உடல் பலவீனமுற்ற நிலையில் தமது போராட்டத்தைத் தொடர்கின்றனர். இவர்களிலேயே நால்வரின் நிலைமோசமடைந்திருக்கிறது. உடல்நிலை மோசமடைந்திருக்கும் இக்கைதிகளைப் பரிசோதனை செய்த மட்டக்களப்பு போதனா வைத்தியசாலை வைத்தியர்கள், அக்கைதிகளுக்கு அவசர சிகிச்சையளிக்கவேண்டும் எனக் கூறியிருக்கின்றனர்.

தமக்கு சிகிச்சையளிக்கப் படுவதை விரும்பாத இக் கைதிகள், தமது உண்ணாவிரப் போராட்டத்தை தொடர்ந்து நடத்திவருகின்றனர்.

இதற்கிடையே, உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபட்டிருந்த ஆறு கைதிகள் தமது போராட்டத்தைக் கைவிட்டுள்ளனர். கடந்த திங்கட்கிழமை 4 கைதிகளும் செவ்வாய்க்கிழமை 2 கைதிகளும் உண்ணாவிரதத்தைக் கைவிட்டனர்.

இவர்கள் ஆறு பேரும் அம்பாறை நீதிமன்றத்திற்கு அழைத்துச்செல்லப்பட்டதை அடுத்தே அவர்களின் உண்ணாவிரதம் கைவிடப்பட்டது. (ம)

## தமிழ்க் கைதிகளுக்கு ஆதரவாக தலவாக்கலையில் பிரார்த்தனை

தலவாக்கலை,ஒக்.10

களுத்துறைச் சிறையில் தடுத்துவைக்கப்பட்டுள்ள தமிழ்க் கைதிகள் தம்மை விடுதலை செய்யக் கோரி நடத்திவரும் போராட்டத்துக்கு ஆதரவு தெரிவித்து, சமூக அபிவிருத்தி அமைச்சரும், பிரதி நீர்ப்பாசன அமைச்சருமான பெ.சந்திரசேகரன் தலைமையில் நேற்று தலவாக்கலையில் விசேட பிரார்த்தனையும், பூஜையும் நடைபெற்றன.

தலவாக்கலை ஸ்ரீ கதிரேசன் கோவில் மண்டபத்தில் நேற்று முற்பகல் 11.30மணியளவில் இந்தப் பிரார்த்தனையும் பூஜையும் நடைபெற்றன.

அமைச்சர் சந்திரசேகரனுடன் கட்சி முக்கியஸ்தர்களும், ஆதரவாளர்களும் கைதிகளின் பெற்றோர்கள் சிலரும் பிரார்த்தனையில் கலந்துகொண்டனர்.(ம)

## சிறைகளில் வாடும் எம் உறவுகளான கைதிகளின் விடுதலை குறித்து உடனடி நடவடிக்கை தேவை

### மனித நேய அமைப்புக்களின் ஒன்றியம் வலியுறுத்தல்

யாழ்ப்பாணம்,ஒக்.10

பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் கைதுசெய்யப்பட்டு எவ்வித விசாரணைகளுமின்றி தென்னிலங்கைச் சிறைகளில் தடுத்து வைக்கப்பட்டுள்ள தமிழ் அரசியல் கைதிகள் அனைவரையும் விடுதலை செய்வதற்கு அல்லது விசாரணை செய்யும் வண்ணம் அரசைக் கோருவதற்கு உடனடியாக நடவடிக்கை எடுக்கப்படவேண்டும்.

தென்னிலங்கைச் சிறைகளில் உண்ணாவிரதம் இருந்துவரும் தமிழ் அரசியல்கைதிகளின் விடுதலை தொடர்பாக யாழ். மாவட்ட மனிதநேய அமைப்புக்களின் ஒன்றியததினால் இலங்கை மனித உரிமை ஆணைக்குழுவின் தலைவருக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ள மகஜரில் மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

அம்மகஜரில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

எவ்வித விசாரணைகளுமின்றி தென்னிலங்கை சிறைகளில் தடுத்துவைக்கப்பட்டு துன்புறுத்தப்படும் தமிழ் கைதிகளின் பரிதாப நிலையைக் கண்டு அதற்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் முகமாகவும், அந்தக் கைதிகளுக்கு அனுதாபம் தெரிவிக்கும் வகையிலும் மனித உரிமை ஆணைக்குழுவின் யாழ்.அலுவலகம் முன்பாக புதன்கிழமை மதியம் 12 மணி தொடக்கம் பிற்பகல் 2 மணி வரையும் அமைதிப் போராட்டம் நடைபெற்றது.

அரசும் அரசியல்வாதிகளும் கைதிகள் விடயத்தில் எவ்வித ஆக்கபூர்வமான நடவடிக்கைகளையும் மேற்கொள்ளாத காரணத்தினால் அவர்கள் சாகும்வரை உண்ணாவிரதத்தில் ஈடுபட்டு வருகின்றனர். இது தொடர்பாக ஒன்றியம் சில விடயங்களைத் தங்கள் முன் சமர்ப்பிக்கின்றது. அவை வருமாறு:-

★ கைதுசெய்யப்பட்டவர்கள் அனைவரையும் எவ்வித விசாரணைகளுமின்றி நீண்டகாலமாகத் தடுத்து வைத்திருப்பது படுமோசமான மனித உரிமை மீறலாகும்.

★ பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ் தடுத்து வைக்கபட்டுள்ள அனைவரையும் விசாரணை செய்வதற்கு சட்டமா அதிபர் உடனடி நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும்.

★ கைதிகளை விடுவிப்பதற்கு உடனடி நடவடிக்கை எடுக்கப்படவேண்டும். அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் கைச்சாத்தான யுத்தநிறுத்த உடன்படிக்கை நாட்டில் இயல்பு நிலையை ஏற்படுத்தவேண்டும் என்பதை வலியுறுத்துகின்றது

அதன்படி நம்பிக்கையையும் நல்லெண்ணத்தையும் கட்டியெழுப்பும் நோக்கமாக தேடுதல் நடவடிக்கை மற்றும் கைதுசெய்தல் போன்ற செயற்பாடுகள் நிறுத்தப்படவேண்டும் என்பதும் உடன்படிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

ஆகவே, மனித உரிமைகள் ஆணைக்குழு இந்த நாட்டில் மனித உரிமைகளையும், ஜனநாயகத்தையும் நிலைநாட்டுவதற்கு தன்னாலான சகல முயற்சிகளையும் எடுக்கும் என்று ஒன்றியம் நம்புகிறது - என்று அதில் உள்ளது. (எ-10)

## சர்வதேச தமிழீழ மாணவர் பேரவை அலுவலகம் திறப்பு

யாழ்ப்பாணம்,ஒக்.10

சர்வதேச தமிழீழ மாணவர் பேரவை அலுவலகம் நேற்றுக் காலை சம்பிரதாயபூர்வமாக திருநெல்வேலியில் திறந்து வைக்கப்பட்டது.

விடுதலைப் புலிகளின் யாழ். மாவட்ட மகளிர் அரசியல்துறைப் பொறுப்பாளர் தமிழ்விழி பொதுச் சுடரேற்றி வைத்தவுடன், வைபவம் ஆரம்பமானது.

அதனைத் தொடர்ந்து விடுதலைப் புலிகளின் யாழ்.மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் இளம்பரிதி தமிழீழ தேசியக் கொடியையும், சர்வதேச தமிழீழ மாணவர் பேரவைக் கொடியை அதன் தலைவர் எஸ்.கஜேந்திரனும் ஏற்றிவைத்தனர்.

அதையடுத்து பல பிரமுகர்கள் மங்கள விளக்கேற்றினர். அதன் பின்னர் யாழ்பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் பொ.பாலசுந்தரம்பிள்ளை நாடாவை வெட்டி அலுவலகத்தை திறந்து வைத்தார். மேலதிக அரச அதிபர் து.வைத்திலிங்கம் அலுவலகப் பெயர்ப்பலகையைத் திறந்து வைத்தார்.

அங்கு நடந்த கூட்டத்தில் மேலதிக அரச அதிபர் து.வைத்திலிங்கம், தமிழர் ஆசியர் சங்க சிரேஷ்ட துணைப் பொதுச் செயலாளர் த.பஞ்சலிங்கம், அரச சார்பற்ற நிறுவனங்களின் இணையத் தலைவர் எஸ்.பரமநாதன், துணைவேந்தர் பேராசிரியர் பொ.பாலசுந்தரம்பிள்ளை ஆகியோர் உரையாற்றினர்.

(எ-3-8)

## யாழ்.அரச அதிபரின் கொழும்பு அலுவலகம் விரைவில் மூடப்படும்

யாழ்ப்பாணம்,ஒக்.10

கொழும்பில் இயங்கும் யாழ். அரச அதிபரின் இணைப்பு அலுவலகம் அடுத்தமாதம் 15ஆம் திகதியுடன் மூடப்படவிருக்கின்றது.

இந்த அலுவலகத்தின் செயற்பாடுகளுக்கு மாதாந்தம் 80 ஆயிரம் முதல் ஒரு லட்சம் ரூபாவரையில் செலவு ஏற்படுகின்றது என்றும் -

இந்த அலுவலகத்தை மூடுவதன் மூலம் அந்தச் செலவை வேறு செயற்பாடுகளுக்குப் பயன்படுத்த முடியும் என்றும் -

ஏ-9 பாதை திறக்கப்பட்டதால் இந்த இணைப்பு அலுவலகம் தேவையற்றது என்றும் - பலர் அபிப்பிராயம் தெரிவித்துள்ளனர். இதனால் மேற்படி அலுவலகத்தை மூடுவதற்கு முடிவு எடுக்கப்பட்டுள்ளது என்று யாழ் அரச அதிபர் செ.பத்மநாதன் தெரிவித்தார்.

(எ-3)

## போக்குவரத்துச் சபை சாரதி தாக்கப்பட்டதன் எதிரொலி

## யாழ்.பஸ் நிலையத்தில் நேற்று களேபரம் 6பேர் ஆஸ்பத்திரியில்; வேறு 6பேர் கைது!

### சேவைகள் இன்றி பயணிகள் அவதி

யாழ்ப்பாணம்,ஒக்.10

தனியார் மினிபஸ் சாரதி ஒருவருக்கும் போக்குவரத்துச் சபை பஸ் சாரதி ஒருவருக்கும் இடையில் இடம்பெற்ற தகராறினால் யாழ்.பஸ் நிலையப் பகுதியில் நேற்று பெரும் களேபரம் ஏற்பட்டது.

நேற்று முற்பகல் 11.15மணியளவில் போக்குவரத்து பஸ் சாரதி ஒருவர் பஸ் நிலையத்தில் சாரதி இருக்கையில் அமர்ந்திருக்கும் பொழுது தனியார் மினிபஸ் சாரதி ஒருவரால் தாக்கப்பட்டார் என்றும் -

இதனையடுத்து இரு தரப்புக்கும் இடையில் கடுமையான மோதல் வெடித்ததாகவும் - கூறப்பட்டது.

இதன்போது மினிபஸ் சாரதிகளுக்கு ஆதரவாக அவர்களுடன் ஓட்டோ சாரதிகளும் இணைந்து [illegible]

இந்தத் தாக்குதல் சம்பவத்தை அடுத்து போக்குவரத்துச் சபையின் பஸ் சாரதிகள், நடத்துநர்கள் திடீரென வேலை [illegible] குதித்தனர்.

இதனால் பாடசாலை மாணவர்கள் மற்றும் பொதுமக்கள் அரச ஊழியர்கள் ஆகியோர் போக்குவரத்தில் பாரிய நெருக்கடிகளை எதிர்நோக்கியதை அவதானிக்க முடிந்தது.

தனியார் மினிபஸ்களில் சனக் கூட்டம் நிரம்பி வழிந்ததுடன், பலர் தூர இடங்களுக்கு நடந்து சென்றதையும் காணமுடிந்தது.

சம்பவம் தொடர்பாக கிடைத்த முறைப்பாட்டை அடுத்து யாழ்.பொலீஸார் பஸ் நிலையப் பகுதிக்கு விரைந்து விசாரணைகளை மேற்கொண்டனர். எனினும் - இருதரப்பினருக்கும் இடையில் இணக்கப்பாட்டை ஏற்படுத்தி பஸ் சேவையை மீண்டும் ஆரம்பிக்கப் பொலீஸார் எடுத்த நடவடிக்கைகள் அனைத்தும் பயனளிக்கவில்லை.

பிற்பகல் 4மணியளவில் பஸ்கள் அனைத்தும் டிப்போவுக்கு கொண்டு செல்லப்பட்டன.

சம்பவம் குறித்து விடுதலைப் புலிகளின் (15ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ்க்கைதிகளுக்கு குடாநாட்டின் ஆதரவுக் குரல்!



யாழ்.கஸ்தூரியார் வீதியின் குறுக்கே வர்த்தக நிறுவனங்களின் பணியாளர்கள்....




அகதிகள் புனர்வாழ்வு நிறுவன ஊழியர்களும் 'முயற்சி' தொழிற்பயிற்சி நிலைய மாணவர்களும்....



பிரதான வீதியில் யாழ்.சிறைச்சாலையை அண்டிய பகுதியில் ஒருமணிநேரம் தரித்து நின்ற வாகனங்கள்...



பிரதான வீதியில் பெரியகடைப் பகுதியில் வீதியின் இரு மருங்கிலும் நிற்கும் பாடசாலை மாணவிகள்...



யாழ்.செயலக ஊழியர்கள்....



யாழ்.பிரதேச செயலக ஊழியர்கள்...




மாநகர சபை ஊழியர்கள்...



யாழ்.மத்திய கல்லூரி ஆசிரியர்கள்...



யாழ்.வலயக் கல்வித் திணைக்கள ஊழியர்கள்...








மனித உரிமைகள் ஆணைக்குழுவின் முன் யாழ்ப்பாணத்தில் உள்ள பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள் மற்றும் மதகுருமார் ஆகியோர் போராட்டத்தில் ஈடுபட்டபோது...



படங்கள் : தேவராஜன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




மகள் பெரியவளாகி விட்டாள். பெற்றோர் மனதில் சொல்லொன்னா சந்தோஷம். ஆனால் சந்தோஷத்தைக் கொண்டாட கையில் பணம் இல்லை. கவலையை விடுங்கள். உதவிக்கு உள்ளது "ரண் சஹன". ரண் சஹன என்பது, தேசிய சேமிப்பு வங்கியின் பொன் ஆபரணங்களுக்குப் பணம் வழங்கும் சேவையாகும்.

- ஆபரணங்களின் முழுப்பெறுமதியின் 75% வரை பணம்
- குறைந்த வட்டி
- விஞ்ஞான முறைக்கமைந்த பரிசீலனை
- துரித சேவை
- ஆபரணங்களை மீட்பது மிகவும் எளிது

ரண் சஹன சேவையை கீழே உள்ள கிளைகளில் பெற்றுக்கொள்ளலாம்

NSB
ரண் சஹன

**தேசிய சேமிப்பு வங்கியிடமிருந்து பொன் ஆபரணங்களுக்குப் பணம் வழங்கும் சேவை**

பிரதான காரியாலயக் கிளை, அனுராதபுரம், அக்குரஸ்ஸ, அம்பலாங்கொடை, அளுத்கம, ஜாஎல, யாழ்ப்பாணம், நகரக் கிளை, நிக்கவரட்டிய, நீர்கொழும்பு, நிட்டம்புவ, நுவரேலியா, ருவண்வல்ல, காலி, கம்பளை, கட்டுநாயக்க, கடவத்தை, கிரிபத்கொடை, குளியாப்பிட்டி, குருநாகல், கல்கிஸ்ஸை, கண்டி, கொள்ளுப்பிட்டி 2வது கிளை, கேகாலை, கொச்சிக்கடை, வத்தளை, வெள்ளவத்தை, வென்னப்புவ, வெலிமடை, பாலியகொடை, பதுளை, பம்பலப்பிட்டி, பிலியந்தலை, பருத்தித்துறை, புறக்கோட்டை, பண்டாரவளை, பொரல்ல, பேருவளை, தம்புள்ளை,திருகோணமலை, தெஹிவளை, நுகேகொடை, மஹரபாகே,மாத்தளை, மாத்தறை, ஹலாவத்தை, மகரகம, ஹோமகம, சுன்னாகம், சாவகச்சேரி.

Masters DDB

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்

# இரட்டை வழிகாட்டலில் அரசு!

தமிழ்க் கைதிகளின் சாகும்வரையான உண்ணா விரதப் போராட்டம் தொடர்பாக நேற்று நாடாளுமன்றக் கட்டடத்தில் பிரதமர் தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் சில முடிவுகள் எடுக்கப்பட்டன.

முக்கிய தாக்குதல் சம்பவங்கள் சிலவற்றுடன் தொடர்புடைய நபர்கள் விடுவிக்கப்படமாட்டார்கள். ஒவ்வொரு கைதி சம்பந்தமான வழக்கும் அதன் தன்மையும் தனித்தனியாக ஆராயப்பட்டு அதன் அடிப்படையிலேயே நடவடிக்கை எடுக்கப்படும் - இதுதான் அந்த முடிவின் சாரம்சம்.

இந்த முடிவை நோக்கும்போது இந்த அரசு ஒரு தலைமையின் வழிகாட்டலில் நடக்கின்றதா? அல்லது பல திசைகளிலும் பிரிந்து நின்று மாடுகள் இழுக்க, நடுவில் சிக்கித் தத்தளிக்கும் வண்டியின் நிலையில் அல்லாடுகின்றதா? - என்ற சந்தேகம் இயல்பாகவே எழுகின்றது.

சரியோ, பிழையோ இந்தக் கைதிகளில் பெரும்பாலானோர் விடுதலைப் புலிகளுக்கு உதவியவர்கள் அல்லது விடுதலைப் புலிகள் என்று குற்றம் சுமத்தப்பட்டவர்கள்.

சந்தேக நபர்களை விடுவிக்கமுடியாது என்று இப்போது அரசுத்தரப்புப் பட்டியலிடும் வழக்குகளில் பல, பல்வேறு தாக்குதல் சம்பவங்களுடனும் தொடர்புடையவை.

இந்தத் தாக்குதல்களை நடத்தியவர்கள் அல்லது அவற்றோடு நேரடியாகவோ, மறைமுகமாகவோ தொடர்புடையவர்கள்தான் இப்போது தடுத்து வைக்கப்பட்டிருக்கும் கைதிகள் என்பதை ஒரு பேச்சுக்கு ஏற்றுக்கொள்வோம்.

சரி, இந்தத் தாக்குதலை நடத்தியவர்கள் இவர்கள் என்றால், இதற்கு இவர்களை வழிகாட்டியவர்கள், தூண்டியவர்கள், உதவியவர்கள் யார்? விடுதலைப் புலிகள் இயக்கமும் அதன் தலைமையும்தானே?

சரியோ, தப்போ இவர்கள்மீது இந்தச் சம்பவங்களுக்காகக் குற்றஞ்சுமத்தும்போது அந்தக் குற்றச்சாட்டு புலிகளின் தலைமைமீதும் புலிகள் இயக்கத்தின்மீதும் விழும்தானே?

புலிகள் இத்தாக்குதல்களை நடத்தியது சரியா, தப்பா, குற்றமா, குற்றமில்லையா என்பதெல்லாம் வேறுவிடயங்கள்.

அவற்றை எல்லாம் மறந்துவிட்டு - ஒதுக்கிவிட்டு - புதிய யுகம் ஒன்றைப் படைக்கும் முயற்சியாகத்தானே அரசு புலிகளுடன் சமாதானப் பேச்சுக்கு முன்வந்தது? புரிந்துணர்வு உடன்படிக்கை செய்தது?

சரி, கைதிகளில் ஒரு பகுதியினரைத் தொடர்ந்து தடுத்துவைத்துக் கொண்டு, அவர்களுக்கு எதிராக அரசு வழக்குகளைத் தொடரப்போகின்றது என்று வைத்துக்கொள்வோம்.

வழக்கில் சம்பந்தப்பட்ட கைதிமீது குற்றம் சுமத்தப்படும்போது, அந்தக் கைதி யாருக்காக அந்தச் செயலைச் செய்தாரோ அவர்மீதும் அல்லது அந்த அமைப்புமீதும்கூடக் குற்றஞ்சுமத்தப்படுவது தவிர்க்கமுடியாததாகிவிடும்.

அப்படி ஒருபுறம் கொழும்பில் நீதிமன்றத்தில் ஓர் அமைப்பு மீதும் அதன் தலைமை மீதும் குற்றஞ்சுமத்தி விசாரணையை அரசின் நீதித்துறை நடத்த -

மறுபுறத்தில் அரசின் தலைமைத்துவம் அதே இயக்கத்தின் தலைமையோடு வன்னியிலும் தாய்லாந்திலும் பிரிட்டனிலும் கைகுலுக்கி சமரசம் பேசி கூடிக்குலாவப் போகின்றதா?

இது இனப்பிரச்சினை தீர்வு விடயத்தில் அரசு ஒரு தெளிவான நிலைப்பாட்டை - கொள்கையை - இன்னும் வரித்துக் கொள்ளவில்லை என்பதையே காட்டுகின்றது.

குற்றம் புரிந்தவர்கள் என்று தாம் கருதுவோருக்கு எதிராக அரசின் ஒருபகுதி வழக்குத் தொடர்ந்து, அவர்களைத் தடுத்துவைத்து, விசாரணை நடத்துகின்றது. அதேவேளை, அதேசம்பவங்களுக்குக் காரணமானவர்கள் என்று கருதப்படக்கூடிய அவர்களின் தலைமைத்துவத்துடன் அரசின் தலைமைத்துவம் சமரசம் பேணுகின்றது.

அவ்வாறு தடுத்துவைக்கப்பட்டிருப்போரை விடுவிக்கும்படி அரசு மீது அழுத்தம் கொடுக்கப்பட்டாலும் - அரசின் தலைமை அதில் உள்ள நியாயத்தை ஏற்றுக்கொண்டாலும் - அவர்களை விடுவிக்கும்படி உத்தரவிடவோ, அதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளவோ இயலாத - கையாலாகாத்தனத்தில் அரசின் தலைமை இருப்பது அப்பட்டமாகத் தெரிகின்றது.

அரசுத்தரப்பு இரட்டை வழிகாட்டலில் - இரட்டைத் தலைமையின்கீழ் - அல்லாடுகின்றது என்பதை உறுதிப்படுத்த இந்த விடயங்களே போதும்.




சர்வதேச தமிழீழ மாணவர் பேரவையின் ஆரம்ப வைபவம் நேற்றுக் காலை திருநெல்வேலியில் இடம்பெற்றது. இந்நிகழ்வின்போது, மகளிர் பிரிவுப் பொறுப்பாளர் தமிழினி பொதுச்சுடரை ஏற்றுவதையும் தமிழீழத் தேசியக் கொடியை விடுதலைப் புலிகளின் யாழ்.மாவட்டப் பொறுப்பாளர் இளம்பரிதி ஏற்றுவதையும் படங்களில் காணலாம். *(படங்கள்: தேவராஜன்)*

# சர்வதேச தமிழீழ மாணவர் பேரவை கல்வி வளர்ச்சியில் பெரும்பங்காற்றும்!

## சு.ப.தமிழ்ச்செல்வன் வாழ்த்து

யாழ்ப்பாணம்,ஒக்.10

எமது மாணவர்கள் போரினாலும் திட்டமிட்ட புறக்கணிப்புகளாலும் பல தலைமுறைகள் பின்தங்கிய நிலையிலேயே தமது கல்வியைத் தொடர்ந்து வருகின்றனர். இவ்வாறான சூழலில் சர்வதேச தமிழீழ மாணவர் பேரவை தமிழீழ மாணவர்களின் கல்வி வளர்ச்சியில் பெரும்பங்கினை ஆற்றமுடியும்.

விடுதலைப் புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வன் மேற்கண்டவாறு தெரிவித்தார். நேற்று இடம்பெற்ற சர்வதேச தமிழீழ மாணவர் பேரவை அலுவலகத் திறப்பு விழாவுக்கு அனுப்பிய வாழ்த்துச் செய்தியிலேயே இவ்வாறு அவர் தெரிவித்தார்.

யாழ்.மாவட்ட அரசியல் பொறுப்பாளர் இளம்பரிதி இந்தச் செய்தியை வாசித்தார்.

அச்செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

இன்று எமது இளம் தலைமுறையொன்று புலம்பெயர்ந்து சர்வதேசமெங்கும் பரவி அறிவும் பல்துறை ஆற்றலும் கொண்ட ஒரு தலைமுறையாக வளர்ந்து வருகிறது. இவர்கள் அந்நாடுகளின் பல்கலைக்கழகங்களிலும் உயர்கல்வி அமைப்புக்களிலும் துறைசார் கற்கைநெறிகளைப் பயின்றுவருகின்றனர். அத்துறைகளில் அந்நாட்டு மாணவர்களையும்விட முன்னணியிலும் நிற்கின்றனர். இந்நிலையில் தமக்கென்ற தனித்துவமான கல்விப் பாரம்பரியத்தைக் கொண்டு விளங்கும் தமிழீழ மாணவர்களும் சர்வதேச தமிழீழ மாணவர்களும் இணைந்து சர்வதேச தமிழீழ மாணவர் பேரவை என்ற அமைப்பாகத் தோற்றம்பெற்றிருப்பதையிட்டு எனது வாழ்த்துக்களைத் தெரிவிப்பதில் பெரு உவகையும் உற்சாகமும் அடைகின்றேன்.

சர்வதேச தமிழீழ மாணவர் பேரவை தமிழீழ மாணவர்களின் கல்வி வளர்ச்சியில் பெரும் பங்கினை ஆற்றமுடியும். சர்வதேச பல்கலைக்கழகங்களில் பயிலும் எமது தமிழீழ மாணவர்கள் தாயகத்தில் தமது சக மாணவ சமூகத்துடன் தத்தமது துறைசார் கல்வியினைப் பகிர்ந்துகொள்வதோடு அவர்களின் முன்னேற்றத்திற்கும் பெரும் துணையாக இருக்க முடியும். இவ்வமைப்புமூலம் பாடசாலை மட்டங்களிலிருந்து பல்கலைக்கழகம்வரை கல்வி தொடர்பாக எமது மாணவர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளையும் தீர்ப்பதற்கான வாய்ப்பாக இது அமைந்துள்ளது. அத்துடன், எமது சமூக, கலாசார, பண்பாட்டு விழுமியங்களை சர்வதேசத்தில் எமது மாணவர்கள் மத்தியில் பேணி வளர்ப்பதோடு தேசப்பற்றுக் கொண்ட ஓர் இளம் தலைமுறையையும் வளர்த்தெடுப்பதற்கான வாய்ப்பினையும் இது ஏற்படுத்துகின்றது.

இன்றைய காலகட்டத்தில் எமது மாணவர்கள் தகவல் தொழில்நுட்பத்தின் பலாபலன்களையும் நவீன அறிவியல் முன்னேற்றங்களையும் உள்வாங்கி முன்னேற்றமடைந்த அறிவியற் சமூகமாக பரிணமிப்பதற்கு தமிழீழ மாணவர்களும் சர்வதேச தமிழீழ மாணவர்களும் இணைந்து இவ்வாறான ஒரு சர்வதேச மாணவர் அமைப்பு மிகவும் அவசியமாகின்றது. எமது சர்வதேச தமிழீழ மாணவர்களும், தமிழீழ மாணவர்களும் தேசப்பற்றும் தமிழ்த் தேசிய உணர்வும் கொண்டவர்களாக வளர்வதற்கான ஓர் இடைப்பாலமாகவும், சர்வதேச தமிழீழ மாணவர் பேரவை அமைந்துள்ளது. அறிவியல், தகவல் தொழில்நுட்பம், மருத்துவம், பொறியியல், அரசியல் சர்வதேச உறவுகள் எனப் பல்துறை சார்ந்த நிபுணத்துவம் கொண்டவர்களாக - எமது தமிழீழத் தேசத்தின் தேச நிர்மாணிகளாக - உலகளாவிய ரீதியில் எமது இளம் தலைமுறையை வளர்த்தெடுக்க வேண்டியது எமது தலையாய கடமை. ஆயிரக்கணக்கான போராளிகளினதும் மக்களினதும் அர்ப்பணிப்புகளாலும் அளப்பரிய தியாகங்களாலும் கட்டியெழுப்பப்படும் எமது தேசத்தின் எதிர்கால தலைமுறை தேசப்பற்றும் அர்ப்பணிப்புணர்வும் நேர்மையும் தேசநலனில் அக்கறையும் கொண்ட ஒரு முற்போக்கான தலைமுறையாக வளரவேண்டும்.

இவ்வாறானதொரு பின்புலத்தில் சர்வதேச தமிழீழ மாணவர் பேரவை தோற்றுவிக்கப்பட்டு, அதன் தலைமையகம் யாழ். மண்ணில் திறந்து வைக்கப்படுவது இன்றைய எமது காலத்தின் தேவைக்கு இன்றியமையாததாகின்றது.

இவ்வமைப்பு விழுதெறிந்து பெருவிருட்சமாகி சர்வதேசத்திலும் தாயகத்திலும் வாழும் எமது இளம் தலைமுறையை ஒன்றுபடுத்தி பலதுறைகளிலும் நிபுணத்துவம் கொண்ட தேசப்பற்றுமிக்க ஓர் இளம் தலைமுறையின் உருவாக்கத்திற்கு வழிசமைக்க எனது வாழ்த்துக்களைத் தெரிவிப்பதில் பெருமகிழ்ச்சியடைகின்றேன் - என்றுள்ளது. (ஓ-3)

# 18 வயதுக்குக் குறைந்தவர்களுக்கு பதிவுத் திருமணம் செய்யக்கூடாது

## பதிவாளர் நாயகம் வலியுறுத்து

வலி.வடக்கு,ஒக்.10

18 வயதுக்குக் குறைந்தவர்களுக்கு பதிவுத் திருமணம் செய்து வைப்பது சட்டப்படி குற்றமான செயலாகும் என பதிவாளர் நாயகம் வலியுறுத்தியுள்ளார். 18 வயதுக்குக் குறைந்தவர்கள் பதிவுத் திருமணம் செய்வது அதிகரித்து வருவதாகக் கிடைத்த முறைப்பாடுகளை அடுத்தே அவர் இதனை வலியுறுத்தியுள்ளார்.

கடந்த காலங்களில் 18 வயதிற்குக் குறைந்த பலருக்கும் பதிவுத் திருமணங்கள் பதிவாளர்களினால் நிறைவேற்றி வைக்கப்பட்டிருப்பதாகவும் -

தற்போது அத்தகைய பதிவாலர்கள் மீது ஒழுகாற்று நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும் - அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

இத்தகைய திருமணப் பதிவுகளை மேற்கொள்ளக்கூடாதென 18 வயதுக்குக் குறைவானவர்களுக்கு அறிவுறுத்தும்படியும் -

பதிவாளர்களுக்கு சந்தேகம் ஏற்படும் சந்தர்ப்பத்தில் உரிய நபர்களின் அடையாள அட்டைகள் மற்றும் பிறப்புச் சான்றிதழ்களைப் பெற்று வயதை உறுதிப்படுத்திக்கொள்ளும்படியும் - கோரப்பட்டுள்ளது.

மேற்படி விவரம் அடங்கிய சுற்று நிருபம் மாவட்ட செயலகங்கள், பிரதேச செயலகங்கள், பதிவாளர் அலுவலகங்கள் உட்பட பல்வேறு திணைக்களங்களுக்கும் அனுப்பிவைக்கப்பட்டுள்ளது. (ஓ-86)

## ஏ-9 பாதை திறந்த பின்னர்

# மீளக் குடியமர்ந்தோருக்கு 15ஆயிரம் ரூபா வழங்க முடிவு!

வலிகாமம் மேற்கு,ஒக்.10

ஏ-9 தரைவழிப் பாதை திறக்கப்பட்ட பின்னர் வெளியிடங்களில் இருந்து வந்து யாழ்.மாவட்டத்தில் மீளக்குடியமர்ந்த குடும்பங்களுக்கு 15ஆயிரம் ரூபா நிவாரண உதவி வழங்குவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

மீளக்குடியமர்ந்த குடும்பங்களுக்கு இரண்டாயிரம் ரூபா வழங்குவதற்கு சகல பிரதேச செயலகங்களினாலும் முன்னர் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. யாழ்.செயலக புனர்வாழ்வு, புனரமைப்புக் கிளைக்கு அந்தப் பதிவுகள் அனுப்பி வைக்கப்பட்டன.

இந்த நிலையில் தற்போது இந்தக் குடும்பங்களுக்கு 15 ஆயிரம் ரூபா வழங்குவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக யாழ்.செயலக உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்தார். இதன் காரணமாக இரண்டாயிரம் ரூபா கொடுப்பனவு வழங்கும் நடவடிக்கை நிறுத்தி வைக்கப்பட்டுள்ளதாகக் கூறப்படு கிறது. (ஓ-175)

## நாளை

புரட்டாதி 25
வெள்ளிக்கிழமை
(11.10.2002)
திதி : பஞ்சமி
காலை 7.07 வரை.
ஷஷ்டி
வைகறை 5.42 வரை.
நட்சத்திரம்: கேட்டை
மலை 6.51 வரை.
ஷஷ்டி விரதம்
[illegible] : 6.02 - 7.32
ராகுகாலம்: 10.32 - 12.02
(பழைய நேரப்படி)

## உதயவாக்கு

பொறுமை கசக்கும் மூலிகைதான். ஆனால் அது வழங்குவதோ இனிக்கும் பழங்களை.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிளைக்குழுத் தெரிவுக்கான அறி

# தெல்லிப்பழை பல நோக்குக் கூட்டுறவுச் சங்க

யாழ்ப்பாணம் மாவட்ட கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளராகிய நான் 1997.02.17ஆம் திகதி 963/1 இலக்கம் கொண்ட அதிவிசேட வர்த்தமானி அறிவித்த மேற்படி சங்கத்தின் துணைவிதி 23இன் ஏற்பாட்டின்படி வடக்கு - கிழக்கு மாகாண கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளரும், கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளரு இலக்கங்கொண்ட அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டதுமான "வடக்கு - கிழக்கு மாகாண எல்லைக்கு உட்பட்ட பகுதியில் இயங்கிவரும் வரையறுக்கப்பட்ட பல தெரிவுசெய்வதற்கான விதிகள்"இன் ஏற்பாடுகளுக்கு அமைய தெல்லிப்பழை பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்தில் எல்லா கிளைகளுக்குமான கிளைக்குழுக்களைத் தெ நடத்துவதற்காக மேற்படி விதிகளின் பிரிவு 6இன்படி அக்கூட்டங்கள் நடைபெறுவதற்கான கால அட்டவணைகளை பின்வருமாறு என்னால் நிர்ணயிக்கப்பட்டுள்ளது அழைப்பதற்கும், அதன் தவிசாளராகக் கடமையாற்றுவதற்கும் பின்வரும் அலுவலர்களுக்கு அதிகாரமளித்து நியமித்துள்ளேன் என்பதை இத்தால் அறிவிக்கின்றேன்.

இந்த அறிவித்தல் தொடர்பாக ஒவ்வொரு கிளையின் பொதுச்சபைக்கு வந்து வாக்களிக்கத் தகுதியுள்ள ஒவ்வொரு அங்கத்தவர்களுக்கும் அறிவித்தல் அனு இடப்பெயர்வு காரணமாக வேறு இடங்களில் வசிப்பதால் இந்த அறிவித்தலை தமக்கு வழங்கப்பட்ட தனித்தனி அறிவித்தலாக ஏற்றுக்கொண்டு சம்பந்தப்பட்ட த பொதுச்சபைக் கூட்டத்திற்குச் சமுகமளிக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

| 19.10.2002ஆம் திகதி மு.ப. 9 மணி | 19.10.2002ஆம் திகதி பி.ப. 1 மணி | கிளைப் பொதுச்சபைக் கூட்டத்தின் தவிசாளர் பெயர் | கிளைப் பொது இடங்கள் |
|---|---|---|---|
| கிளை 01 தெல்லிப்பழை | கிளை 09 கீரிமலை | திரு.செ.திருச்செல்வம் | தெல்லிப்பழை ம.ே |
| கிளை 12 மாவிட்டபுரம் | கிளை 13 அர்சடி வீதி, மாவிட்டபுரம் | திரு.ஆர்.புவன்ராஜ் | தெல்லிப்பழை ப.ே |
| கிளை 14 கொல்லங்கலட்டி | கிளை 41 கிரானை | திரு.தா.கணபதிப்பிள்ளை | தெல்லிப்பழை ப.ே |
| கிளை 02 துர்க்காபுரம் | | திரு.பி.ஸ்ரீகுமார் | கிளை 02இன் கி |
| கிளை 03 வவுணாவத்தை | | திரு.பி.மகேஸ்வரன் | கிளை 03இன் கி |
| கிளை 04 விராங்கொடை | கிளை 06 விழிசிட்டி | திருமதி கே.இந்திராணி | யா/மல்லாகம் மக |
| கிளை 28 பளை வீமன்காமம் | கிளை 29 வீமன்காமம் | திரு.பி.மோகன் | யா/மல்லாகம் மக |
| கிளை 30 தையிட்டி | கிளை 31 ஊறணி | திரு.என்.ராஜா | யா/மல்லாகம் மக |
| கிளை 35 கலட்டி | | திரு.எஸ்.செந்தூரன் | யா/மல்லாகம் மக |
| கிளை 05 பன்னாலை | | திரு.பி.தெட்சணாமூர்த்தி | கிளை 05இன் கி |
| கிளை 07 கருகம்பனை | கிளை 08 இளவாலை | திரு.வி.கைலைநாதன் | யா/இளவாலை ெ |
| கிளை 36 வசந்தபுரம் | கிளை 44 மயிலங்கூடல் | திரு.க.குகதாசன் | யா/இளவாலை ெ |
| கிளை 10 காங்கேசன்துறை (சீமெந்து தொழிற்சாலையடி) | கிளை 11 காங்கேசன்துறை (நடேஸ்வரா கல்லூரியடி) | திருமதி எஸ்.அழகேந்திரராசா | யா/இராமநாதன் |
| கிளை 15 வறுத்தலைவிளான் | கிளை 16 கட்டுவன் | திரு.என்.பத்மசோதி | யா/இராமநாதன் |
| கிளை 17 குரும்பசிட்டி | கிளை 24 மயிலிட்டி கரை | திரு.ஐ.நாகேஸ்வரன் | யா/இராமநாதன் |
| கிளை 25 மயிலிட்டி கிழக்கு | | திரு.கே.குமரகுருலிங்கம் | யா/இராமநாதன் |
| கிளை 27 காங்கேசன்துறை | கிளை 26 மயிலிட்டி வடக்கு | திரு.வி.கே.அருந்தவநாதன் | யா/இராமநாதன் |
| கிளை 33 மடத்தடி | கிளை 42 திருப்பூர் மயிலிட்டி | திருமதி வ.யோகேஸ்வரி | யா/இராமநாதன் |
| கிளை 38 மாங்கொல்லை | | திருமதி கே.சித்திரகுமாரி | யா/இராமநாதன் |
| கிளை 19 ஒட்டகப்புலம் | கிளை 22 பலாலி மத்தி | திரு.எஸ்.செல்வரட்ணம் | யா/ஆவரங்கால் |
| கிளை 20 வசாவிளான் மத்தி | கிளை 21 பலாலி மேற்கு | திரு.கே.சின்னராசா | யா/ஆவரங்கால் |
| கிளை 23 பலாலி கிழக்கு | | திரு.ஆ.சாந்தமூர்த்தி | யா/ஆவரங்கால் |
| கிளை 18 வசாவிளான் | | திரு.ஏ.நாகலிங்கம் | கிளைக் கட்டடம் |
| கிளை 43 சீந்திப்பந்தல் | | திரு.கே.நல்லதம்பி | கிளை 43இன் கி |
| கிளை 37 ஊரங்குணை | | திரு.எம்.எஸ்.சண்முகநாதன் | உரும்பிராய் நிவா |
| கிளை 39 குட்டியப்புலம் | | திரு.இ.விஜயமோகனராஜா | குட்டியப்புலம் கி |
| கிளை 34 ஆஸ்பத்திரியடி, தெல்லிப்பழை | | செல்வி ப.பத்மலோசினி | கிளை 34இன் கி |

2002.10.09

**குறிப்பு 1 கிளைக் குழுத் தெரிவு தொடர்பான முக்கிய விதிகள்:**

☆ கிளைப் பொதுச்சபைக் கூட்டத்திற்கான நிறைவெண் கூட்டத்திற்கு சமுகமளித்து வாக்களிக்கத் தகுதியுள்ள உறுப்பினர்களில் நான்கிலொரு (1/4) பங்கின

☆ தவிசாளர் குறித்த கிளையின் பொதுச்சபையில் இருந்து கிளைக்குழுவிற்கான ஒன்பது (09) உறுப்பினர்களைத் தெரிவுசெய்யும்படி கிளையின் பொதுச்சபை 18 வயதுக்கும் 35 வயதுக்கும் இடைப்பட்டவர்களாக இருத்தல்வேண்டும்.

☆ சபையிலிருந்து கிடைக்கப்பெறும் முன்மொழிவுகள் 9 பேருக்கு மேற்படின் தவிசாளர் இரகசிய வாக்கெடுப்பின்மூலம் தெரிவினை மேற்கொள்வார்.

☆ இரண்டு வேட்பாளருக்கு அல்லது இரண்டிற்கு மேற்பட்ட வேட்பாளர்களுக்கிடையே சம வாக்குகள் கிடைக்கப்பெறும் பட்சத்து திருவுளச் சீட்டுமூலம் தெரிவு

☆ தெரிவுசெய்யப்பட்டவர்கள் பெயர்களை தவிசாளர் கிளையின் பொதுச்சபையில் பிரகடனப்படுத்துவதுடன், சங்கச் செயலாளருக்கும் எனக்கும் எழுத்து மூலம்

## கிளைக் குழு உறுப்பினராகத் தெரிவுசெய்யப்படத் தகுதி அற்றவர்கள்:

1. கிளையினது வாக்காளர் பட்டியலில் பெயர் காணப்படாத ஒருவர்.
2. 18 வயதிற்கு கீழ்பட்டவர்கள்.
3. உடன் முன்சென்ற 3ஆண்டுகளுள் தீய ஒழுக்கச் செயலுக்காக குற்றவாளியெனத் தீர்ப்பளிக்கப்பட்டவர் அல்லது மூன்று மாதங்களுக்கு மேற்பட்ட சிறைத் தண்ட
4. கடனைத் தீர்க்க வகையற்றவர் எனப் பிரகடனம் செய்யப்பட்டவர் அல்லது அவ்வாறு ஒரு வழக்கில் தீர்ப்பளிக்கப்பட்டவர்.
5. இச்சங்கத்திற்கு அல்லது பதிவுசெய்யப்பட்ட வேறு எக்கூட்டுறவுச் சங்கத்திற்கும் எக்கடனையாவது திருப்பிக்கொடுக்காதவர் அல்லது வேறு எந்த விதத்திலும் த
6. இச்சங்கத்தில் வியாபாரியெனப் பதிவுசெய்யப்பட்டவர் அல்லது சங்கத்தின் நலவுரிமைகளுக்கு முரண்பட்ட வகையில் ஒரு வியாபாரத்தை நடத்துபவர்.
7. சங்கத்தில் ஆதாயங்கருதி ஏதாவது ஒரு பகுதியை அல்லது இடத்தினை வகிப்பவர் அல்லது ஆணையாளரின் முன் அனுமதி இன்றி ஏதாவது தகைமைக் கொன
8. இச்சங்கத்தில் அல்லது இச்சங்க உறுப்புரிமை வகிக்கும் வேறு எந்தச் சங்கத்திலும் ஊதியம் பெறும் ஊழியராயிருப்பவர்.
9. ஓர் உறுப்பினர் என்ற முறையில் தவிர மற்றப்படி சங்கத்துடன் செய்யப்பட்டிருக்கும் எந்த ஒப்பந்தத்திலோ அல்லது சங்கத்தினால் செய்யப்படும் எந்த விற்பனையி தப்பட்டு அதனால் செய்யப்படவிருக்கும் அல்லது பேச்சளவில் இருக்கும் ஏதாவது ஒப்பந்தத்தில் அல்லது கொடுக்கல் வாங்கல்களில் மறைமுகமாகவோ நேர்மு
10. கூட்டுறவுச் சட்டத்தின்படி இயற்றப்பட்ட விதிகளுக்கு அமைய தமது பதவியை அல்லது வேலையை கடந்த 5 ஆண்டுகளில் விட்டகலவேண்டிய நிலைக்கு ஆளான
11. நாடாளுமன்ற உறுப்பினர், மாகாணசபை உறுப்பினர்கள், மாநகரசபை உறுப்பினர்கள், பிரதேச சபை உறுப்பினர்கள்.
12. அங்கத்தவராகச் சேர்ந்து ரூபா 100.00ஐப் பங்குப் பணமாகச் செலுத்தி முடிக்காதவரும் அங்கத்தவராகச் சேர்ந்து ஒரு வருடம் பூர்த்தியாகாதவருமான ஒருவ
13. இயக்குநர் சபையினால் அல்லது கிளை நிர்வாக சபையினால் உறுப்பினராகக் கருத்தில் எடுத்துக்கொள்ளப்படாத அல்லது மேன்முறையீடு இயக்குநர் சபையினால் கீழ் ஆணையாளரால் மீளாய்வுமூலம் அல்லது இவ்விதியின் 2:4 அல்லது 2:6இன் கீழ் அல்லது வாக்காளர் அட்டவணையிற் பெயர் சேர்க்கப்படாத ஒருவர்.

[சங்கத்தின் துணைவிதிப் பிரிவு இல.22(1)]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அடுத்துவரும் 45 நாள்களில் ஆப்கானில் நிலைமை மாறும்!

## தலிபான் தலைவர் முல்லா முஹமட் உறுதி

இஸ்லாமாபாத்,ஒக்.10

அடுத்த 45 நாள்களில் ஆப்கானிஸ்தானில் நிலைமை தலைகீழாக மாறும் என்று தலிபான் தலைவர் முல்லா முகமட் ஒமர் தெரிவித்துள்ளார்.

முல்லா முகமட் ஒமர் செயற்கைக்கோள் தொலைபேசிமூலம் முன்னாள் துணைப் பிரதமர் மௌலவி அப்துல் கபீருடன் தொடர்புகொண்டு பேசியுள்ளார். அதை அமெரிக்க மற்றும் ஆப்கான் புலனாய்வு அதிகாரிகள் இடைமறித்து ஒட்டுக்கேட்டனர்.

கபீருடன் பேசுகையில் ஒமர் கூறியுள்ளதாவது:-


'ஒசாமா பின்லேடன் இன்னும் உயிருடன் இருக்கிறார். அவரது வலது கரம் போல் எகிப்தின் அய்மான் அல் ஜவாஹ்றி செயல்பட்டு வருகிறார். இருவரும் ஆப்கானிஸ்தானில் வாழ்ந்து வருகின்றனர். மேலும் பல தாக்குதலகளை நடத்துவது குறித்து அவர்கள் திட்டமிட்டு வருகின்றனர்.

'பின்லேடனுக்குத் தேவையான பணம் பல வழிகளில் கிடைத்து வருகிறது. அவரின் ஆதரவாளர்கள் பலரும் பல வழிகளில் உதவ முன் வந்துள்ளனர்.

'ஆப்கானிஸ்தானில் இப்போது உள்ள நிலைமை நீண்டகாலம் நீடிக்காது. விரைவில் அங்கு நிலைமை மாறும். நீங்கள் அது குறித்து வெளிப்படையாக எதுவும் பேசவேண்டாம்' என்று குறிப்பிட்டுள்ளார்.

ஒமர், கபீர் இடையே நடந்த உரையாடலின் சுருக்கத்தை ஆப்கான் புலனாய்வுத்துறை அதிகாரிகள் அசோசியேட்டட் பிரஸ் நிறுவனத்துக்குத் தெரிவித்துள்ளனர்.

அமெரிக்கா மீது மேலும் பல தாக்குதல்கள் நடைபெறும் என்று சர்வதேச தீவிரவாதி பின்லேடன் எச்சரிக்கும் ஒலி நாடா ஒன்றை கடந்த ஞாயிற்றுக்கிழமை அராபிய செய்தி நிலையமான அல் ஜஹீரா ஒலிபரப்பியது. ஆனால், அது லேடனின் குரல் தானா? எப்போது அது பதிவு செய்யப்பட்டது என்பது தெரியவில்லை. (ஒ)



ஈராக்மீது அமெரிக்கா எப்போது வேண்டுமானாலும் தாக்குதல் நடத்தலாம் என்ற சூழ்நிலையில் ஈராக்கியர்கள் வானொலிச் செய்திகளைக் கேட்பதில் ஆர்வமாக உள்ளனர். தாக்குதல் குறித்து செய்தி ஏதாவது கூறப்படுகிறதா என ஈராக்கில் உள்ள சிற்றுண்டிச்சாலை ஒன்றில் ஈராக்கியர்கள் வானொலியைச் செவிமடுத்துக் கொண்டிருப்பதைப் படத்திற்காணலாம்.

## சதாம் கொடுங்கோலன் என்கிறார் அதிபர்புஷ்

வாஷிங்ரன்,ஒக்.10

'ஈராக் அதிபர் சதாம் ஹுசைன் கொலைகாரக் கொடுங்கோலன்' என்று அமெரிக்க அதிபர் புஷ் கடுமையாகத் தாக்கி இருக்கிறார்.

அமெரிக்காவில் சின்சினாட்டியில் நடந்த ஒரு கூட்டத்தில் உரையாற்றிய புஷ், சதாம் ஹுசேனை கடுமையாகத் தாக்கிப்பேசினார்.

'சதாம் ஹுசேன் தன்னுடன் உள்ள அதிபயங்கர ஆயுதங்களை அழிக்க வேண்டும். இல்லாவிட்டால் போரைச் சந்திக்கவேண்டும். அமைதிக்காக நாங்கள் ஈராக்கிடம் இருந்து ஆயுதங்களைப் பறிப்போம். ஆயுதங்களை ஐ.நா. மேற்பார்வையின்கீழ் அழிக்க ஈராக் முன்வரவேண்டும். இதற்குத் தேவையான தீர்மானத்தை ஐ.நா. பாதுகாப்புச் சபை நிறைவேற்ற வேண்டும்.'

- இவ்வாறு புஷ் கூறினார். (ஒ)

## இந்து ஆலயங்களுக்கு பங்களாதேஷில் தீ!

டாக்கா,ஒக்.10

பங்களாதேஷில் இந்துக் கோயிலுக்கு சிலர் தீ வைத்தனர். வேறு இரு கோயில்களில் இருந்த சிலைகள் உடைத்து நொறுக்கப்பட்டன. இச்சம்பவங்கள் அடுத்தடுத்து நடந்துள்ளன. இத்தகைய வன்செயல்களில் ஈடுபட்டுள்ள சிலர், கிஷோர் கஞ்ச் என்ற இடத்தில் இருந்த இந்துக் கோயிலுக்கும் தீ வைத்துள்ளனர். அதில் அக்கோயில் பெரும் சேதமடைந்தது. அக்கும்பல் அங்கு போட்டுவிட்டுச் சென்ற துண்டுப் பிரசுரங்களில், 'உருவ வழிபாட்டை கைவிட வேண்டும். இந்துக் கோயில் இருந்த இடத்தில் மசூதியைக் கட்ட வேண்டும்' என்று குறிப்பிடப்பட்டு இருந்தது.

தலைநகர் டாக்காவுக்கு அருகே உள்ள நாராயணகஞ்ச் என்ற இடத்தில் உள்ள கோயிலில் சிலைகள் சேதப்படுத்தப்பட்டுள்ளன. (ஒ)

## இரு நேரக் கொள்கை பாகிஸ்தானில் நடைமுறை

இஸ்லாமாபாத்,ஒக்.10

பாகிஸ்தானின் நேரம் ஒரு மணித்தியாலம் முன்கூட்டி மாற்றப்பட்டுள்ளது.

கடந்த 5 ஆம் திகதி நள்ளிரவு 12 மணியிலிருந்து இந்தப் புதிய முறை நடைமுறைக்கு வந்தது. இது அடுத்த ஆண்டு ஏப்ரல் வரை அமுலில் இருக்கும். அதன் பின்னர் கோடை காலத்துக்கு ஒரு மணித்தியாலம் நேரம் தள்ளி வைக்கப்படும்.

ஓர் ஆண்டில் இரு நேரக் கொள்கையை 6 மாதங்களுக்கு முன்னர் பாகிஸ்தான் அறிமுகப்படுத்தியது. இத்திட்டம் வெற்றிகரமாக நடந்ததால், இப்போது மழைகாலத்துக்கு ஏற்ப நேரம் மாற்றி அமைக்கப்படுகிறது.

மின்சாரத்தை மிச்சப்படுத்தும் நோக்கில் இத்திட்டம் செயற்படுத்தப் படுகிறது. கோடை காலத்தில் பகல் பொழுது அதிக நேரம் நீடிக்கும். காலைப்பொழுது ஒரு மணிநேரம் முன்னதாகவே தொடங்கிவிடும். அதற்கேற்ப கடிகாரத்தின் நேரம் ஒருமணி நேரம் முன்கூட்டியே மாற்றி அமைக்கப்படும்.

குளிர்காலம் அதிகமுள்ள ஐரோப்பிய நாடுகளில் இதுபோன்ற முறை பின்பற்றப்படுவது குறிப்பிடத்தக்கது. (ஒ)

## 19 வயது கனடிய மாணவன் பெயர் நோபல் பரிசுக்குப் பரிந்துரை

ஒட்டாவா,ஒக்.10

சமாதானத்துக்கான நோபல் பரிசைப் பெறுவதற்கு, கனடா நாட்டைச் சேர்ந்த 19 வயது மாணவன் கிரெய்க் கீல்பெர்ஜரின் பெயர் பரிந்துரைக்கப் பட்டுள்ளது. இத்தகவலை குளோப், மெயில் ஆகிய நாளிதழ்களும் சிபிசி தொலைக்காட்சியும் தெரிவித்தன.

10 லட்சம் டொலர்கள் (ரூ.9.6 கோடி) பரிசுத் தொகையைக் கொண்டது நோபல் பரிசு என்பது குறிப்பிடத்தக்கது. அவரது பெயரை கனடா நாட்டு வருவாய்த்துறை அமைச்சர் எனார் கப்லானும் அமெரிக்க நாடாளுமன்ற பெண் உறுப்பினர் லூய்ஸ் காப்ஸ் என்பவரும் நோபல் பரிசுத் தேர்வுக் குழுவுக்குப் பரிந்துரைத்துள்ளனர். கிரெய்க்குக்கு 13 வயதாகும் முன்னரே அவரது பெயர், பத்திரிகைகளில் முதல் பக்கத்தில் இடம்பெறத் தொடங்கிவிட்டது. ஏழை நாடுகளில் குழந்தைத் தொழிலாளர் முறை நடைமுறையில் இருப்பதைக் கேள்வியுற்று வேதனை அடைந்தார் கிரெய்க். அதிலும் குறிப்பாக, பாகிஸ்தானில் கம்பளம் தயாரிப்புத் தொழிலில் ஈடுபட்டு இருந்த ஒரு குழந்தை இறந்து விட்டதாக வந்த செய்தியைக் கேள்விப்பட்டு வேதனைப்பட்டார். அப்போது அவருக்கு வயது 12.

குழந்தைத் தொழிலாளர் முறைக்கு முடிவுகட்டும் நோக்கத்துடன் 'குழந்தைகளைக் குழந்தைகளால் விடுவிக்கமுடியும்' என்ற பெயரில் ஓர் அமைப்பைத் தொடங்கினார். இன்று உலகம் முழுவதும் அந்த அமைப்பில் ஒரு லட்சம் பேர் உறுப்பினர்களாக உள்ளனர்.

சுகாதாரம், கல்வி உட்பட பல்வேறு பிரச்சினைகள் தொடர்பாக நடைபெறும் சர்வதேச மாநாடுகளில் இளைஞர்களுக்கும் பிரதிநிதித்துவம் அளிக்கப்படவேண்டும் என்று வலியுறுத்தி உலகம் முழுவதும் பிரசாரம் செய்துவருகிறார் கிரெய்க்.(ஒ)

## இந்தியா மீது அமெரிக்கா புகார்

வாஷிங்ரன்,ஒக்.10

கடந்தவாரம் இந்தியா நடத்திய ஏவுகணைச் சோதனை குறித்து முன்கூட்டியே தம்மிடம் தெரிவிக்கவில்லை என்று அமெரிக்கா குறைகூறியுள்ளது.

'பாகிஸ்தான் 'ஹத்ஃப்' ஏவுகணைச் சோதனையை நடத்தியது. இஸ்லாமாபாத்தில் உள்ள அமெரிக்கத் தூதரகத்திடமும் அண்டை நாடுகளிடமும் அது குறித்துத் தெரவித்தது பாகிஸ்தான். ஆனால், அதைத் தொடர்ந்து தனது ஆகாஷ் ஏவுகணைச் சோதனையை நடத்திய இந்தியா, அது குறித்து அமெரிக்காவிடம் தெரிவிக்கவில்லை' என்று கூறினார் அமெரிக்க வெளியுறவுத் துறை செய்தித் தொடர்பாளர் ரிச்சர்ட் பௌச்சர்.

கடந்தகாலங்களில் இந்தியா நடத்திய ஏவுகணைச் சோதனைகள் குறித்து அமெரிக்காவிடம் முன்கூட்டியே தகவல் தெரிவித்துள்ளது. ஆனால், தற்போது தெரிவிக்கவில்லை என்றார் அவர். (ஒ)



காஸா பிரதேசத்தில் இஸ்ரேலிய இராணுவத்தினர் கண்மூடித்தனமாகச் சுட்டதில் 12 வயதான பலஸ்தீனச் சிறுமி கொல்லப்பட்டார். அச்சிறுமியின் சடலத்தின்மீது உறவினர்கள் விழுந்து கதறியழுவதை படத்திற்காணலாம்.

## அமெரிக்க நகரில் வெள்ளைவான் பீதி!

வாஷிங்ரன்,ஒக்.10

அமெரிக்கத் தலைநகர் வாஷிங்ரனின் சுற்று வட்டாரத்தில் மர்ம மனிதன் குறித்து பீதி எழுந்துள்ளது. அவர் யார்? எங்கிருந்து வருகிறார் என்று தெரியவில்லை. வெள்ளை நிற வானில் திடீர் என்று வந்து வீதியில் செல்கிறவர்களை சுட்டுத் தள்ளிவிட்டு மாயமாக மறைந்து விடுகிறார். அவரது துப்பாக்கிக்கு கடந்த வாரத்தில் 6 பேர் பலியாகியுள்ளனர்.

இப்போது அந்த மர்ம மனிதன் பாடசாலைகளிலும் தனது கைவரிசையைக் காட்டி இருக்கிறார்.

வாஷிங்ரன் அருகில் உள் பிபோவி என்ற இடத்தில் உள்ள உயர்தரப் பாடசாலையில் கற்கும் 13 வயது மாணவன் தன் தாயுடன் சென்றுகொண்டிருந்தான்.

மகனை பாடசாலை வாசலில் விட்டுவிட்டுத் தாயார் திரும்பிய சிறிது நேரத்தில் துப்பாக்கிச் சூட்டுச் சத்தம் கேட்டது. ஒரு மர்ம மனிதன் மாணவனை சுட்டுவிட்டு மாயமாய் மறைந்து விட்டார். உடனே தாய் மகனை ஆஸ்பத்திரியில் அவசர சிகிச்சை பிரிவில் சேர்த்தார். காயமடைந்த அந்த மாணவன் ஆபத்தான நிலையில் இருப்பதாக மருத் துவமனை வட்டாரங்கள் தெரிவித்தன. (ஒ)

## சூரியனைச் சுற்றும் புதிய 'கிரகம்' வானவெளியில் கண்டுபிடிப்பு

வாஷிங்ரன்,ஒக்.10

வானவெளியில் விநோதப்பொருள் ஒன்று சூரியனைச் சுற்றி வருவது கண்டுபிடிக்கப்பட்டு உள்ளது. இது புதிய கிரகமா? அல்லது அதுபோன்ற ஒரு பொருளா என்று கேள்வி எழுந்து உள்ளது.

சூரிய மண்டலத்தில், சூரியனை ஆதாரமாகக் கொண்டு அதை 9 கிரகங்கள் சுற்றி வருவது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. கடைசியாகக் கண்டு பிடிக்கப்பட்ட கிரகம் புளூட்டோ ஆகும். இது 1930 ஆம் ஆண்டு கண்டு பிடிக்கப்பட்டது. அதன்பிறகு இப்போது கிரகம் மாதிரியான ஒரு பொருளை மைக் பிரவுன் என்ற வானவெளி ஆராய்ச் சியாளர் கண்டுபிடித்து இருக்கிறார்.

கலிபோர்னியா தொழில்நுட்ப நிறுவனத்தைச் சேர்ந்த இவர், கடந்த ஜூன் 4 ஆம் திகதி இந்த விநோதப் பொருளைக் கண்டுபிடித்தார்.

அவர் தான் கண்டுபிடித்ததை ஓர் அறிக்கையாகத் தயாரித்து, அதை அலபாமா மாகாணம் பெர்மிங்காமில் நடக்கும் அமெரிக்க வானவெளி ஆராய்ச்சி சங்கத்தின் மாநாட்டில் வாசித்தார்.

இந்தப் பொருளை கிரகம் என்று சொல்லமுடியாது என்றும் - அதைப் பனிக்கட்டியால் உருவான பாறை என்று அழைக்கவேண்டும் என்றும் - மைக் கூறுகிறார்.

இந்த விநோதப் பொருளுக்கு 'குவார்' என்று பெயர் சூட்டப்பட்டு இருக்கிறது. 'குவார்' என்பது கலிபோர்னியாவில் முன்பு வசித்த பழங்குடிகளின் கடவுளின் பெயர் ஆகும். இந்த பெயர் இந்திய பண்டை கால புராணங்களிலும் இருப்பதாகக் கூறப் படுகிறது.

'புளூட்டோ கிரகத்[illegible] பாதிதான் இந்த 'குவார்' இருக்கிறது என்று குறிப்பிடும் மைக் பிரவுன், கிரகம் என்பது மிகப்பெரிய ஒன்றாக இருக்கவேண்டும். அது சூரியனைச் சுற்றிவர வேண்டும். இது சூரியனைச் சுற்றி வருகிறது. ஆனால், அளவில் சிறியதாக இருக்கிறது' என்று அவர் கூறினார்.

'குவார்' சூரியனைச் சுற்றிவர 288 ஆண்டுகள் பிடிக்கிறது. இது புளூட்டோ கிரகத்தில் இருந்து 160 கோடி கிலோ மீற்றர்கள் தொலைவில் உள்ளது. 'குய்ப்பர் பெல்ட்' எனப்படும் பகுதியில் இது உள்ளது. இந்த பெல்ட் பகுதியில் பனிக்கட்டியாலான பொருள்கள் சுற்றி வருகின்றன.

இந்த 'குய்ப்பர்பெல்ட்' பகுதியில் இருந்துதான் வால் நட்சத்திரங்கள் தோன்றுகின்றன. சூரிய மண்டலத்தில் [illegible] சுற்றி வரும் பாறைகள் இருப்பதை இவை உறுதிப்படுத்துகின்றன. (ஒ)

## முன்னாள் அமைச்சர்கள் இருவர் நேபாளத்தில் வீட்டுக்காவலில்

காத்மண்டு,ஒக்.10

சிரஞ்சீவி வாக்ளே, ஜெயபிரகாஷ் குப்தா என்ற இரு முன்னாள் அமைச்சர்களை வீட்டுக்காவலில் வைக்குமாறு நேபாள மன்னர் உத்தரவிட்டுள்ளார்.

வருமானத்திற்கு அதிகமாக சொத்து சேர்த்தது, அரசின் திட்டங்களில் வேண்டியவர்களுக்குச் சலுகை காட்டி முறைகேடாக கோடிக்கணக்கில் பணம் பெற்றது, அரசுக்கு பெருத்த நஷ்டத்தை ஏற்படுத்தியது ஆகியவை அவர்கள் மீதான குற்றச் சாட்டுக்கள். ஊழல் தடுப்பு அமைப்பின் பரிந்துரையின் பேரில் அவ்விரு அமைச்சர்களும் வீட்டுக்காவலில் வைக்கப்பட்டுள்ளனர். திட்டமிடல் அமைச்சராக வாக்ளேயும் செய்தி, தகவல்தொடர்பு அமைச்சராக குப்தாவும் பதவிவகித்தமை குறிப்பிடத் தக்கது. (ஒ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மீளக்குடியமர்ந்த குடும்பங்களுக்கு உதவ சர்வோதயம் நடவடிக்கை!

## திட்ட இணைப்பாளர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம்,ஒக்.10

யாழ். மாவட்டத்தில் இடம்பெயர்ந்து மீளக்குடியமர்ந்துள்ள குடும்பங்கள் விவசாய நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு இலங்கை சர்வோதய அமைப்பினால் பல்வேறு வேலைத் திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

சர்வோதய அமைப்பின் யாழ். மாவட்ட அலுவலகத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பின்போது அமைப்பின் இணை அமைப்பான மொவிமொண்டோ (MOVIMONDO) அமைப்பின் இலங்கைக்கும் இந்தியாவுக்குமான திட்ட இணைப்பாளர் டானிலா பிராண்டி மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்:- இந்த வேலைத்திட்டங்களுக்கு மொத்தம் ஆயிரத்து 350 குடும்பங்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளன. இந்தக் குடும்பங்கள் கரவெட்டி, சாவகச்சேரி, தெல்லிப்பழை, கோப்பாய், சண்டிலிப்பாய், சங்கானை, உடுவில், மருதங்கேணி, பருத்தித்துறை ஆகிய 9 பிரதேச செயலர் பிரிவுகளில் உள்ள 33 கிராமங்களில் இருந்து தெரிவு செய்யப்பட்டுள்ளன.

அதிக குடும்ப உறுப்பினர்கள் உள்ள அல்லது விதவைகள் உள்ள மற்றும் மிகவும் வருமானம் குறைந்த குடும்பங்கள் தெரிவு செய்யப்பட்டு அவர்களுக்கு விதை நெல், மரக்கறி விதைகள், மண்வெட்டிகள் மற்றும் நீரிறைக்கும் இயந்திரங்கள் என்பன வழங்கப்படும்.

அத்துடன் 160 விவசாய மற்றும் குடி தண்ணீர் கிணறுகளும் புனரமைக்கப்படவுள்ளன.

அத்துடன் எதிர்காலத்தில் ஏனைய வேலைத்திட்டங்களை மேற்கொள்வதற்கு உத்தேசிக்கப்பட்டுளளது. கிளிநொச்சி மற்றும் முல்லைத் தீவு மாவட்டங்களிலும் இந்தச் செயற்திட்டங்கள் விஸ்தரிக்கப்படவுள்ளன என்று அவர் கூறினார். இந்தச் சந்திப்பில் சர்வோதய அமைப்பின் யாழ் மாவட்ட அலுவலக அதிகாரி எஸ். சங்கரப்பிள்ளையும் கலந்துகொண்டார். (ஒ-10)

---

# பாராட்டி வாழ்த்தும்; நன்றி கூறலும்

## யா/அச்சுவேலி மத்திய கல்லூரி

எமது கல்லூரியைச் சேர்ந்த மாணவிகளான

| | |
|---|---|
| செல்வி தைரியராசா சிவலோசினி | ~ 133 புள்ளிகள் |
| செல்வி நாகலிங்கம் சுகன்யா | ~ 130 புள்ளிகள் |
| செல்வி சச்சிதானந்தம் துஸ்யந்தி | ~ 118 புள்ளிகள் |

ஆகிய மூவரும் 5ஆம் தரப் புலமைப் பரிசில் பரீட்சை - 2002இல் சித்தியடைந்தமைக்காகவும், சித்தியை அண்மித்த மாணவர்களையும் பாராட்டி வாழ்த்துவதுடன் இவர்களுக்குக் கற்பித்த ஆசிரியர்கள் மற்றும் அனைவருக்கும் நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

- பாடசாலைச் சமூகத்தினர்,
அச்சுவேலி மத்திய கல்லூரி.

(C/24142)

---

# ஓராண்டு நினைவுதினம்

மண்ணில்
17
-
12
-
1935



விண்ணில்
22
-
09
-
2001

## அமரர் கணபதிப்பிள்ளை இரத்தினம்

*திதி: சதுர்த்தி 10-10-2003*

ஆண்டு ஒன்று கடந்தாலும் ஐயா
உங்கள் கால் நடை ஓசை எம் காதில் ஒலிக்கிறது
ஓர் ஆண்டென்ன எத்தனை ஆண்டுகள் சென்றாலும்
உங்கள் உயிரும் உடலும் பிரிந்தாலும் - ஐயா
உறவு ஒருபோதும் பிரியாது நினைவும் மாறாது.

*பிரிவால் துயருறும்:*
மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்,
உற்றார், உறவினர், நண்பர்கள்.

*புத்தூர் மேற்கு,*
*நவக்கிரி.*

(9226)

---

# 31ஆம் நாள் நினைவஞ்சலி

மலர்வு
27
-
09
-
1953



உதிர்வு
10
-
09
-
2002

## அமரர் கந்தையா பத்மநாதன் வசந்தன்

*(Asst.Manager, Hayleys Ltd, Colombo)*

ஆறுதல் சொல்ல யாரிருந்தென்ன - உன்
ஆருயிர் அன்புக்கு ஈடாகுமா?
தேறுதல் சொல்ல தெய்வமே வந்தாலும் - உன்
திருமுகம் ஒருதரம் பார்த்தால் போதாதோ எமக்கு?

உங்கள் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும்:
அன்பு மனைவி, பிள்ளைகள்.

*இல.40 3/4, உருத்திரா மாவத்தை,*
*கொழும்பு 6*
T.P.: 553339

(8680)

---

# அரியாலை பார்வதி வித்தியாலயத்தில் மிதிவெடி அபாயம்!

குருநகர்,ஒக்.10

அரியாலை ஸ்ரீ பார்வதி வித்தியாலய வளாகத்தில் புதைக்கப்பட்டுள்ள மிதிவெடிகளை அகற்றும் வரை அங்கு வகுப்புக்களை ஆரம்பிப்பதை பின்போடுமாறு மிதிவெடி அகற்றும் 'ஹலோ ட்ரஸ்ற்' குழுவால் அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளதாக இவ்வித்தியாலய அதிபர் தெரிவித்துள்ளார்.

இப்பாடசாலையை பழைய இடத்தில் மீண்டும் ஆரம்பிக்குமாறு யாழ்.கல்வி வலயம் கோரியுள்ளது. ஆனால் மிதிவெடிகள் அகற்றும் வரை பழைய இடத்தில் பாடசாலையை ஆரம்பிக்க வேண்டாம் என பல பெற்றோர்கள் கோரி வருவதனால் தொடர்ந்தும் இப்பாடசாலை யாழ்.கனகரத்தினம் மத்திய மகாவித்தியாலயத்தின் சில கட்டடங்களிலேயே தற்காலிகமாக இயங்கி வருவது குறிப்பிடத்தக்கது. (ஒ-51)

# சட்டமூலம் முரணானது எனத் தீர்ப்பு

தேசிய மின்சக்தி புனரமைப்புச் சட்டமூலம் அரசமைப்புச் சட்டத்துக்கு முரணானது என்று உயர்நீதிமன்றம் தீர்ப்பளித்திருக்கிறது.

சட்டமூலத்தின் 32ஆவது பிரிவை அங்கீகரிப்பதற்கு நாடாளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பங்கு வாக்குகள் தேவை என்று தீர்ப்பில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. அத்தோடு சர்வஜன வாக்கெடுப்பும் நடத்தப்படவேண்டும் என்றும் தீர்ப்பளிக்கப்பட்டுள்ளது.

இத்தீர்ப்பு சபாநாயகர் ஜோசப் மைக்கல் பெரேராவுக்கு அறிவிக்கப்பட்டது. அவர் அதனை நேற்றுமுன்தினம் காலை நாடாளுமன்றத்தில் அறிவித்தார். (ஒ)

# 'ரைபைசன்' சங்கம் குறித்த கலந்துரையாடல்

யாழ்ப்பாணம்,ஒக்.10

யாழ்.பெருமாள் கோயில் பகுதியில் இயங்கிவந்த 'ரைபைசன்' சிக்கனக் கடன் வழங்கும் கூட்டுறவுச் சங்கம், புனரமைக்கப்பட்டு மீண்டும் இயங்கவுள்ளது.

இதற்கான நடவடிக்கைகளை யாழ். மாவட்ட கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் மற்றும் திணைக்கள உத்தியோகத்தர்கள் மேற்கொண்டுள்ளனர்.

இது தொடர்பாக ஆராயும் சமாச உத்தியோகத்தர்களுடனான கலந்துரையாடலொன்று நாளை வெள்ளிக்கிழமை மாலை 3 மணிக்கு பெருமாள கோயிலுக்கு அருகில் உள்ள அலுவலகத்தில் நடைபெறவுள்ளது. (ஒ-9)

# வாழைக்குலை விற்பனை சங்கம் புனரமைப்பு

யாழ்ப்பாணம்,ஒக்.10

நீர்வேலி வாழைக்குலை கொள்வனவு விற்பனை கூட்டுறவுச் சங்கத்தை மீண்டும் இயங்கவைக்கும் நடவடிக்கைகளை, யாழ்.மாவட்ட கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் மேற்கொண்டுள்ளார். இதில் முதற்கட்டமாக இதற்கான ஐந்து பேர் கொண்ட பணிப்பாளர் சபை ஒன்று நியமிக்கப்பட்டுள்ளது.

ஏ-9 வீதி திறக்கப்பட்டிருந்த போதிலும், இதுவரை காலமும் இச்சங்கம் செயற்படாதிருந்தமையினால் வாழைச் செய்கையாளர் பல சிரமங்களை எதிர்நோக்கி வந்ததாகக் கூறப்படுகிறது. (ஒ-9)

# தளபாடங்கள் கிடைத்தன

அரியாலை,ஒக்.10

யாழ்.தொழில் திணைக்களத்தின் பாவனைக்கென கொழும்பிலிருந்து ஒரு தொகுதி தளபாடங்கள் எடுத்து வரப்பட்டுள்ளன.

அலுமாரி, மேசை, கதிரை போன்ற தளபாடங்களே இவ்வாறு எடுத்துவரப்பட்டுள்ளன. (எ-17)

# மரவள்ளங்கள் உற்பத்தியாளருக்கு!

குருநகர்,ஒக்.10

யாழ்ப்பாணத்தில் மரவள்ளங்களை உற்பத்தி செய்வோருக்கான கலந்துரையாடல் ஒன்று நாளை வெள்ளிக்கிழமை காலை 10.30 மணிக்கு வடமாகாண கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசப் பணிமனையில் நடைபெற உள்ளது என வடமாகாணக் கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத் தலைவர் சி.தவரட்ணம் அறிவித்துள்ளார். (ஒ-51)

---



40 லட்சம் ரூபா செலவில் ஆவரங்கால் சிவன் கோயிலடியில் நிறுவப்படவுள்ள 'சிவசக்தி' கல்யாண மண்டபத்திற்கான அடிக்கல் நடும் விழா அண்மையில் நடைபெற்றது.

மண்டப நிர்மாணக் குழுவின் போஷகர் 'செஞ்சொற் கொண்டல்' ஆறு. திருமுருகன் மண்டபத்திற்கான அடிக்கல்லை நட்டு வைத்தபின்னர் இறைவழிபாடு நிகழ்த்துவதைப் படத்தில் காணலாம். (எ-11)

# நாடாளுமன்றப் பகிஷ்கரிப்பில் இரு முஸ்லிம் காங். எம்.பிக்கள்

நிந்தாவூர்,ஒக்.10

கிழக்கிலங்கையைச் சேர்ந்த இரு முஸ்லிம் காங்கிரஸ் நாடாளுமன்ற உறுப்பினர்கள் நேற்று முன்தினம் முதல் நாடாளுமன்ற அமர்வுகளை பகிஷ்கரித்து வருகின்றனர்.

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் திகாமடுல்ல மாவட்ட இளம் நாடாளுமன்ற உறுப்பினர்களான எச்.எம்.எம். ஹரீஸ், எம்.ஐ. அன்வர் இஸ்மாயில் ஆகிய இருவருமே இந்த நாடாளுமன்ற அமர்வுகளைப் பகிஷ்கரிக்கும் போராட்டத்தில் குதித்துள்ளவர்களாவர்.

கிழக்கு முஸ்லிம் மக்களின் உணர்வலைகளுடன் ஒன்றித்தே இந்த நாடாளுமன்ற அமர்வுகளைத் தானும சக நாடாளுமன்ற உறுப்பினருமான எம்.ஐ.அன்வர் இஸ்மாயிலும் பகிஷ்கரிக்க முடிவு செய்தனர் என்று நாடாளுமன்ற உறுப்பினர் எச்.எம்.எம். ஹரீஸ் தெரிவித்தார்.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்க முஸ்லிம் சமூகத்திற்கு வழங்கிய வாக்குறுதிகள் எதனையும் நிறைவேற்றத் தவறிவிட்டார் எனவும், பிரதமர் ரணில் மீது நம்பிக்கையிழந்த நிலையில் கிழக்கு மக்கள் இருப்பதாகவும் ஹரீஸ் கவலை தெரிவித்தார். பின்வரும் கோரிக்கைகள் நிறைவேறும்வரை நாடாளுமன்ற அமர்வுகளைப் பகிஷ்கரிக்கும் தங்களது போராட்டம் தொடருமெனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

★19ஆவது அரசமைப்புத்திருத்தச் சட்ட வரைவு நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படுவதற்கு முன்னர் இனப பிரச்சினைக்கான தீர்வில் முஸ்லிம்களுக்கான தீர்வு என்ன என்பதை அரசு பகிரங்கமாக அறிவிக்க வேணடும்.

★கிழக்கு அபிவிருத்தி அமைச்சுக்கு உடனடியாக அரசு நிதி ஒதுககீடு செய்ய வேண்டும்.

★மூதூர் - வாழைச்சேனை அனர்தங்களில் பாதிக்கப்பட்ட முஸ்லிம்களுக்கு உடனடியாக அரசு நஷ்டஈடு வழங்க வேண்டும்.

★தென்கிழக்குப் பல்கலைக் கழகத்தின் அபிவிருத்தி நடவடிக்கைகளுக்கு உடனடியாக அரசினால் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு அபிவிருத்திப் பணிகள் ஆரம்பிக்கப்படவேண்டும்.

மேற்படி முக்கிய கோரிக்கைகள் நாடாளுமன்ற அமர்வுகளைப் பகிஷ்கரித்து வரும் நாடாளுமன்ற உறுப்பினர்களால் முன்வைக்கப்பட்டுள்ளன. (ஒ)

---

# 9ஆம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம்
07
-
09
-
1934



மறைவு
20
-
09
-
1993

## அமரர் E.K.ஆறுமுகம்

(முன்னாள் ஹோமகம, ஹற்றன், பருத்தித்துறை சாலை பஸ் நடத்துநர், வடபிராந்திய போக்குவரத்துச் சபை)

*(பூர்வ பக்க பஞ்சமித் திதி: வியாழன்)*

அடுத்தவர் துன்பத்தை துணிவுடனே,
தாங்கி நிற்க இனி இங்கு யாருமில்லையே ஐயா
சுற்றம் ஓம்பியே சுமை தாங்கியானீர்கள்
நிறைந்திடும் உங்கள் நினைவுகளில் ஒரு நிம்மதி
உங்கள் இனிய நினைவலைகள் எம்
உள்ளங்கள் உள்ளவரை மறையாது.

ஓம்சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

உங்களின் பிரிவால் துயருறும்:
மனைவி, மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், நண்பர்கள்.

புதுவீடு,
வல்வெட்டி,
வல்வெட்டித்துறை.

(9234)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பீரிஸ், மொறகொட என இரு குதிரைகளை நம்பி பந்தயத்தில் இறங்கியுள்ள ரணில்

**இலங்கையின் இனப்பிரச்சினைக்கு சமாதானப் பேச்சுக்கள் வெற்றிபெற்று தீர்வு எட்டப்படவேண்டுமாயின் பல தடைகள் தாண்டப்படவேண்டும். பிரதமர் ரணில் விக்கிரமசிங்க இந்த விடயத்தில் கையாளும் அணுகுமுறையால் இறுதிவெற்றி கிடைக்குமா என்பது குறித்து இக்கட்டுரை ஆராய்கிறது. உப்புல் யோசெப் பெர்னாண்டோ எழுதிய 'லங்காதீப' நாளிதழில் வெளியான கட்டுரையின் தமிழாக்கத்தை இங்கு தருகிறோம்.**

ஸ்ரீலங்காவில் அண்மையில் இடம்பெற்ற 'மினி' உலகக் கிண்ணத்துக்கான கிரிக்கெட் போட்டிகளை ஆரம்பித்துவைத்து முதன்நாள் இடம்பெற்ற போட்டியில் நாணயச் சுழற்சியை மேற்கொள்ளும் சந்தர்ப்பம் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்குக் கிடைத்தது. பாகிஸ்தான் - ஸ்ரீலங்கா அணிகள் கலந்துகொண்ட போட்டியில் நாணயச் சுழற்சியில் பாகிஸ்தான் அணித்தலைவர் வெற்றி பெற்றார். இதனால், பாகிஸ்தான் அணிக்கே வெற்றி வாய்ப்பு உள்ளதென ரசிகர்களில் பலர் நம்பினர். எதற்காகத்தான் நாணயச் சுழற்சியை மேற்கொள்ள பிரதமரைத் தேர்ந்தெடுத்தார்களோ? எனச் சிலர் சலித்துக்கொண்டனர். ஆயினும், போட்டியின் முடிவு யாருமே எதிர்பார்க்காத வகையாக அமைந்தது. நாணயச் சுழற்சியில் பாகிஸ்தான் வென்றதாலோ என்னவோ அப்போட்டியில் ஸ்ரீலங்கா அணி சிறப்பான வெற்றியைப் பெறமுடிந்தது.



உண்மையில் ரணில் விக்கிரமசிங்கவின் அரசியல் நிர்வாகம் மட்டுமல்ல, சமாதான முயற்சிகளும் இதைப் போன்றதே. மேலெழுந்தவாரியாக சமாதான முயற்சிகள் தோல்வியை அளிக்குமெனக் கருதப்பட்ட வேளையிலேயே ரணில் இச்சமாதான முயற்சிகளை ஆரம்பித்தார். விடுதலைப் புலிகள் அமைப்பின் தலைவர் பிரபாகரனது செய்தியாளர் மாநாட்டையடுத்து இது உறுதியாயிற்று. அச்செய்தியாளர் மாநாட்டை ஊடகங்கள்மூலம் பார்த்த, கேட்ட நாட்டு மக்கள் கவலை தெரிவித்தனர். பிரபாகரன் கேட்பவற்றைக் கொடுப்பின் நாடே அழியநேரும் என்றனர். இச்சமாதானத்தால் எதுவித பலனும் ஏற்படப்போவதில்லை என்றனர். சமாதானத்துக்கான எதிர்பார்ப்புகள் முற்றுப்பெற்றுவிட்டன எனக் கூறினர்.

அந்தச் செய்தியாளர் மாநாடு இடம்பெற்று ஆறு மாதங்களே ஆகின்றன. தற்போது நிலைமை 90 பாகை மறுபுறம் திரும்பிவிட்டது. முதற் சுற்றுச் சமாதானப் பேச்சு முடிவடைந்த பின்னர் இடம்பெற்ற செய்தியாளர் மாநாட்டில் பிரபாகரன் சார்பிலும் விடுதலைப் புலிகள் அமைப்பின் சார்பிலும் கருத்து வெளியிட்ட அன்ரன் பாலசிங்கம், தாங்கள் ஈழக் கோரிக்கையைக் கைவிடுவதாகத் தெரிவித்திருந்தார். ' அதேபோன்று வடக்கு - கிழக்கு பிரதேசங்கள் தமிழ் மக்களது மட்டுமன்றி முஸ்லிம் மக்களதும் தாயக பூமியாகும் எனவும் தெரிவித்தார். ரணில் விக்கிரமசிங்கவை தமது அமைப்பு நாட்டின் பிரதமராக ஏற்றுக்கொள்வதாகக கூறாமல் கூறியிருந்தார்.

எனவே, அன்று பாலசிங்கம் ஈழக் கோரிக்கையைக் கைவிடப் போவதில்லை என்றும் - வடக்கு - கிழக்கு தமிழர்களுக்கு மட்டுமே தாயகபூமி எனவும் - தாம் ரணிலை பிரதமராகக் கருதவில்லை எனவும் - கூறியபோது கொதித்தெழுந்தவர்கள் இன்று என்ன கூறப்போகின்றனர்.

விடுதலைப் புலிகள் அமைப்பு யுத்தத்தைக் கைவிட்டு சமாதானத்துக்கு வரமுயல்வதை சகித்துக் கொள்ளமுடியாத, நாட்டில் சமாதானம் ஏற்படுமானால் தமது வருமானம் அற்றுவிடும் என எண்ணும் சிலர் பாலசிங்கம் பொய்யாக அப்படிக் கூறுவதாகச் சொல்லிக்கொள்கின்றனர். வேறு சிலரோ ஈழக்கோரிக்கையைக் கைவிடுவதாக பிரபாகரனே தன்வாயால சொல்லவேண்டும் எனக் கூறுகிறார்கள்.

இருந்தும் அன்று ரணிலை பிரதமராகக் கணிக்கவில்லை எனக் கூறியது பாலசிங்கமேயன்றி பிரபாகரன் அல்ல. அந்த வேளையில், அதனைப் பாலசிங்கம் கூறினாரா? அன்றேல் பிரபாகரன் கூறினாரா? என ஆராய்ந்து பார்க்காது அக்கருத்துக்கு எதிராகப் போர்க்கொடி தூக்கிய கூட்டத்தினர், இன்று சமாதானத்துக்கு ஆதரவாகக் கருத்துத் தெரிவிப்பதை பாலசிங்கம் தெரிவித்தாரா? பிரபாகரன் தெரிவித்தாரா? என்று கணக்கெடுப்பது கேலிக்கிடமானது. அதுபோன்றே, அன்று பிரபாகரன் ஈழக்கோரிக்கையைக் கைவிடப் போவதில்லை எனக் கூறியதன்மூலம் சமாதானத்துக்கு சாதகமற்ற கருத்து வெளியிட்டதை அது நிஜமாகக் கூறினாரா? அல்லது பொயயாகக் கூறினாரா? என ஆராய்ந்து பாராது, அக்கருத்தின் உள்ளர்த்தம்

## மாற்றார் தோட்டத்திலிருந்து...

ஆராயாது அதற்கு எதிராகக் கூப்பாடு போட்ட அக்கூட்டத்தினர், இன்று பாலசிங்கம் ஈழக்கோரிக்கையைக் கைவிடத் தயாரெனக்கூறி, சமாதான முயற்சிகளுக்கு சாதகமான கருத்தைத் தெரிவிக்கும்போது அதிலுள்ள உண்மை மற்றும் பொய்களைத் தேடி - அதில் பொதிந்துள்ள அர்த்தத்தைத் தேடி தர்க்கம் புரிவது அதற்கும் மேலான நகைப்புக்கிடமான விடயமாகும்.

ஆனால், ரணில் விக்கிரமசிங்க அப்போதும் தர்க்கத்தில் ஈடுபட வில்லை. இப்போதும் தர்க்கத்தில் ஈடுபட ஆர்வம் காட்டவில்லை. விருப்பமானோர் தாம் விரும்பியவிதத்தில் கருத்துக்கூற இடமளித்துத் தான் ஆரம்பித்த பயணத்தைத் தொடர்கிறார். அவர் எரியும் நெருப்பைத் தொட்டுக் கையைச் சுட்டுக்கொள்ளும் மனிதரல்ல. எரியும் நெருப்பு எரியும்வரை இடமளிக்கும் மனிதராவார்.

ரணிலின் இச்சமாதானப் பயணத்தில் இதுவரையில் காணப்பட்ட மிகப்பெரிய வெற்றியின் ரகசியம் என்னவெனில் காலம் கனியும்வரை காத்திருக்கும் கலையாகும்.

பல பிரச்சினைகளை அவர் காலத்திடம் கையளித்தே தீர்வுகாணுகிறார். அவர் காலத்தை எடுப்பதால் பிரச்சினைகள் தாணாகவே காலாவதியாகின்றன. காலத்தால் பிரச்சிகளுக்கு மரணத்தை ஏற்படுத்தி தான் விரும்பும் விதத்தில் பிரச்சினை உருவெடுக்கும்வரை அவர் அமைதியாகக் காத்திருக்கிறார். இதற்கு மிகப்பொருத்தமான உதாரணமாக, விடுதலைப் புலிகள்மீதான தடைநீக்கத்தைக் குறிப்பிடலாம். விடுதலைப் புலிகள்மீதான தடையை நீக்கமுயன்றால் தாங்கள் தொலைநதோம் என அவரது அரசில் அங்கம் வகிப்போரில் சிலர் கூறினர். ரணிலோ இப்பிரச்சினையைக் காலத்தின் வசம் ஒப்படைத்தார். விடுதலைப புலிகள் மீதான தடையை நீக்குவதற்கெதிரான எதிர்ப்பலைகள் காலப் போக்கில் வலுவிழந்து போனபின்னர் ரணில் தமது திட்டத்தைக் கருத்தில் எடுத்து மெதுவாகவும், அமைதியான முறையிலும் பிரச்சினைக்குத் தீர்வு கண்டார். தடையை நீக்குவதற்கான எதிர்ப்பு தானாகவே அற்றுப்போகும் வரை ரணில் விக்கிரமசிங்க தென் பகுதி மக்களுக்கு மட்டுமன்றி விடுதலைப்புலிகள் அமைப்புக்கும் சமாதானம்பற்றி நம்பிக்கையூட்டினார்.

இப்படியான ஒரேயொரு உபாயம மூலமன்றி வேறு பல உத்திகள் மூலமும் இப்பிரச்சினைக்குத் தீர்வுகாண ரணில் முயற்சித்தார். இப்பிரச்சினையில் தான் பக்கச்சார்பாக இயங்குவதாகக் காட்டிக்கொள்ளாது, தான் இருபகுதியினருக்கும் மத்தியில் இது இரு தரப்புக் கருத்துக்களையும் செவிமடுத்தமை அவ் உத்திகளில் ஒன்றாகும். முன்னர் மேற்கொள்ளப்பட்ட சமாதான முயற்சிகள் வெற்றியளிக்காமைக்கான பிரதான காரணம், பிரசசினைக்குத் தீர்வுகாண முயற்சித்தநபர், தாம் ஒரு பக்கச்சார்புடையவராக இருந்தமையேயாகும். ஜே.ஆர்., பிரேமதாஸ ஆகியோர் போன்று சந்திரிகாவும் இந்த விதத்திலேயே பிரச்சினைகளை அணுகினார். ராஜீவ்காந்திகூட

**தமிழில்: வியெஸ்ரி**

இவ்வாறே செயற்பட்டார். ஆனால், ரணில் விக்கிரமசிங்கவோ தாம் அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் மத்தியில் இருந்து இப்பிரச்சினையை நடுநிலைமையுடன் அணுகித் தீர்வொன்றினை எட்டுவதற்கு முயன்றுவருகிறார். அந்தவகையில் மட்டுமே பிரச்சினையை இலகுவில் அணுகமுடியும். ஜே.ஆர்., பிரேமதாஸ, சந்திரிகா மற்றும் ராஜீவ்காந்தி போன்று, ரணில் பக்கம்சார்ந்து நின்று விடுதலைப் புலிகளுடன் கருத்துப் பரிமாற்றங்களை மேற்கொண்டிருந்தால், பெரும்பாலும் இச்சமாதான முயற்சிகள் எப்போதோ தோல்வியில் முடிவடைந்திருக்கும். ரணில் இனப் பிரச்சினை தொடர்பாக மட்டுமன்றி, சந்திரிகாவின் ஜனாதிபதி அதிகாரங்கள் சம்பந்தமான பிரச்சினையில்கூட இவ்வகையான உபாயத்தையே பின்பற்றி வருகிறார். இது விடயத்தில், அவரது ஐக்கிய தேசிய முன்னணி ஒருபுறமும் ஜனாதிபதி மற்றொருபுறமும் இருக்க, தான் இவர்கள் நடுவே இருந்து பிரச்சினையை அணுகுவதில் ஆர்வங்காட்டுகிறார். அவரது இவ் அணுகுமுறை சரியானதாயின், ஜனாதிபதி சம்பந்தப்பட்ட பிரச்சினையில், பிரச்சினை ஒருபக்கம் சார்ந்துள்ளதாகவே இருக்கவேண்டும். வேறுவிதமாகக் குறிப்பிடுவதானால், அவர் ஐதே.முன்னணியை பிரதிநிதித்துவப்படுத்தவேண்டும். ஆயினும், பிரதமரோ பக்கஞ்சாராது, பக்கச்சார்புத் தன்மையில்லாமல் மத்தியில் இருந்துகொண்டு பிரச்சினையை [illegible] சிக்கிறார். அவர் பிரச்சினையில் ஒரு பக்கச்சார்பாகச் செயற்படின் அரசை அமைத்த நாளிலிருந்து, வேறு எந்த நடவடிக்கையிலும் ஈடுபடாமல், இப்பிரசசினைக்குத் தீர்வு மார்க்கம் தேடித் தேடி காலத்தைக் கழிக்க நேரிட்டிருக்கும். சரியாகச் சொல்வதாயின் சந்திரிகாவுடன் கருத்து வேறுபாடு கொள்ள நேரிட்டிருக்கும்.

இந்த நாட்டுமக்களின் பொதுவான பிரச்சினைகளில் மட்டுமல்ல ஸ்ரீலங்காவின் அரசியலில்கூட புதிய அணுகுமுறையே கடைப்பிடிக்கப்படுகிறது. சாதாரணமாக, ஸ்ரீலங்காவின் அரசியலில் எதிர்க்கட்சித் தலைவர் அன்றேல் தலைவரொருவர் எதிரணியில் இருக்கும்போது தமது அரசியல் செல்வாக்கை உயர்த்திக்கொள்ள முயல்வது வழக்கம். நாட்டிலுள்ள ஏனைய சக்திகள் தங்கள் செல்வாக்கை விருத்திசெய்யமுயலும். ரணிலோ அல்லது சந்திரிகாவோ எதிரணியினின்றும் விலகி நாட்டின் தலைவராக நியமிக்கப்பட்ட உடனேயே செயற்பாடுகள் குறுகுகின்றன. முதலில் தமது கட்சியைச் சேர்ந்தோரின் விமர்சனத்துக்கு உட்பட நேர்கிறது. பின்னர், தமக்கு நெருக்கமானவர்களின் விமர்சனத்துக்கு உட்பட நேர்கிறது. கடைசியில் தம்மைச் சுற்றியிருக்கும் ஊழியர்களின் விமர்சனத்துக்கு உள்ளாகி பெயரைக் கெடுத்துக கொள்ள நேரிடுகிறது. ஆயினும், ரணிலின் உத்தி அதிகாரத்துக்கு வந்த நாள் முதல் பலதரப்பட்ட சக்திகள் மத்தியில் தனது நோக்கங்களை எடுத்துக்கூறி பலரையும் ஏற்கச் செய்கிறார் அவர். தான் அறிந்தவற்றையும் கிடைக்கும் விவரங்களையும் கட்சிக்கோ,நெருங்கியவர்களுக்கோ, ஊழியர்களுக்கோ மட்டும் தெரிவிக்காது ஊடகங்களிலிருந்து, மகாநாயக்கதேரர் உட்பட்ட பௌத்த மத

## நாட்டு மக்களின் ஞாபகமறதியே பிரதமருக்குக் கைகொடுக்கும்

பீடங்கள்வரை அவற்றை அறிந்து கொள்ள வைக்கும் முயற்சிகளில் ஈடுபட்டுள்ளார். இது இனப்பிரச்சினைகுத் தீர்வுகாணும் முயற்சிகளின் போது அவர் கடைப்பிடிக்கும் மற்றோர் உத்தியாகும். இந்த உத்தியின் மூலம் அனைவருக்கும் செவிமடுத்து அனைவரின் ஆசீர்வாதங்களையும் பெற்று இந்தப் பிரச்சினைக்குத் தீர்வு காண முயல்கிறார்.

இப்பிரச்சினைக்குத் தீர்வுகாணும் அவசரம் எதுவும் அவருக்கு ஏற்படவில்லை. அவ்வாறு அவசரமாகத் தீர்வுகாண முற்பட்டால் விடயம் கைநழுவிப் போகவும்கூடும் எனவும் ஒரு கதை உள்ளது. அது குறித்தும அவர் கவனம் செலுத்தியிருக்க வேண்டும்.

இவற்றைவிட 25 ஆண்டுகள் அரசியல் அனுபவம் காரணமாக அவர் இந்நாட்டு மக்களைப் பற்றி நன்கு அறிவார். இந்நாட்டு மக்களில் எவராயிருப்பினும் அது நல்ல விடயமோ, கெட்டவிடயமோ அதனை சில காலத்திற்கு மட்டுமே ஞாபகத்தில் வைத்திருப்பர் என்பதை அவர் அறிவார். சந்திரிகாவின் அரசு யாழ்ப்பாணத்தை மீட்டெடுத்ததை மக்கள் சிறிது காலத்துக்கே மனதில் வைத்திருந்தனர். ரணிலின் அரசு பதவியேற்று யுத்தத்தை நிறுத்தியது மின்விநியோகத்திற்குத் தீர்வுகண்டது இவை யாவும் மக்களின் மனதில் இப்போது இல்லை. மக்கள் தற்போது பொருள்களின் விலை உயர்வையும் எதிர்காலம் பற்றியுமே சிந்திக்கின்றனர். இன்றும் யுத்தமும், மின்வசதிக் குறைவும் தொடர்ந்து இருக்குமாயின பொருளாதாரம் இன்று எப்படியிருக்கும் எனச் சிந்தித்துப் பார்க்கக்கூட மக்கள் தயாராயில்லை.

இது இந்நாட்டு மக்களின் வழக்கம். அதற்கு மருந்தேதுமில்லை. ரணிலோ மருந்து கண்டுபிடித்திருப்பதாக காட்டிக்கொள்கிறார். அவர் நாட்டின் எதிர்காலச் சுபீட்சத்துக்கான எதுவித நிர்மாண வேலையிலும் இதுவரை இறங்கவில்லை. அவர் சமாதானம் பற்றிய மக்களின் எதிர்பார்ப்பை வைத்தே இன்னும் சில வருடங்கள் அமைதியான முறையில் அரசை ஓட்டச் சிந்திக்கிறார். இப்போதுகூட பொதுமக்களுக்கு சமாதானம் பற்றிய சந்தேகம் உண்டு. அதாவது என்றாவது ஒருநாள் நிரந்தரத்தீர்வு ஏற்படுமானால் அது பொதுமக்களின் எதிர்பார்க்காத வெற்றியாக அமையும்.



ஆனால், சிதைந்துபோன பொருளாதாரத்தைக் கட்டியெழுப்பி நிரந்தரத் தீர்வு காணப்படுதல்மூலம் பொதுமக்களின் எதிர்பார்ப்பை வளர்க்க முடியும். அதன்பின்னர், எதிர்வரும் சில ஆண்டுகளில் பொருளாதாரப் புரட்சியை ஏற்படுத்தலாம் என அவர் நம்புவதாகக் கொள்ளமுடியும்.

பொருளாதாரமும் சமாதானமும் வெவ்வேறானவையல்ல. அவை ஒன்றுடன் ஒன்று தொடர்புபட்டவை. சமாதானம் பொருளாதாரத்துக்கான காசோலைப் புத்தகம்.

சமாதானம், பொருளாதாரம் ஆகியவற்றை முன்னேற்றும் தனது உத்தியை நடைமுறைப்படுத்தும் நோக்கிலேயே பேராசிரியர் ஜி.எல்.பீரிஸையும், மிலிந்த மொறகொடவையும் ரணில் தெரிவுசெய்தார். சமாதானப் பேச்சுக்களில் அரசின் பிரதிநிதிகளாக அவ்விருவருமே செயற்பட்டனர். பொருளாதாரத்தைக் கட்டியெழுப்ப வெளிநாடுகளின் ஒத்துழைப்புகளைப் பெற்றுக்கொள்ளவும் அவ்விருவரையுமே தேர்ந்தெடுத்தார். சமாதானமும் பொருளாதாரமும் ஒன்றுடன் ஒன்று தொடர்புபட்டவை என்பதனை நிலைநிறுத்த சந்திரிகாவின் அரசில் இருந்த சமயம் பேராசிரியர் பீரிஸ் ஆற்றிய பங்கு குறைந்த அளவானதல்ல. ஆயினும், சந்திரிகாவின் அரசு அவரது திறமையைச் சரியாகப் பயன்படுத்திக்கொள்ளவில்லை. ரணில் விககிரமசிங்க, ஜி.எல்.பீரிஸை தம்மிடமுள்ள ஆற்றல் மிக்க குதிரை போன்று பயன்படுத்தி வருகிறார். முதற்சுற்றுச் சமாதானப் பேச்சின்போது ஜி.எல்.பீரிஸ் ஏனையோர் ஒப்புக்கொள்ளும் வகையில், தமது திறமையை வெளிப்படுத்தினார்.

பேச்சை முன்னெடுத்துச் செல்லவும், அதன்போது உருவாகும் நடைமுறைச் சிக்கல்களுக்கு தீர்வுகாணவும் ரணிலால் தேர்ந்தெடுக்கப்பட்டவர் மிலிந்த மொறகொட. ஜி.எல். பீரிஸ் சிற்பத்தை உருவாக்குவதில் திறமைமிக்கவர். மிலிந்த மொறகொட அச்சிற்பத்தை வேண்டிய திருத்தங்கள் செய்து பூர்த்தியாக்குவதில் திறமை கொண்டவர். இவ்விரண்டு குதிரைகளையும் தந்திரோபாயமாக ஓடவைத்து போட்டியில் வெற்றிபெற ரணில் முயற்சிக்கிறார்.

இனப்பிரச்சினைத் தீர்வில் அவரது மற்றொரு குதிரை ரவூப் ஹக்கீம். முன்னர் பிரபாகரனைச் சந்தித் துப் பேச ரவூப்ஹக்கீமை ரணில் அனுப்பி வைத்தபோது சிலர் அது பற்றிக் குறைகூறினர்.

ஹக்கீமும் பிரபாகரனும் மிக நெருக்கமானவர்கள் என சிலர் கருத்து வெளியிட்டனர். முஸ்லிம் மக்களின் பிரச்சினைகள்பற்றி பேச்சு மேற்கொள்ள ஹக்கீமை பிரபாகரனிடம் ரணில் அனுப்பிவைப்பது இந்த நாட்டின் தலைவர் பிரபாகரனே என ரணில் உணர்ந்துகொண்டதனாலேயாகும் என்ற கருத்தில் சிலர் நையாண்டி செய்தனர். அப்போது ரணில் அமைதியாக இருந்தார்.

அதாவது ரணில் அன்று பிரபாகரனிடம் பேச ஹக்கீமை அனுப்பி வைத்திருக்காவிடில் இன்று பாலசிங்கம் வடக்கு - கிழக்கு தமிழர்களுக்கு

(10ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

## விற்பனைக்கு

பகிரா, பிறீமா இன புறொயிலர் குஞ்சுகள் உடன் விற்பனைக்கு உண்டு. பதிவுசெய்தவர்களும், தேவைப்படுவோரும் உடன் தொடர்பு கொள்ளவும். றாஜீவ், ஆனைக்கோட்டை சந்தி, T.P.No.3529, 2867 (9245)

சொந்தப் பாவனையிலுள்ள 5ஸ்ரீ தொடர் இலக்கமுடைய Voxwagon கார், 1 1/2KV Lister England ஜெனரேட்டர், KUBOTO 200 நீர் இறைக்கும் இயந்திரம் என்பன விற்பனைக்கு உண்டு. தொடர்புகளுக்கு: வே.கயிலேஸ்வரன் (கணக்காளர்), தேவாலய வீதி, குளப்பிட்டி, கொக்குவில் கிழக்கு, கொக்குவில். (9229)

புறொயிலர் இறைச்சிக்கோழிகள், கல்பேட்ஸ், சேவல், விறாத்துக் குஞ்சுகள் விற்பனைக்கு உண்டு. புறொயிலர் (1kg-130/-) தினமும் சுத்தம் செய்து வேண்டிய நிறைகளில் பெற்றுக்கொள்ளலாம். தொடர்பு: சிவா, பருத்தித்துறை வீதி (வட்டக்குளம் முன்பாக), கட்டப்பிராய். (9195)

## தவறிவிட்டது

சுதுமலை தெற்கு, மானிப்பாயைச் சேர்ந்த கந்தையா முகுந்தினி என்பவருடைய விசேட அடையாள அட்டை (இல.0905014723) சுதுமலைக்கும் உயரப்புலம் ஆனைக்கோட்டைக்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் மேற்குறிப்பிட்ட விலாசத்தில் ஒப்படைத்து உதவவும். (9230)

இணுவில் தெற்கு, பாலாவோடையைச் சேர்ந்த தம்பிராசா குமாரதாஸ் என்பவருடைய தேசிய (751003714V), விசேட (0906002251), தொழில் நுட்பக்கல்லூரி அடையாள அட்டைகளும், வங்கிக் கணக்குப் புத்தகமும் 30-09-2002 அன்று கொழும்பு செல்கையில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் மேற்கூறிய முகவரிக்கு அனுப்பி வைக்கவும். (9233)

பூநகரி பள்ளிக்குடாவைச் சேர்ந்த திசநாதன் ஜெயந்தினியின் தேசிய அடையாள அட்டை (இல. 765270553V), விசேட அடையாள அட்டை, பல்கலைக்கழக அடையாள அட்டை (இல.97A44), திசநாதன் கார்த்திகாவின் தேசிய அடையாள அட்டை (இல.826520400V) என்பன கல்வியங்காட்டுக்கும் யாழ்.பஸ் நிலையத்துக்கும் இடையில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் மயூரன் விருந்தமிர்தம், புத்தூர்ச் சந்தி, க.பாஸ்கரமூர்த்தியிடம் ஒப்படைத்து உதவவும். (9248)

## கோழி தடுப்பு மருந்துகள்

Gampura, Raniket தடுப்பு மருந்துகள் ஒவ்வொரு ஞாயிற்றுக் கிழமைகளிலும் காலை 8.00 மணிக்கும், CRD சளி மருந்து புதன்கிழமை காலை 8.00 மணிக்கும் வழங்கப்படும் (போத்தல் கொண்டு வரவும்). தொடர்பு: இல.19, முருகேசர் ஒழுங்கை, முத்திரைச் சந்தையடி, நல்லூர். (9208)

## மணமகள் தேவை

யாழ்.கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த, 1972 இல் பிறந்த, 7இல் செவ்வாயும், பூச நட்சத்திரமும் கொண்ட கனடாவில் வசிக்கும் ஸ்பொன்சர் செய்யக்கூடிய மணமகனுக்கு அழகிய, மெல்லிய மணமகள் தேவை. ஜாதகம், புகைப்படத்துடன் தொடர்பு கொள்ளவும். விளம்பர இல. 1667, C/O உதயன், யாழ்ப்பாணம். (9246)

## மணமகன் தேவை

யாழ்.கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த, சைவபோசன, திருவோண நட்சத்திர, மகர ராசியில், 1963 இல் பிறந்த, கொழும்பில் B.A. பட்டதாரி ஆசிரியராகவுள்ள மணமகளுக்கு அவரது சகோதரி மணமகனை எதிர்பார்க்கின்றார். ஜாதகம் முழு விவரங்களுடனும் தொடர்பு கொள்ளவும். விளம்பர இல. 1664 மே/பா உதயன். (9142)

## வீடு வாடகைக்கு

சகல வசதிகளுடனும் கூடிய மாடி வீடு கோவில் வீதி, நல்லூரில் வாடகைக்கு உள்ளது. (அரசாங்க, அரச சார்பற்ற அமைப்புகளுக்கு வழங்கப்படும்), தொடர்பு: இல.393/47, கோயில் வீதி, நல்லூர். T.P. No. 222 2389. (9249)

# பீரிஸ், மொறகொட...

(9ஆம்பக்க தொடர்ச்சி)

மட்டுமல்லாது முஸ்லிம் மக்களினதும் தாயக பூமியாகும் எனக் கூறியிருக்கமுடியாது. அம்மாகாணங்கள் முஸ்லிம் மக்களினதும் தாயக பூமியென்பதை விடுதலைப் புலிகள் அமைப்பு ஒப்புக்கொண்டமை ஸ்ரீலங்காவில் ஈழயுத்த வரலாற்றை மட்டுமல்ல அதற்கும் முந்திய ஈழ அரசியல் வரலாற்றைக்கூட மாற்றியமைத்துள்ளது. இருந்தபோதும் இதுவரை காலமும் தமிழ்த் தலைவர்கள் அம்மாகாணங்கள் தமிழர்களின் தாயக பூமி எனவே கூறிவந்தனர். இப்போது அக்கருத்தில் மாற்றம் ஏற்பட்டுள்ளது.

இதனால், நன்மையடைவது வேறு யாருமல்ல. சிங்கள இனத்தவர்களே; ஸ்ரீலங்கா அரசே. ரணில், ஹக்கீம் மூலமாக முஸ்லிம்களின் உரிமையை வெளியிடவைத்தார். ஸ்ரீலங்காவின் வரலாற்றில் முதற்தடவையாக சிங்கள, தமிழ் மக்களிடையே இடம்பெற்ற இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு எட்டுவதற்கு எடுக்கப்பட்ட நடவடிக்கைகளில் முஸ்லிம் மக்களைச் சம்பந்தப்பட வைத்ததன்மூலம் தமிழ் இராச்சியக் கனவை கலையச் செய்தார் ரணில். இந்த வேலையைச் செய்துமுடிக்க ரணில், ரவூப் ஹக்கீம என்ற குதிரையைப் பயன்படுத்தினார்.

1997ஆம் ஆண்டில் ஜே.ஆரும் இவ்வகையான குதிரைகளைப் போட்டியில் ஓடவைத்தார். ஸ்ரீலங்காவை குட்டிச்சிங்கப்பூராக மாற்றுவதே அந்த குதிரையோட்டப் போட்டியாகும் ஆனால், அது தவறிவிட்டது. தவறியது என்பதல்ல, இந்தியா ஜே.ஆர்க்கு தவறு இழைத்துவிட்டது. அதன் பலனாக ஏற்பட்டதே தமிழ் ஈழத்துக்கான யுத்தம். இவ்யுத்தம் மட்டும் ஆரம்பிக்காதிருப்பின் 1983ஆம் ஆண்டளவில் இந்நாட்டுக்கு உலகப் பிரசித்திபெற்ற வெளிநாட்டு முதலீட்டாளர்கள் வரவிருந்தனர். அவ்வாறு வரவிருந்த முதலீட்டாளர்களின் பட்டியலை முன்னாள் நிதி அமைச்சர் அண்மையில் வெளியிட்டிருந்தார். டொக்கியோ வங்கி, பாக்லேஸ், ஜே.வி.மோகன், இன்டர்குறோப், மோட்டறோலா, சோனி, சன்யோ உட்பட்ட உலகில் பிரசித்தி பெற்ற நிறுவனங்களே அவையாகும். ரொனி டி மெல்லின் கருத்துப்படி யுத்தம் இடம்பெறாமல் அமைதி நிலவியிருந்தால் 2000 ஆண்டளவில் ஸ்ரீலங்கா மத்திய கிழக்கு, சிங்கப்பூர் ஆகியவற்றுக்கிடையில் முதல்தர பொருளாதார முன்னேற்றமடைந்த நாடாகியிருக்கும்.

இன்று யுத்தம் காரணமாக ஸ்ரீலங்கா உலகத்தில் பின்தங்கிய நாடுகளில் ஒன்றாகிவிட்டது. அந்த வகையில் பார்த்தால் ரணில் ஆரம்பித்திருப்பது கடினமான ஓட்டப் பந்தயமாகும். ஜே.ஆர். தவறுவிட்ட இடத்திலிருந்தே ரணிலால் ஆரம்பிக்க முடிந்திருக்கிறது. முதலில் அந்த தவறு திருத்தப்படவேண்டும் வேறொரு விதத்தில் கூறுவதாயின் ஓட்டப்பந்தயத்தில் ஓட ஆரம்பிக்கமுன்னர் ஏற்கனவே இடம்பெற்ற தவறுகளைத் திருத்திக்கொள்ளவேண்டும். அதன் பின்னரே ஓட ஆரம்பிக்கமுடியும். எப்படி இருந்தபோதும் எதிர்வரும் 20 வருடங்களில் ரணில் விக்கிரமசிங்கவின் இந்த ஓட்டப்பந்தயம் பற்றி சரித்திரம் என்ன கூறப்போகிறது என இப்போது கூறயியலாது. ★

---

**யா/கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரி**
**150ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு**
நடத்தப்படும்
**மரதன்/சைக்கிள் ஓட்டப்போட்டி**
**திகதி மாற்றம்**

நாளை மறுதினம் (12.10.2002) சனிக்கிழமை மு.ப.6.00 மணிக்கு நடைபெறவிருந்த மேற்படி போட்டிகள் யாவும் எதிர்வரும் 19.10.2002 சனிக்கிழமை முற்பகல் 6 மணிக்கு நடைபெறும் என்பதை அறியத் தருகின்றோம். விண்ணப்பித்தவர்கள் சனிக்கிழமை முற்பகல் 6 மணிக்கு கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரிக்குச் சமுகமளிக்கவும்.

ந.சிவகடாட்சம்
*அதிபர்.*
(9255)

---

உ

**ஸ்ரீ வல்லிபுர ஆழ்வார் சுவாமி கோயில்**
**பண்ணிசைப்போட்டி முடிவுகளும் பரிசளிப்பும் நன்றி நவிலலும்**

*அருள்மிகு ஸ்ரீவல்லிபுர ஆழ்வார் சுவாமி கோயில் சித்திரபானு வருட மஹோற்சவம் - 2002* இனிதே நிறைவுபெற எமக்குப் பூரண ஒத்துழைப்பு நல்கிய சகல அரச நிறுவனங்கள், அரச சார்பற்ற நிறுவனங்கள், தொண்டர் அமைப்புக்கள், பாடசாலை சாரணியர்கள், தொண்டர்கள் யாவருக்கும் அறங்காவற் சபை தமது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றது.

வருடாவருடம் நடத்துவது போன்று இவ்வருடமும் எம்மால் நடத்தப்பட்ட பண்ணிசைப் போட்டி முடிவுகள் வருமாறு:-

**மேற்பிரிவு:**
1ஆம் இடம்: செல்வன் கோ.சிவராசா - ஹாட்லிக்கல்லூரி, பருத்தித்துறை.
2ஆம் இடம்: செல்வி நா.தர்ஷிகா - மெதடிஸ்த பெண்கள் உயர்தர பாடசாலை, பருத்தித்துறை.
3ஆம் இடம்: செல்வி சு.வைதேகி - மெதடிஸ்த பெண்கள் உயர்தர பாடசாலை, பருத்தித்துறை.
4ஆம் இடம்: செல்வன் ந.ரஞ்சீதபாலன் - ஹாட்லிக்கல்லூரி, பருத்தித்துறை.
5ஆம் இடம்: செல்வி பா.சுபா - வடஇந்து மகளிர் கல்லூரி, பருத்தித்துறை.

**மத்திய பிரிவு**
1ஆம் இடம்: செல்வன் த.திருவாழ்மார்பன் - புற்றளை மகா வித்தியாலயம்.
2ஆம் இடம்: செல்வன் நா.டிக்கன் - நெல்லியடி மத்திய மகாவித்தியாலயம்.
3ஆம் இடம்: செல்வி த.இந்திகா - நெல்லியடி மத்திய மகாவித்தியாலயம்.
4ஆம் இடம்: செல்வி த.அஜிந்தா - வீரசிங்கம் மகாவித்தியாலயம், மீசாலை.
5ஆம் இடம்: செல்வன் வ.சாந்தகுமார் - வீரசிங்கம் மகாவித்தியாலயம், மீசாலை.

**கீழ்ப்பிரிவு:**
1ஆம் இடம்: செல்வி பா.தர்மினி - வடஇந்து மகளிர் கல்லூரி, பருத்தித்துறை.
2ஆம் இடம்: செல்வி சா.மதுசூதனா - வடஇந்து மகளிர் கல்லூரி, பருத்தித்துறை.
3ஆம் இடம்: செல்வி பா.ரோகினி- வடஇந்து மகளிர் கல்லூரி, பருத்தித்துறை.
செல்வி ஸ்ரீ.தர்ஷிகா- விக்னேஸ்வராக் கல்லூரி, கரவெட்டி.

இவர்களுக்கான பரிசில்களை 13-10-2002 ஞாயிற்றுக்கிழமை நண்பகல் 12 மணிக்கு புதிய வசந்த மண்டபத்தில் அறங்காவலர் சபைத் தலைவர் திரு.இ. அன்னலிங்கம் அவர்கள் இம்மாணவர்களுக்கு வழங்கி அவர்களை ஊக்குவிப்பார்கள்.

- அறங்காவலர் சபை.
துன்னாலை வடக்கு, புலோலி. (9252)

# ஒளி நிறுவன பரிசளிப்பு

வடமராட்சி,ஒக்.10

பருத்தித்துறை ஒளி நிறுவனம் நடத்திய சர்வதேசத் தினங்களுக்கான பரிசளிப்பு விழா இன்று வியாழக்கிழமை வதிரி வடமத்திய கல்லூரியில் ஒளி நிறுவனத் தலைவர் இ.ஸ்ரெனிஸ்லாஸ் தலைமையில் நடைபெறும்.

இவ்விழாவில் யாழ்ப்பாணம் போரூட் திட்ட முகாமையாளர் செல்விமாரன் பிறன்ஸ்விக் பிரதம விருந்தினராகவும், கரவெட்டி பிரதேச செயலக சமூகசேவை உத்தியோகத்தர் க.தியாகராசா கௌரவ விருந்தினராகவும் கலந்துகொள்வார்கள்.

சிறப்பு விருந்தினர்களாக வடமராட்சி வலய பிரதிக்கல்விப் பணிப்பாளர் கு.இராசேந்திரன், யாழ்.கிழக்கு போரூட் திட்ட இணைப்பாளர் அகடன் கென்ஸ் சாண்டிங், வட.மத்திய கல்லூரி அதிபர் திருமதி வி.சுகுமாரன் ஆகியோர் கலந்துகொள்வார்கள்.

கடந்த ஜூன் மாதம் 26ஆம் திகதி நடைபெற்ற சர்வதேச போதைப் பொருள் எதிர்ப்பு தினம், கடந்த 3ஆம் திகதி நடைபெற்ற சர்வதேச நல்லொழுக்க தினம் ஆகியவற்றையொட்டி ஒளி நிறுவனமும், வடமராட்சி கல்வி வலயமும் இணைந்து நடத்திய பாடசாலை மட்டப் போட்டிகளில் வெற்றிபெற்ற மாணவர்களுக்கு இவ்விழாவில் பரிசில்கள் வழங்கப்படும். (ஓ-173)

---

**Group Classes**

**2003 இரசாயனவியல் 2004**

புதன், வியா. 5.00 - 6.30p.m. (புதிய நேரம்)
By: **வாகீசன்**
சனி, ஞாயிறு 5.00 - 6.30p.m. (புதிய நேரம்)

*ஆரம்பம்: 16.10.2002* — 19.10.2002
*இடம்:* **Front Lane,** திருநெல்வேலி.
*தொடர்பு:* 021-222 3370 (9242)

---

**பிற்போடப்பட்டுள்ளது**

கரவெட்டி மேற்கு நவசக்தி விளையாட்டுக் கழக அபிவிருத்தி நிதிக்காக இன்று (10.10.2002) வியாழக்கிழமை நடத்தப்படவிருந்த அதிர்ஷ்டலாபச் சீட்டிழுப்பு தவிர்க்க முடியாத காரணத்தினால் பிற்போடப்பட்டு எதிர்வரும் 11.11.2002 அன்று நடைபெறுமென அறியத்தருகின்றோம்.

- செயலாளர்.
(9251)

# மரண அறிவித்தல்கள்

## அமிர்தலிங்கம் இராசையா

(இயக்குநர், மலாயன் கபே, யாழ்ப்பாணம்)

வேலணையைச் சேர்ந்த அமிர்தலிங்கம் இராசையா அவர்கள் 08.10.2002 செவ்வாய்க்கிழமை இரவு கொழும்பில் காலமானார்.

கொழும்பில் நடைபெறும் அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

*கொழும்பு முகவரி:*
79, W.A.சில்வா மாவத்தை,
கொழும்பு - 6.
T.P.: 01-508490 (9250)

தகவல்:
கா.அருள்தாஸ்
*144/6, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.*

## திருமதி குமாரசாமி சிவபாக்கியம்

காரைநகர், வலந்தலையைப் பிறப்பிடமாகவும் யாழ்ப்பாணம், நாவலர் வீதியை வசிப்பிடமாகவும் தற்போது பொஸ்வெல் பிளேஸ், கொழும்பை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி குமாரசாமி சிவபாக்கியம் நேற்று (09.10.2002) புதன்கிழமை கொழும்பில் காலமானார்.

அன்னார் கந்தப்பு - நாகம்மா தம்பதியரின் கனிஷ்ட புதல்வியும் தம்பையா - வள்ளியம்மை தம்பதியரின் மருமகளும் த.குமாரசாமி அவர்களின (த.குமாரசாமி ரெக்ஸ்ரைல்ஸ்) அன்பு மனைவியும் சிவகுமார் (S.S.E. கொழும்பு - 11), உ.சிவமலர் (அமெரிக்கா), திருவரன் (புள்ளிவிபர திணைக்களம், கொழும்பு), சுரேஸ் (கனடா), விமலகுமார் (த.குமாரசாமி ரெக்ஸ்ரைல்ஸ், த.குமாரசாமி அன்சன்ஸ் பங்களாரும்) ஆகியோரின் அன்புத் தாயாரும் சுதா (கொழும்பு), உதயகுமார் (அமெரிக்கா),வரதப்பிரியா (கொழும்பு), துஸ்யந்தி (கொழும்பு), இராஜவ்குமார் (யாழ்ப்பாணம்) ஆகியோரின் அன்பு மாமியாரும் திருமதி இராஜலட்சுமி, இராசதுரை ஆகியோரின் சகோதரியும் கஜன் (கொழும்பு), மெதுசன் (கொழும்பு), காருன்னியா (கொழும்பு) ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
த.குமாரசாமி (கணவர்).

*352, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.*
T.P. 2555 (9253)

*11A, பொஸ்வெல்ட்பிளேஸ், வெள்ளவத்தை, கொழும்பு - 06.*
T.P. 501185, 360659

## கந்தையா கதிரவேலு

(Former Factory Officer - Pettiagala Balangoda)

அராலி வடக்கு, வட்டுக்கோட்டையைப் பிறப்பிடமாகவும், வைமன் வீதி, நல்லூரை வசிப்பிடமாகவும், உயரப்புலம், ஆனைக்கோட்டையைத் தற்காலிக வசிப்பிடமாகவும் கொண்ட கந்தையா கதிரவேலு நேற்று (09.10.2002) புதன்கிழமை அதிகாலை இறைவனடி சேர்ந்துவிட்டார்.

அன்னார் கந்தையா - செல்லம்மா தம்பதிகளின் கனிஷ்ட புதல்வரும், தையல்நாயகியின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற குலக்கொழுந்து, தவக்கொழுந்து காலஞ்சென்ற சிவானந்தன் ஆகியோரின் சகோதரனும், காலஞ்சென்ற ஸ்பென்சர் செல்லத்துரை - அன்னப்பிள்ளை தம்பதிகளின் மருமகனும், குணேந்திரன் (ஜேர்மனி), ரவீந்திரன்(ஜேர்மனி), நளினி ஆகியோரின் பாசமிகு தந்தையும் கௌரி (ஜேர்மனி), நந்தினி (ஜேர்மனி), ஜெயபாலன் (சிவா ஸ்ருடியோ, மானிப்பாய்) ஆகியோரின் அன்பு மாமனாரும், இந்திரஜித், ஜெனனி, கார்த்திகா, காஞ்சனா, ரிஷிபாலன், சாரங்கன் (மாணவன், யாழ்.இந்து) ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் அவரது இல்லத்தில் இன்று (10.10.2002) வியாழக்கிழமை முற்பகல் 11.30 மணிக்கு(புதிய நேரம்) நடைபெற்று பூதவுடல் ஆனைக்கோட்டை கரையாம்பிட்டி மயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

தயவுசெய்து இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*உயரப்புலம், ஆனைக்கோட்டை.* (9257)

தகவல்:
க.ஜெயபாலன் (*மருமகன்*)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# றிவித்தல்

## பகம் (வரைவுள்ளது)

வித்தல் மூலம் என்மீது பாரிக்கப்பட்ட அதிகாரங்களைக் கொண்டு
ளரும் அவர்களால் ஆக்கப்பட்டு 19.05.1998ஆம் திகதிய 1928/6
ட பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்களின் கிளைக்குழுக்களைத்
ளத் தெரிவுசெய்வதற்கான கிளைப் பொதுச் சபைக்கூட்டங்களை
ளதுடன் மேற்படி உபவிதியின் பிரிவு 7இன்படி அக்கூட்டங்களை
றன்.

அனுப்பப்பட்டுள்ளது. இருப்பினும் அநேகமான அங்கத்தவர்கள்
ட தங்களது கிளைக்கு குறிப்பிட்ட நேரத்திற்கு வந்து கிளைப்

பொதுச்சபை நடத்தப்படும்

ப.நோ.கூ.சங்க தலைமைக் காரியாலயம், துர்க்காபுரம்
ப.நோ.கூ.சங்க தலைமைக் காரியாலயம், துர்க்காபுரம்
ப.நோ.கூ.சங்க தலைமைக் காரியாலயம், துர்க்காபுரம்
ர் கிளைக்கட்டடம், துர்க்காபுரம்
ர் கிளைக்கட்டடம், வவுணாவத்தை
ம் மகாவித்தியாலயம்
ம் மகாவித்தியாலயம்
ம் மகாவித்தியாலயம்
ம் மகாவித்தியாலயம்
ர் கிளைக்கட்டடம், பன்னாலை
லை மெய்கண்டான் மகாவித்தியாலயம்
லை மெய்கண்டான் மகாவித்தியாலயம்
ாதன் கல்லூரி, மருதனார் மடம்

ாதன் கல்லூரி, மருதனார் மடம்
ாதன் கல்லூரி, மருதனார் மடம்
ாதன் கல்லூரி, மருதனார் மடம்
ாதன் கல்லூரி, மருதனார் மடம்
ாதன் கல்லூரி, மருதனார் மடம்
ாதன் கல்லூரி, மருதனார் மடம்
கால் மகாஜன வித்தியாலயம்
கால் மகாஜன வித்தியாலயம்
கால் மகாஜன வித்தியாலயம்
டடம் யாழ்.நிவாரணக் கிளை, றக்கா றோட்
ன் கிளைக்கட்டடம், இளவாலை
நிவாரணக் கிளைக் கட்டடம்
ம் கிளைக் கட்டடம், குட்டியப்புலம்

ன் கிளைக் கட்டடம், தெல்லிப்பழை கிழக்கு

**ஒப்பம் செ.கனகசபாபதி,**
*கூ.அ.உ.ஆணையாளர்,*
*யாழ்.மாவட்டம்.*

ங்கினர் அல்லது 25 பேர் எது குறைவோ அத்தொகையாகும்.
பையைக் கோருவார். இவர்களுள் ஆகக்குறைந்தது இருவர் (02)

தரிவு மேற்கொள்ளப்படும்.
மூலம் அறிவிப்பார்.

தண்டனைக்குத் தீர்ப்பளிக்கப்பட்டவர்.

லும் தவறுசெய்தவர்.

கொடையைப் பெறுபவர்.

னையிலோ, கொள்வனவிலோ அல்லது சங்கத்தின் நிதியோடு சம்பந்
நேர்முகமாகவோ அக்கறை கொண்டிருப்பவர்.
ளானவர்.

ஒருவர்.
னால் அல்லது கூட்டுறவுச் சங்கங்களின் சட்டத்தின் பிரிவு 6(2) இன்

# ஈழப்பெண்களின் வீர வரலாற்றுக்கு அடி எடுத்துக்கொடுத்த வீராங்கனை

**விடுதலைப் புலிகளின் 2ஆம் லெப்டினனட் மாலதியின் 15ஆவது நினைவு நாளும், தமிழீழப் பெண்கள் எழுச்சிநாளும் இன்று அனுஷ்டிக்கப்படுகிறது. அதனையொட்டி இந்த ஆக்கம் பிரசுரமாகிறது.**



பெண்கள் எவரும் வீட்டைவிட்டு வெளியே வராத - வெளி உலகைப் பார்க்க அனுமதிக்கப்படாத கால கட்டத்தில் - அந்நியரின் ஆக்கிரமிப்புக்கு எதிராக, ஆண்களுக்கு நிகராக ஆயுதம் ஏந்திப் போராடப் புறப்பட்டவர் 2ஆம் லெப்டினனட் மாலதி.

இன்று உலகமே வியந்து நோக்க - அரிய பல சாதனைகளைப் படைத்துக் கொண்டிருக்கும் தமிழீழ விடுதலைப்புலிகளின் பெண் புலிகளுக்கு அடி எடுத்துக் கொடுத்தவர் அவர்.

தமிழீழ போராட்ட வரலாற்றில் முதன்முதலில் வீரச்சாவடைந்த பெண் புலியாகத் திகழ்கிறார் மாலதி.

பெண்கள் மீது பாரிய அழுத்தங்களைப் பிரயோகித்துவரும் சமூகத்துக்கும், தமிழ் இனத்தின் மீது வன்முறைகளையும் ஒடுக்குமுறைகளையும் கட்டவிழ்த்துவிட்ட பேரினவாதத்துக்கும் ஒரு பெரும் சவாலாக தலை நிமிர்த்திய இந்தப் புலிமகளின் வழியில் பெண்கள் தரைப்புலிகளாய், கடற்புலிகளாய், உலகமே வியந்து பார்க்கும் கரும்புலிகளாய் தமது பணி முடித்திருக்கின்றார்கள்.

தமிழீழ விடுதலைப் புலகளின் முதலாவது பெண்கள் படையணி பயிற்சி முடித்து பின்னர் பணி முடிப்பதற்காக ஆயுதங்களுடன் வெளியே வந்தபோது, எமது தமிழினம் ஒரு தடவை தனது நெஞ்சை நிமிர்த்திக் கொண்டது.

அடுக்களைக்குள் இருந்து அகப்பையேந்திய பெண்கள் அடுக்களையிலிருந்து வெளியே காலடி எடுத்து வைத்தார்கள். தங்க மாலைகளைக் கழுத்தில் அடுக்கியிருந்த பெண்ணினம், அன்று நஞ்சுமாலையை அணிந்து வந்த பெண்புலிகளைப் பார்த்து வியந்துதான் போனது.

**அந்புதன்**

இந்த முதலாவது மகளிர் படையணியில் முக்கியமான புள்ளியாய் திகழ்ந்து சாதனை படைத்தவர் 2ஆம் லெப்.மாலதி.

'அமைதிப்படை' என்ற பெயரில் எமது மக்களைக் காப்பதற்கென்று இங்கு வந்த இராணுவம், எமது மக்களை ஈவிரக்கமற்ற முறையில் கொன்றொழித்தது. பெண்களை கடித்துக் குதறியது. அந்தவேளையில், இந்திய வல்லாதிக்கத்தை எதிர்த்துப் போராட வேண்டிய நிலைக்கு புலிகள் தள்ளப்பட்டனர்.

1987ஆம் ஆண்டு, ஒக்ரோபர் மாதம் 10ஆம் திகதி கைதடிப் பகுதியில் இருந்து கோப்பாய்ப் பகுதியை நோக்கி முன்னேற முயன்றது இந்திய இராணுவம். எதிரியின் அந்த முன்னேற்றம் அனுமதிக்கப்பட்டால் எமது மக்களுக்கு ஏற்படக்கூடிய ஆபத்துக்களை உணர்ந்துகொண்ட புலிகள், கோப்பாயில் வைத்து இந்தியப் படையை வழிமறித்தனர்.

அப்போது இடம்பெற்ற நேரடி மோதலில் இன்னுயிர் ஈந்தார் இந்தப் புலிமகள்.

அன்று மாலதி எடுத்துக்கொண்ட அந்தத் தளரா உறுதியின் வழியில், இன்று 3 ஆயிரத்து 766 பெண்புலிகள் இனத்துக்காகத் தம் இன்னுயிர் ஈந்துள்ளனர். மேலும் ஆயிரம் ஆயிரமாய் பெண் புலிகள் சாதனைகளுடன் வெற்றி நடைபோடுகின்றனர்.

தீரம்மிக்க மாலதியின் 15ஆவது ஆண்டு நிறைவு நாளான இன்று, தமிழ் மண் எங்கிலும் பெண்கள் எழுச்சி தினமாக அனுஷ்டிக்கப்படுகிறது.

இந்த நாளில் ஈழப் பெண்கள் மீதான சமூகப் பொருளாதார அடக்குமுறைகள் நீங்கி, வாழ்வில் அவர்களை மேலுறச் செய்வது தமிழ்மக்கள் அனைவரினதும் வரலாற்றுக் கடமையாகும். ☆

# உளநலப் பாதிப்பு தீராதநோயல்ல; தீர்க்கப்படக்கூடிய பிரச்சினையே!

**உலக உளநலதினம் இன்றாகும். அதனையொட்டி இந்த ஆக்கம் பிரசுரமாகிறது.**

சுகதேகியாகவும் தனது அன்றாடக் கடமைகளையும், பணிகளையும் சரிவரச் செய்யக்கூடியவராகவும் இருப்பவரே உளநலம் உடையவராகக் கருதப்படுகிறார்.

உளப் பிரச்சினையுடைய ஒருவருக்குப் பல குழப்பங்கள் ஏற்படுகின்றன. அவற்றில் நித்திரைக் குழப்பம், ஓய்வெடுத்தலில் பிரச்சினை, பசியின்மை, குடும்பத்தினரோடு முரண்படல், மற்றவர்களுடன் உறவைச் சரியாகப் பேணமுடியாமை போன்ற குறைபாடுகளைக் குறிப்பிடலாம்.

ஒருவருக்கு ஏற்படுகின்ற எல்லா உளநலப் பிரச்சினைகளையும் "மன நோய்" என்று சொல்லிவிடமுடியாது. வாழ்க்கையில் ஏற்படுகின்ற துன்பங்களுக்கும், கஷ்டங்களுக்கும் முகம் கொடுக்க நேரும்போது ஒருவர் சஞ்சலப்படலாம்; கவலைப்படலாம் அல்லது அச்சப்படலாம். இவை உடற் குணங்குறிகளாகவோ, உளக் குணங் குறிகளாகவோ வெளிப்படுத்தப்படுகின்றன. ஆரம்பத்திலேயே இவ்விதமான தன்மைகள் தீர்க்கப்படாவிட்டால் பாரிய உளப்பாதிப்பும், உடல் நோய்களும் உருவாகும் நிலை ஏற்படும்.

மனிதனைச் சஞ்சலப்படுத்தும் காரணிகளையும், அவன் முகம் கொடுக்கவேண்டிய சில பொதுவான பிரச்சினைகளையும் உளப்பிரச்சினைக்கான காரணங்கள் எனக்கூறலாம். அவற்றில் குறிப்பிடத்தகுந்த காரணங்கள் வருமாறு:-

☆ வேலையில் ஏற்படும் நெருக்கீடுகள் (உ+ம்:- மேலதிகாரிகளால் ஏற்படுத்தப்படும் அழுத்தம், அளவுக்கு அதிகமான வேலை).

☆ நாட்பட்ட நோய்கள் (உ+ம்:- கை, கால் விளங்காமை).

☆ குடும்பத்தில் ஏற்படும் நோய்கள் அல்லது இழப்புக்கள் (உ+ம்:- வேலையை இழத்தல், சொத்துக்களை இழத்தல், உறவினரை இழத்தல்).

☆ குடும்பத்தினருடன் அல்லது வாழ்பவருடன் ஏற்படும் தவறான புரிந்துணர்வுகள்.

☆ வறுமை.

☆ மது மற்றும் போதைவஸ்துக்களுக்கு அடிமையாதல்.

☆ ஏமாற்றம் (அடையமுடியாத எதிர்பார்ப்புகள்).

☆ திருமணப் பிரச்சினைகள்.

☆ தொடர்ந்த இடப்பெயர்வுகள்.

☆ காயங்கள் (உ+ம்: போரால், வீட்டு வன்முறையால்).

☆ பாலியல் வன்முறைகள்.

☆ சித்திரவதைகள்.

வாழ்க்கையில் எல்லோருக்கும் பிரச்சினைகள் ஏற்படுகின்றன. அவற்றிற்கு எல்லோருமே முகங்கொடுக்க வேண்டியேற்படுகின்றது. ஆனால், அநேகமானவர்கள் அவற்றிற்கு ஈடு கொடுத்து அவற்றிலிருந்து மீண்டு விடுவர்; சிலர் அவற்றிற்கு ஈடுகொடுக்க முடியாமல் உடல், உளப் பாதிப்படைவர். அவ்வாறானவர்களுக்கு உளப் பிரச்சினையோடு தொடர்புடைய சில பொதுவான குணங்குறிகள் ஏற்படுகின்றன. தலையிடி, களைப்பு, தலைப் பாரம், நெஞ்சுப் படபடப்பு, மூச்சுவிடக் கஷ்டமாக இருப்பதாக உணர்தல்,

**இர.சந்திரசேகரசர்மா**
*திட்ட இணைப்பாளர்,*
*உளசமூக நிகழ்ச்சித்திட்டம்,*
*சாந்திகம்.*

வாந்தி வருவதுபோலிருத்தல் அல்லது வயிற்றுவலி (வயிற்றுப்புண்), பசியின்மை, குறிப்பிட்டுச் சொல்ல முடியாத நோ, நித்திரைக் கோளாறுகள் (உதாரணம் குறைந்தளவு அல்லது குழப்பமான நித்திரை, தீய பயங்கரக் கனவுகள்) ஆகியவை அவற்றில் சிலவாகும்.

உளப்பிரச்சினைக்குள்ளானவர்களுக்கு உளரீதியாகவும் பாதிப்புகள் ஏற்படுகின்றன. அவையாவன:-

★ பயம், கோபம்.

★ துக்கம், அழுகை அல்லது தனிமை உணர்ச்சி.

★ தேவைக்கு மிதமிஞ்சிய யோசனை.

★ மனதை ஒருமுகப்படுத்த முடியாமை.

★ ஒரே நிகழ்ச்சியைத் திரும்பத் திரும்ப நினைத்தல்.

★ பிறருடன் அடிக்கடி வாக்குவாதப்படல், புரிந்துணர்வின்மை.

★ அடிக்கடி மாறும் மனநிலை-எரிச்சல்படல்.

★ நம்பிக்கையற்ற தன்மை.

★ ஆபத்தான நடவடிக்கைகளில் ஈடுபடல் (விபத்து, சட்டவிரோதமான நடவடிக்கைகளில் ஈடுபடுதல், வன்முறைகளில் ஈடுபடல்).

இத்தகைய பாதிப்புகளுக்குட்பட்டவர்கள் இவற்றிலிருந்து மீள சில பொதுவான வழிமுறைகளை மேற்கொள்ளலாம். அவையாவன:-

✦ நம்பிக்கையானவர்களுடன் பிரச்சினைகள் பற்றிக் கதைக்கலாம்.

✦ குடும்ப, சமூக உதவியைப் பெற்று பிரச்சினையைப் பரிமாறிக் கொள்ளல்

✦ ஊர்ப்பெரியவர்கள், சமயத் தலைவர்கள், வயதுமுதிர்ந்தோர், ஆசிரியர்கள், சுகாதாரத் தொண்டர்கள் ஆகியோரிடமிருந்து உதவி பெற்றுக் கொள்ளல்.

✦ பிரார்த்தனைகளில் ஈடுபடல்.

✦ சுவாசப் பயிற்சி, பிராணயாமம், தியானம் போன்ற தளர்வுப் பயிற்சிகளில் ஈடுபடல்.

✦ விளையாட்டுக்கள், பொழுது போக்கு நிகழ்ச்சிகளில் பங்குபற்றுதல்.

✦ சமூகசேவைகளில் ஈடுபடல்.

✦ நாளாந்தம் செய்யும் வழமையான வேலைகளிலும், வீட்டை நிர்வகிப்பதிலும் கூடிய கவனம் செலுத்துதல்.

✦ உளவள ஆலோசகரின் துணையை நாடுதல்.

குடும்பப் பிரச்சினைகளுக்கு பெரும்பாலும் மதுபோதைப் பழக்கமே காரணமாகின்றது. நீண்டகால மதுப்பழக்கத்தை முற்றாகவிட விரும்புகிறவர்கள், யாழ்.போதனா வைத்தியசாலையில் உளநலப் பிரிவில் வாராந்தம் வியாழக்கிழமை காலையில் நடைபெறும் குழுச் சிகிச்சையின்போது தகுந்த வைத்திய ஆலோசனை பெறலாம். தெல்லிப்பழை வட்டார வைத்தியசாலையிலும், பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையிலும் இயங்கும் உளநலப் பிரிவுகளில் வேண்டிய உதவிகளைப் பெற்றுக்கொள்ளலாம்.

உளவளத்துணை பெறவிரும்புபவர்கள் "சாந்திகம்" நிலையத்தையும், சிறுவர் சம்பந்தமான உளப்பிரச்சினைகளைத் தீர்க்கவேண்டியவர்கள் "சுகவாழ்வு" (WHC) நிலையத்தையும், குடும்பப் பிரச்சினைகளைத் தீர்க்கவிரும்புபவர்கள் "அகவொளி" நிலையத்தையும் நாடி வேண்டிய உதவிகளையும் வழிகாட்டல்களையும் பெற்றுக்கொண்டு அமைதியான, சுகமான வாழ்வு வாழ வழிவகுத்துக் கொள்ளலாம். ✪

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2ம் லெப். மாலதி நினைவு நாள்

# தமிழீழ பெண்கள் எழுச்சி நாள் 10.10.2002

2ம் லெப். மாலதி நினைவு நாளான, தமிழீழ பெண்கள் எழுச்சி நாள் நிகழ்வுகள் வன்னிப் பெருநிலப்பரப்பு திறந்த வெளியரங்கில் நடைபெறக் காத்திருக்கின்றது...

**தமிழீழ விடுதலைப் புலிகளின் மகளிர் படையணிகள் ஒருங்கிணைந்து நடாத்தும்**

# மாபெரும் எழுச்சி நிகழ்வு




- மகளிர் படையணியின் இராணுவ அணிவகுப்புகள்
- மகளிர் படையணியின் போராட்ட வரலாற்றைச் சித்தரிக்கும் ஊர்திகள் பவனி
- உயிர்க் கவிதையின் உயர் வேதம்.... (நாடகம்)
- உண்மைச் சம்பவங்களைத் தாங்கிய உயிரை உருக்கிடும் கலை நிகழ்வுகள்
- விசேட படையணியின் வீர தீரச் செயல்கள்
- தமிழீழ இசைக்குழுவின் இசைவார்ப்புகள்
- அமெரிக்காவின் 'கிறீன் பரே' அணியினரிடம் பயிற்சிகள் [illegible] சிறீலங்காவின் One Commondo, Two Commondo [illegible] அணிகள் மகளிர் படையணியின் புதிய போர்த் [illegible]ரோபாய யுத்தியினால் முறியடிக்கப்பட்ட [illegible] குளச் சமரின்' மாதிரி வடிவ நிகழ்வு.
- இன்னும் பல நிகழ்வுகளும் இடம்பெறக் காத்திருக்கின்றன........

விழ்ந்தது விதை
எழுந்தது பயிர்
கடந்தது நெருப்பு
உயர்ந்தது கரம்.

பார்ப்போரைக் கவர்ந்திழுக்கும்... கேட்போரை மெய்சிலிர்க்க வைக்கும்...
நேற்று எழுந்த எரிமலையை அணைத்தவர்கள். இன்று சமாதானப் பாதைக்கு வழி அமைத்தவர்கள்.
இந்த அக்கினிப் பூக்களா...! நீங்களே வியந்து நிற்க, உங்கள் பிள்ளைகள் வெற்றியோடு உங்களை நோக்கி...
.................................காணத்தவறாதீர்கள்................................

மாலதி படையணியின் உருவாக்கத்தில்...
களத்தில் நிற்கும் போராளிகளின் குரலாக வெளிவருகின்றது....

## வெஞ்சமரின் வரிகள்
பாடல் ஒலிப்பேழை




அன்பரசி படையணி, தீலகா படையணி உட்பட ஆயிரக் கணக்கான பெண் போராளிகள் பங்குகொண்டு நடாத்தும் மாபெரும் எழுச்சி நிகழ்வினைக் கண்டு மகிழ அனைத்து மக்களையும் வருக.. வருக.. என அன்போடு அழைக்கின்றோம்.

காலம் - 10. 10. 2002
நேரம் - மாலை 3.00 மணி (தமிழீழ நேரப்படி)
இடம் - கிளிநொச்சி மத்திய விளையாட்டுத் திடல்.

நன்றி.
புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம்

மகளிர் படையணி,
தமிழீழ விடுதலைப் புலிகள், தமிழீழம்.

## "தமிழீழப் பெண்கள் எழுச்சி நாளுக்கு அனைத்து மக்களையும் வருக வருக என அன்போடு அழைக்கின்றோம்."

**இடம்:- கிளிநொச்சி மத்திய விளையாட்டுத் திடல்**
**நேரம்:- மாலை 3.00 மணிக்கு (தமிழீழ நேரப்படி)**
**காலம்:-10-10-2002**

(9256)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வடக்கு - கிழக்குப் பிரதேசத்தில்
# நிரந்தர சமாதானம் ஏற்பட்டபின் புனரமைப்புப் பணியில் படையினர்
## ஈடுபடுவர் என்கிறார் பிரிகேடியர் ஜயவர்த்தன

யாழ்ப்பாணம்,ஒக்.10

நிரந்தர சமாதானம் ஏற்பட்ட பின்னர் வடக்கு - கிழக்கில் படையினர் புனர்வாழ்வு, புனரமைப்புப் பணிகளில் ஈடுபடுவர். அதன் முதற்படியே பனை நடுகைத் திட்டம் என்று 52 ஆவது படையணித் தளபதி பிரிகேடியர் ஜெயவர்த்தன தெரிவித்தார்.

கைதடியில் அமைந்துள்ள பனை ஆராய்ச்சி நிலையத்துக்கு அருகில் உள்ள பிரதேசத்தில் 6 ஆயிரம் பனை விதைகளை நாட்டும் திட்டத்தை நேற்றுக் காலை ஆரம்பித்து வைத்துப் பேசுகையிலேயே அவர் இப்படிக் கூறினார்.

யாழ்.மாவட்ட கட்டளை அதிகாரி மேஜர் ஜெனரல் சரத்பொன்சேகாவின் பணிப்பின்பேரில் மேற்கொள்ளப்பட்ட இத்திட்டத்தை ஆரம்பிக்கும் இந்த நிகழ்வில் யாழ்.மாவட்ட சிவில் நிர்வாக அதிகாரி பிரிகேடியர் வசந்தகுமார, தென்மராட்சி- வடமராட்சி பிரதேச சிவில் நிர்வாக அதிகாரி கேணல் யாப்பா, பனை அபிவிருத்திச் சபை அதிகாரிகள் ஆகியோர் கலந்துகொண்டனர்.

இந்த நிகழ்வில் பேசுகையில், பிரிகேடியர் ஜெயவர்த்தனா மேலும் கூறியதாவது:-



மரம் நாட்டும் இயக்கத்தை ஏன் இராணுவத்தினர் செய்கிறார்கள் என்று சகலரும் ஆச்சரியப்படலாம். மரம் நாட்டும் திட்டத்தை முன்னெடுப்பதற்கு இருகாரணங்கள் உள்ளன.

புரிந்துணர்வு உடன்பாடு நடைமுறைக்கு வந்தபின் உருவாகியுள்ள சமாதான சூழ்நிலை ஒரு காரணம். நிரந்தர சமாதானம் ஏற்பட்டபின் வடக்கு - கிழக்கில் புனர்வாழ்வு, புனரமைப்புப் பணிகளைப் படையினர் மேற்கொள்ள வேண்டும் என்பது மற்றைய காரணமாகும். அதன் முதற் படியே மரம்நடும் திட்டமாகும்.

நிரந்தர சமாதானத்தீர்வு வெகு தூரத்தில் இல்லை. இன்று நாட்டப்படும் விதைகள் வளர்ந்து மரமாகி மீண்டும் யுத்தம் வேண்டாம் என்ற செய்தியைத் தெரிவிக்கும். குண்டுச் சத்தங்கள், துப்பாக்கிவேட்டுக்கள் இல்லாத ஒரு சூழல் எதிர்காலத்தில் வரும் - என்றார் அவர்.

(ஒ-3-8)



கைதடியில் நேற்றுப் படையினர் மேற்கொண்ட பனம் விதை நாட்டும் செயற்பாட்டின்போது இராணுவத்தினர் பனம் விதைகளை நாட்டுவதைப் படத்தில் காணலாம்.

# தமிழ்க் கைதிகள் விடுதலையாகும்வரை போராட்டங்கள் தொடரவேண்டும்!
## வண.பிதா ஏ.ஜ.பேர்ணாட் வலியுறுத்து

யாழ்ப்பாணம்,ஒக்.10

"நீண்ட காலமாகச் சிறைகளில் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் எமது உடன்பிறப்புக்கள் உடனடியாக விடுதலை செய்யப்படவேண்டும். இல்லையேல் தொடர்போராட்டங்களில் ஈடுபடவும் தயங்கமாட்டோம்."

சிறைகளில் விசாரணைகள் ஏதும் இன்றி வாடும் தமிழ்க் கைதிகளை விடுதலை செய்யக்கோரி நேற்று மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ். அலுவலகத்தின் முன்பு இடம்பெற்ற அமைதிப் போராட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றிய நீதி, சமாதான ஆணைக்குழுவின் தலைவர் வண.பிதா ஏ.ஜ.பேர்ணாட் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:-

நீண்ட காலமாக எதுவித விசாரணைகளும் இன்றி தமிழர்கள் தடுத்து வைக்கப்பட்டிருப்பது அநீதியான ஒரு செயலாகும். தமது விடுதலைக்காக அவர்கள் எத்தனையோ தடவைகள் பல வழிவகைகளையும் மேற்கொண்டு தற்பொழுது சாகும்வரை உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

இந்தக் கைதிகள் அனைவரும் விடுதலை செய்யப்படவேண்டும் என்று யாழ்.மாவட்டத்தில் உள்ள பொது அமைப்புக்கள் பல தடவைகள் பல்வேறு விதமான போராட்டங்களை முன்னெடுத்தபோதும் இன்றைய போராட்டம் மிகவும் உணர்வுபூர்வமாக அமைந்துள்ளது. இது தொடர்பாக நீதி, சமாதான ஆணைக்குழுவினால் பிரதமருக்கும் மகஜர் ஒன்று அனுப்பி வைக்கப்பட்டுள்ளது என்றார்.

அன்னையர் முன்னணியின் பிரதிநிதி திருமதி கௌரி வேல்சாமி தனதுரையில் தெரிவித்ததாவது:-

விசாரணைகள் ஏதுமின்றி பல வருடங்களாகச் சிறைகளில் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் தமிழ் அரசியல் கைதிகள் யாவரும் எவ்வித நிபந்தனையுமின்றி உடனடியாக விடுதலை செய்யப்படவேண்டும். இன்றைய சமாதானச் சூழலில் அவர்களும் தமது பெற்றோருடன் இணைந்துகொள்ள வேண்டும்.

பல வருடங்களாக உதவி செய்வோர் எவருமின்றி எமது பிள்ளைகள் பல துன்ப, துயரங்களை அனுபவித்து வருகின்றனர். அவர்கள் உடனடியாக விடுதலை செய்யப்படாதுவிட்டால் தொடர்ந்து நாம் எல்லோரும் அதற்காகப் போராடவேண்டும். நாம் இறந்தால் தமது உடல்களை பல்கலைக் கழக மருத்துவபீடத்துக்கு வழங்குமாறு அவர்கள் தெரிவித்துள்ளனர்- என்றார். அவர்களின் மனநிலையைப் பற்றி எண்ணிப் பாருங்கள். எவ்வளவு விரக்தி நிலையில் இந்த வார்த்தையை அவர்கள் சொல்லியிருப்பார்கள்.

எனவே, அவர்கள் விடுதலை செய்யப்படும்வரை நாங்கள் எல்லோரும் தொடர் போராட்டங்களை மேற்கொள்ள வேண்டும்.

- என்று அவர் மேலும் தெரிவித்தார்.

யாழ்.மாவட்ட மனிதநேய அமைப்புக்களின் ஒன்றியத் தலைவர் சு.பரமநாதன் தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் எஸ்.சந்திரசேகரசர்மா, மௌலவி சுபியான், பல்கலைக்கழக ஊழியர் சங்கத் தலைவர் எஸ்.கலாராஜ், மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ்.அலுவலக அதிகாரி ஆர்.பி.சந்திரசேகர ஆகியோரும் உரையாற்றினார்கள்.

(ஒ-10)

## உதவிகள் பற்றிப் பேச வந்த
# குவைத் பிரதிநிதிகள் குழுவை ஜனாதிபதி சந்திக்கவில்லை

கொழும்பு,ஒக்.10

இலங்கைக்கு விஜயம் செய்திருந்த குவைத் நாடாளுமன்ற உயர்மட்டக் குழு கடந்த 7ஆம் திகதி முற்பகல் 11 மணிக்கு ஜனாதிபதி சந்திரிகாவைச் சந்தித்து எதிர்காலத்தில் தம்மால் ஸ்ரீலங்காவுக்கு வழங்கப்படக்கூடிய உதவிகள் பற்றிக் கலந்துரையாட முன் ஏற்பாடு செய்திருந்தது.

குவைத் நாட்டின் நாடாளுமன்ற உறுப்பினர் மூவர் அடங்கிய அக்குழுவினர், ஒருமணி நேரமாக ஜனாதிபதி மாளிகையில் காத்திருந்தும் ஜனாதிபதியைச் சந்திக்கமுடிய வில்லை.

அத்தியாவசிய காரணத்தால் அச்சந்திப்பு இரத்துச் செய்யப்பட்டுள்ளதாக முன்னாள் வெளிநாட்டமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர் தெரிவித்ததையடுத்து, அதிருப்தியடைந்த அக்குழுவினர் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த தேநீர் விருந்திலும் கலந்துகொள்ளாது திரும்பிச் சென்றனர்.

இச்சந்திப்புப் பற்றிய செய்தி சேகரிக்க பெருந்தொகையான செய்தியாளர்களும் ஜனாதிபதி மாளிகையில் குழுமியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

(ஒ)

## தொகுப்பு நூல் வெளியீடு

சண்டிலிப்பாய்,ஒக்.10

"மானியூர் ரட்னேஸ்" எழுதிய ஏணி கவிதை - ஒவிய தொகுப்பு நூல் வெளியீட்டுவிழா நாளை வெள்ளிக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு கோப்பாயிலுள்ள தேசிய கல்வியியற் கல்லூரியில் நடைபெறவுள்ளது. மாணவர் மன்றத் தலைவர் தி.தயாபரன் தலைமையில் நடைபெறும் இவ்விழாவில் "செஞ்சொற்செல்வர்" ஆறு.திரு முருகன் ஆசியுரையையும், யாழ். பல்கலைக்கழக தமிழ்த்துறை சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி எஸ்.சிவலிங்கராசா அறிமுகவுரையையும் நிகழ்த்துவார்கள். முதன்மைவிருந்தினராக தேசிய கல்வியியற் கல்லூரி பீடாதிபதி கலாநிதி தி.கமலநாதன் கலந்துகொள்வார். சிறப்பு விருந்தினராக முன்னாள பலாலி ஆசிரியர் பயற்சிக் கலாசாலை அதிபர் கவிஞர் சோ.பத்மநாதன் கலந்துகொள்வார். வலிகாமம் கல்வி வலய உதவிக் கல்விப் பணிப்பாளர் திருமதி கோகிலா மகேந்திரராசா, வவுனியா பல்கலைக்கழக வளாக விரிவுரையாளர் கந்தையா ஸ்ரீ கணேசன் ஆகியோர் நூல் ஆய்வுரையை நிகழ்த்துவார்கள்.

(ஒ-135)

# அகதிகளின் கொடுப்பனவுகளை நிறுத்தி அதனை இலங்கைக்கு வழங்கவேண்டும்!
## மேற்குலக மக்களின் அபிப்பிராயம் இதுவாம்

யாழ்ப்பாணம்,ஒக்.10

ஜேர்மனி உட்பட மேற்கு நாடுகளில் தஞ்சம் அடைந்துள்ள இலங்கையர்களுக்கு வழங்கப்படும் அகதிகளுக்கான கொடுப்பனவுகள் நிறுத்தப்பட்டு, அப்பணம் இலங்கையின் அபிவிருத்திக்கு வழங்கப்பட வேண்டும் என்பது மேற்குலக மக்களின் அபிப்பிராயமாகும்.

நேற்று யாழ்ப்பாணம் வருகை தந்த இலங்கைக்கான ஜேர்மனிய பிரதித் தூதுவர் ஹெய்ன்ஸ் கொப் மேற்கண்டவாறு கருத்து வெளியிட்டார்.

ஜேர்மன் தொழில்நுட்ப நிறுவனத்தின் அதிகாரிகள் சகிதம் யாழ்ப்பாணத்துக்கு நேற்று விஜயம் மேற்கொண்ட அவர் யாழ்.அரச அதிபர் செ.பத்மநாதனை யாழ்.செயலகத்தில சந்தித்த சமயம் இந்தக் கருத்தைத் தெரிவித்ததாக கூறப்படுகிறது.

ஜேர்மனியில் குடியுரிமை பெற்ற புலம் பெயர்ந்த இலங்கையர்கள் பெரும் எண்ணிக்கையானோர் ஜேர்மனியிலுள்ள இலங்கைத் தூதரகத்தில் இலங்கை வருவதற்கு விஸா பெறுகின்றனர். அவர்கள் இங்கு வந்து மீளக் குடியமர்கிறார்களா என்று ஜேர்மன் அதிகாரி அரச அதிபரிடம் கேள்வியெழுப்பியதாகவும் -

அவர்கள் இங்குள்ள நிலைமைகளை அறியவருகிறார்கள் இங்கு அவர்கள் தங்கவரவில்லை என்று அரச அதிபர் பதிலளித்ததாகவும் கூறப்படுகிறது.

ஜேர்மனி மற்றும் மேற்கு நாடுகளில தஞ்சமடைந்தவர்களுக்கு வழங்கப்படும் அகதிக் கொடுப்பனவுகளை நிறுத்தி, இலங்கையின் அபிவிருத்திக்கு அந்த நிதியை வழங்கவேண்டும் என்று அந்த நாடுகளில் வரியிறுப்பாளர்கள் அபிப்பிராயப்படுகின்றனர். இதுபற்றி தங்கள் அபிப்பிராயம் என்ன என அரச அதிபரிடம் கேட்கப்பட்டது.

சுமுகமான சூழ்நிலை இன்னமும இங்கு ஏற்படவில்லை. சுமுகமான சூழ்நிலையை நோக்கியதாக இன்றைய நிலை உள்ளது என்று அரச அதிபர் அதற்குப் பதிலளித்துள்ளார்.

ஜேர்மனிய தொழில்நுட்ப நிறுவனம் பல செயற்பாடுகளை இங்கு மேற்கொண்டுள்ளது. இந்தப் பணி தொடர்ந்து இடம்பெறவேண்டும் என்று அரச அதிபர் அவரிடம் கேட்டுள்ளார்.

## பனை நடும் திட்டம்

வலி.மேற்கு,ஒக்.10

அராலி, மூளாய், வட்டுக்கோட்டை பகுதியில் 5 ஆயிரம் பனம் விதைகளை நாட்டுவதற்கு திட்டமிடப்பட்டுள்ளது. பனை அபிவிருத்திச் சபையினரால் அராலி மத்தி, அராலி மேற்கு, மூளாய், வட்டுக்கோட்டை ஆகிய இடங்களில் உள்ள அரச காணிகளில் இந்த ஆண்டு 5 ஆயிரம் பனம் விதைகள் நாட்டப்படவுள்ளன.

வலிகாமம் மேற்குப் பிரதேச செயலகமும் பனை அபிவிருத்திச் சபையினரும் இணைந்து 5 ஆயிரம் பனம் விதைகளை நாட்டுவதற்கு திட்டமிட்டுள்ளது.

(ஒ-175)

# சாயி சிந்தனை



## சத்தியம் காத்தல்

ஒரு ரிஷி இறைவன் மேல் ஆழ்ந்த தியானத்தில் இருந்தார். "எப்போதும் சத்யத்தையே பேசுவது" என்ற தீர்மானத்தில் இருந்த அவரை, ஈஸ்வரன் சோதிக்க எண்ணினார். ஈஸ்வரன் ஒரு வேடனாக வேடம் தரித்து, ஒரு மானைத் துரத்தினார். மான் பயந்து பயந்து ஓடி முனிவரின் ஆச் சிரமத்துக்கு அருகில் இருந்த ஒரு புதரில் மறைந்து கொண்டது. இதனை முனிவர் கவனித்தார். வேடன் அந்த மானைப் பற்றிக் கேட்டபோது அவருக்கு தர்மசங்கடமாகிவிட்டது. 'நான் பார்க்கவில்லை! எனக்குத் தெரியாது!' என்று சொல்லமுடியாது. ஏனெனில் அது பொய்யாகும். அதே நேரத்தில் மான் இருக்கும் இடத்தைச் சொன்னால் வேடன் அதனைக் கொன்றுவிடுவான். அப்போது அந்தக் குற்றத்திற்கு தானும் ஆளாக வேண்டிவரும். அவர் ஈஸ்வரனை மனதாரப் பிரார்த்தித்து வழிகாட்டும்படி வேண்டினார். இறைவனது கருணையால் ஒரு சிறந்த யோசனை தோன்றியது. இறைவன் எப்போதும் உன்னுடன் இருக்கிறார். உன்னைச் சுற்றி உனக்கு மேலேயும் கீழேயும் இருந்து எப்போதும் உன்னைக் காத்து வழி நடத்துகிறார். அவர் அருகில் இருக்கையில் பயம் எதற்கு? ரிஷி கூறினார், "வேடனே! எது பேசாதோ அது கண்டது; எது பேசுமோ அது காணவில்லை" இப்படிச் சாதுரியமான பதிலைக் கூறியதால், அந்த முனிவர் தன் கொள்கையான சத்தியம் பேசுதலை நிலைநிறுத்தியது மட்டுமன்றி, அந்த மானின் உயிரையும் பாதுகாத்தார். உன்னுடையதும், மற்றவருடையதுமான கொள்கைளையும் பத்திரத்தன்மையையும் பாதுகாத்தலே உண்மையான யோகம். நாக்கின் உயிர் சத்தியம். தர்மம் என்பது கரங்களின் உயிர். அஹிம்சை என்பது இதயத்துக்கு உயிர்.

*(ஆதாரம்: சனாதன சாரதி)*





நேற்று யாழ்.பஸ் நிலையப் பகுதியில் நடைபெற்ற களேபரத்தை கட்டுப்படுத்தும் முயற்சியில் பொலிஸாரும் விடுதலைப் புலிகளின் பிரமுகர்களும் ஈடுபட்டிருப்பதை முதலாவது படத்திலும், [illegible] தடைப்பட்டதையடுத்து யாழ்.பஸ்நிலையப்பகுதியில் காத்திருக்கும் பொதுமக்களை அடுத்துள்ள படத்திலும் காணலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிக்கனக்கடன் பெற்றோருக்கு நிபந்தனையுடன் கூடிய சலுகை

யாழ்ப்பாணம்,ஒக்.10

கடந்த 1995ஆம் ஆண்டு காலப் பகுதிக்கு முன்னர் யாழ்.மாவட்ட சிக்கனக் கடன் வழங்கும் கூட்டுறவுச் சங்கங்களில் இருந்து கடன்களைப் பெற்றோர், இந்த வருட இறுதிக்குள் அவற்றை மீளச் செலுத்தும் பட்சத்தில், அவர்களுக்கு 25 வீத வட்டிச் சலுகை வழங்கப்படுமென யாழ்.மாவட்ட சிக்கனக் கடன் வழங்கும் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம் அறிவித்துள்ளது.

இது தொடர்பாக சமாச அதிகாரி ஒருவர் தகவல் தருகையில் கூறியதாவது:-

யாழ்.மாவட்டத்தில் சகல பகுதிகளையும் சேர்ந்த அங்கத்தவர்களுக்கும் எமது சங்கங்கள் கடன்களை வழங்கியுள்ளன. இவற்றில் பெரும்பாலான கடன்கள் மீளச் செலுத்தப்படாதுள்ளன. குறிப்பாகக் கோப்பாய், சாவகச்சேரி மற்றும் தீவகப் பகுதிகளைச் சேர்ந்த அங்கத்தவர்களின் கடன்கள் பெருமளவில் மீளச் செலுத்தப்படவில்லை.

போர்ச் சூழலை கருத்தில் கொண்டும், கடன் செலுத்தலை விரைவுபடுத்தும் நோக்கிலும், யாழ்.மாவட்டத்தின் சகல பிரதேச அங்கத்தவர்களுக்கும் 'வட்டிச் சலுகை' ஒன்றை அளிப்பதற்கு சமாசம் முடிவு செய்துள்ளது என்று தெரிவித்தார். (ஒ-9)

## சுண்டுக்குழி தபாலகத்துக்கு 'பக்ஸ்' வசதி

யாழ்ப்பாணம்,ஒக்.10

உலகத் தபால் தினத்தையொட்டி சுண்டுக்குழி தபால் நிலையத்துக்கு நேற்று முதல் 'பக்ஸ்' வசதி ஏற்படுததப்பட்டுள்ளது.

யாழ்.மாவட்டத்தில் இதுவரை காலமும் யாழ்.பிரதம தபாலகத்தில் மாத்திரமே பக்ஸ் வசதி இருந்தது. தற்பொழுது சுண்டுக்குழி தபால் நிலையத்துக்கும் இந்த வசதி ஏற்படுத்தப்பட்டுள்ளது.

எதிர்வரும் காலங்களில் ஏனைய தபால் நிலையங்களுக்கும் இந்த வசதி விஸ்தரிக்கப்படவுள்ளதாக வடமாகாண பிரதி அஞ்சல்மா அதிபர் என். ஜெயரத்தினம் தெரிவித்துள்ளார். (ஒ-10)

## தென்மராட்சியில் முதியோர், சிறுவர் தினவிழா

தென்மராட்சி,ஒக்.10

தென்மராட்சி பிரதேச செயலகம் நடத்தும் சர்வதேச சிறுவர் தின, முதியோர் வார விழா நாளை பி.ப. ஒரு மணிக்கு சாவகச்சேரி தென்னிந்திய திருச்சபை பாலர் பாடசாலை மண்டபத்தில் பிரதேச செயலர் செ.ஸ்ரீனிவாசன் தலைமையில் நடைபெறும்.

வலயப் பாடசாலை மாணவர்களிடையே நடத்தப்பட்ட போட்டிகளில் வெற்றி பெற்றோருக்கு பரிசில்கள் வழங்கப்படுமெனவும் - 'முதியோர்கள் சமூகத்தின் சுமைகளே' என்னும் தலைப்பிலான வழக்காடு மன்றமும் இடம்பெறுமெனவும் - அறிவிக்கப்பட்டுள்ளது.(ஒ-117)

# யாழ்.கிரிக்கெட் அணி நாளை கொழும்பு பயணம்

யாழ்ப்பாணம்,ஒக்.10

கொழும்பு வெஸ்லிக் கல்லூரி மைதானத்தில் இடம்பெறும் அகில இலங்கை ரீதியிலான கிரிக்கெட் சுற்றுப் போட்டியில் பங்கு பற்றுவதற்காக யாழ்.மாவட்ட பாடசாலைகள் கிரிக்கெட் அணி நாளை வெள்ளிக்கிழமை கொழும்பு புறப்படுகின்றது.

இந்த அணியில் இடம்பெற்றுள்ள வீரர்களின் விவரம் வருமாறு:-

பி.லவேந்திரா (தலைவர் - பரியோவான் கல்லூரி), சி.அகிலன் (பரியோவான் கல்லூரி), ஆர்.கிருஸ்ணராசா (யாழ்.இந்துக் கல்லூரி), எஸ்.கார்த்தீபன் (யாழ்.மத்திய கல்லூரி), எஸ்.லொயிட் (சென்.பற்றிக்ஸ் கல்லூரி), எஸ்.உமாநாத் (கொக்குவில் இந்துக் கல்லூரி), ஈ.ஐங்கரன் (கொக்குவில் இந்துக் கல்லூரி), எஸ்.விமலகாந் (யாழ்.மத்திய கல்லூரி).

அணியின் முகாமையாளராக எஸ்.சகாயராசாவும், பயிற்றுநராக வி.கே.சண்முகலிங்கமும், இணைப்பாளராக ரி.ஜெகநாதனும் கடமையாற்றவுள்ளனர். (எ-3)

## வட்டக்குளம் புனரமைப்பு

சண்டிலிப்பாய்,ஒக்.10

உலக உணவுத் திட்டப் பிரிவின நிதி ஒதுக்கீட்டுத் திட்டத்தின் கீழ் சண்டிலிப்பாய் பிரதேச செயலகப் பிரிவிலுள்ள சில்லாலை வட்டக்குளம் ஆழமாக்கப்பட்டு புனரமைப்பு செய்யப்படவுள்ளது. கடந்த வாரம் இதற்கான பணி ஆரம்பித்து வைக்கப்பட்டது. (ஒ-135)


நிரு ரியூசன் சென்ரர்
கோண்டாவில்
2002
DAY CLASS
2004
நாடகமும் அரங்கியலும்
ஆரம்பமாகியுள்ளது.
ஆசிரியர்:- நா.மதி (9268)

நிறைஞ்சனாஸ்
சங்கானை
இன்று முதல்
விக்ரம், காவேரி நடிப்பில்
காசி (ரீல்ஸ்)
காட்சிகள்: 11.00, 2.30, 6.00 (புதியநேரம்)
(C-24140)

ராஜா யாழ்ப்பாணம்.
மனோஜ், முரளி, பிரதியுக்ஷா
நடிப்பில்
இந்திய ஜனாதிபதி விருதுபெற்ற
கடல்பூக்கள்
10.30, 2.30, 6.30
(C-24065)

நாகம்ஸ் சுன்னாகம்
M.G.R, ராதாசலூஜா
நம்பியார் நடிக்க
இதயக்கனி
(ரீல்ஸ்)
காட்சிகள்: 11.00, 3.00 (பு.நே.)
(9247)


## பாராட்டி வாழ்த்துகின்றோம்



### திரு. மாணிக்கம் அனந்தராசன்

இலங்கை மின்சாரசபையில் 30 வருட சேவையைப் பாராட்டி, தலைமையகத்தின் ஏற்பாட்டில் 21.09.2002 அன்று கொழும்பில் கௌரவிக்கப்பட்ட அல்வாயூர்க் கவிஞர் செல்லையா வீதியைச் சேர்ந்தவரும் இ.மி.ச. பருத்தித்துறை மின்பாதையாளரும் அல்வாயூர் கவிஞர் நாடக மன்றத் தலைவருமான திரு.மாணிக்கம் அனந்தராசன் அவர்களை ஆலடி ஐங்கரன அருள் பெற்று நீடுழிவாழ நாமும் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

வாழ்த்துவோர்:
மாணிக்க மைந்தர்கள்
திரு.மா.அம்பிகைபாகன்,
திரு.மா.அழகானந்தன்,
திரு.மா.அருளானந்தன்.

ஆகாஷ் மணப்பந்தல் சேவை,
அம்பிகை,
அல்வாய். (C-24154)

## கண்ணீர் அஞ்சலி

எமது ஆலயத்தின் பூசகராக கடமையாற்றும்
தே.பாலச்சந்திர சர்மா அவர்களின் அன்புத் துணைவியார்

### திருமதி மதுமதி பாலச்சந்திர சர்மா

அவர்களின் திடீர் மறைவையொட்டி துயருற்றிருக்கும் குடும்பத்தாருக்கு எமது கண்ணீர் காணிக்கைகள் உரித்தாகுக.

நாரந்தனை சரவணை கர்ணைந்தோட்டம்
ஸ்ரீ சிவ சுப்பிரமணிய சுவாமி கோயில்
ஆலய பரிபால சபையினரும், மக்களும். (9270)

## கண்ணீர்க் காணிக்கை

எமது பணிமனையில் கிராம அலுவலராகக் கடமையாற்றும்
தே.பாலச்சந்திர சர்மா (J/51 கரம்பொன்) அவர்களது
அன்புத் துணைவியாா

### திருமதி மதுமதி பாலச்சந்திர சர்மா

அவர்கள் திடீர் மரணமான செய்திகேட்டு நாங்கள் துயர் அடைகின்றோம். அன்னாரின் இழப்பினால் பெருந்துயர் அடைந்திருக்கும் திரு.பாலச்சந்திர சர்மா அவர்களுக்கும் அன்னாரது உறவினர்களுக்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்து, அமரருக்கு கண்ணீர்க் காணிக்கையையும் சமர்ப்பிக்கின்றோம்.

நலன்புரிச்சங்கம்,
உதவி அரசாங்க அதிபர் பணிமனை,
ஊர்காவற்றுறை.
(C/24153)

## மரண அறிவித்தல்கள்

### பெரியதம்பி இரத்தினசிங்கம்

புன்னாலைக்கட்டுவன் வடக்கைப் பிறப்பிடமாகவும், ஈவினையை வதிவிடமாகவும் கொண்ட பெரியதம்பி இரத்தினசிங்கம் நேற்று (09.10.2002) புதன்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் இரத்தினேஸ்வரியின் அன்புக் கணவரும் அரிகரன் (ஈவினை கற்பக விநாயகர் சனசமூக நிலைய தலைவர், யாழ்.மாவட்ட தனியார் பார ஊர்தி கூட்டுறவுச் சங்கத் தலைவர், வலி.தெற்கு சனசமூக நிலைய சமாசத் தலைவர்), காலஞ்சென்ற புற்கலா, மாவீரர் கலியுகன் மற்றும் வராகினி, பூர்ணாதேவி ஆகியோரின் தந்தையும், நவரஞ்சனி, கமலேஸ்வரன் ஆகியோரின் மாமனாரும், சுஜீகரன், கஜந்தன், சுவஸ்திகா, ஜெசிகரன் ஆகியோரின் பேரனும் காலஞ்சென்ற துரைசிங்கம் மற்றும் தங்கத்திரவியம் ஆகியோரின் சகோதரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (10.10.2002) வியாழக்கிழமை பிற்பகல் 1 மணிக்கு நடைபெற்று, பூதவுடல் ஈவினை இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

ஈவினை,
புன்னாலைக்கட்டுவன். (9265)
தகவல்:
இ.அரிகரன் (மகன்)

### திருமதி மதுமதி பாலசந்திர ஐயர்

கல்வியங்காட்டைப் பிறப்பிடமாகக் கொண்ட திருமதி மதுமதி பாலச்சந்திர ஐயர் அவர்கள் நேற்று (09.10.2002) புதன்கிழமை காலமானார்.

அன்னார் பிரம்மஸ்ரீ தே.பாலச்சந்திரஐயர் ( கிராம அலுவலர், ஊர்காவற்றுறை பி.செயலகம்) அவர்களின் அன்பு மனைவியும், மதுஜினியின் அன்புத் தாயாரும், பிரம்மஸ்ரீ பாலேந்திரஐயர் (ஓய்வுபெற்ற மின் அத்தியட்சகர்) மீனாட்சி தம்பதிகளின் அருமை மகளும், தேவராசா ஐயர் - சரஸ்வதி தம்பதிகளின் அன்பு மருமகளும் மோகனரஞ்சன் (சுவீடன்), பிரதீபன் (ஹொலண்ட்) ஆகியோரின் அன்புச் சகோதரியும் பூமாவின் மைத்துனியும், பிரகாஷ், கஸ்தூரி ஆகியோரின் அன்பு அத்தையும் குகதாஸ சர்மா, சண்முக சர்மா, விஸ்வநாத சர்மா ஆகியோரின் அன்புப் பெறாமகளும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் அவரது இல்லத்தில் நேற்று (09.10.2002) புதன்கிழமை மாலை 5 மணியளவில் நடைபெற்றன.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

3ஆம் கட்டையடி,
கல்வியங்காடு (9264)
தகவல்:
தே.பாலச்சந்திர ஐயர் (கணவர்)

### வேலுப்பிள்ளை பொன்னம்பலம்

(அல்லாரை, அறுகம்புலம் ஆலய பரிபாலன சபை பொருளாளர்)

வெள்ளாம்போக்கட்டியைப் பிறப்பிடமாகவும் அல்லாரை தெற்கை வசிப்பிடமாகவும்கொண்ட வேலுப்பிள்ளை பொன்னம்பலம் நேற்று (09.10.2002) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வேலுப்பிள்ளை - வள்ளிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகனும் விநாசித்தம்பி - காசிப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மருமகனும் பகீரதியின் அன்புக் கணவரும் சத்தியமூர்த்தி (லண்டன்), சாரதாதேவி, சத்தியபாமா, பிரபாகரன் (அமெரிக்கா) ஆகியோரின் அன்புத் தந்தையுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (10.10.2002) வியாழக்கிழமை அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக பிற்பகல் 3மணியளவில் வெள்ளாம்போக்கட்டி கொப்புலோ இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

அல்லாரை தெற்கு,
மீசாலை. (C-24155)
தகவல்:
பகீரதி (மனைவி)


## அபிவிருத்தி அதிர்ஷ்டம்

உத்தியோகபூர்வ முடிவுகள்

| | |
|---|---|
| சீட்டிழுப்பு வாரம் | 412 |
| திகதி | 08.10.2002 |

டிக்கட்டின் நிறம் - நீலம்
செல்லுபடியாகும் தொடர் இல.
4503414-4516541

வெற்றி இலக்கங்கள்: 02 34 42 49

லக்கினம்: இடபம்



ஜக்பொட் பரிசு ரூபா. 1,617,250/- வெல்லப்பட்டது.

இந்த வெள்ளிக்கிழமைக்கான ஜக்பொட் ரூபா 1,000,000/-

| இணையும் இலக்கங்கள் | வெற்றியாளர் தொகை | பரிசுத் தொகை(ரூ.) | மொத்தப் பரிசுத் தொகை(ரூ.) |
|---|---|---|---|
| 1 இல | 288,181 | 10 | 2,881,810 |
| 2 இலக்கங்கள் | 26,442 | 20 | 528,840 |
| 1 இல + லக்கினம் | 26,247 | 30 | 787,410 |
| 2 இல + லக்கினம் | 2,364 | 100 | 236,400 |
| 3 இலக்கங்கள் | 704 | 500 | 352,000 |
| 3 இல + லக்கினம் | 69 | 5,000 | 345,000 |
| 4 இலக்கங்கள் | 03 | 100,000 | 300,000 |
| 4 இல + லக்கினம் | 01 | 1,617,250 | 1,617,250 |
| மொத்தம் | 344,011 | - | 7,048,710 |

மொத்தப் பரிசுத் தொகை ரூபா. 7,048,710/-

தொடர் இல. 5501159க்கு மேற்பட்ட சிவப்பு நிற டிக்கட்டுகள் 2002 ஒக்டோபர் 11ம் திகதி வெள்ளிக்கிழமை செல்லுபடியாகும். வெற்றி பெறும் டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

அபிவிருத்தி அதிர்ஷ்ட சீட்டிழுப்பில் பணப்பரிசு வெற்றி பெறாத டிக்கட்டுகளில் பஜாஜ் முச்சக்கர வண்டி வெற்றி பெறும் 5 டிக்கட்டுகளின் தொடர் இலக்கங்கள்
4505075-7-93
4509313-5-04
4514817-7-04
4505693-3-47
4507275-2-44

அபிவிருத்தி லொத்தர் சபை
இல. 33, சென்ற் மைக்கேல் வீதி, கொள்ளுப்பிட்டி, கொழும்பு 3.
PHOENIX O&M


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெண்களின் சமூக விருத்திக்கு தடையாகவுள்ள படையினர் அனைவரும் வெளியேறவேண்டும்

## புலிகளின் மகளிர் அரசியல் பிரிவு அறிக்கை

யாழ்ப்பாணம்,ஒக்.10

2ஆம் லெப். மாலதியின் நினைவு நாளையும், தமிழீழப் பெண்களின் எழுச்சிநாளையும் முன்னிட்டு அரசியல்துறை மகளிர் பிரிவு விடுத்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

தமிழ்த் தேசிய இனத்தின் அரைவாசித் தொகையினரான தமிழீழப் பெண்கள், சமூக ஒடுக்குமுறைத் தனங்களிலிருந்தும் பேரினவாத ஒடுக்குமுறையிலிருந்தும் தம்மைத் தாமே பாதுகாத்துக்கொள்ளும் பொருட்டும், இனத்தின் தேசியத்தையும் தன்னின மக்களின் அரசியல் அபிலாஷைகளையும் மீட்டெடுத்துப் பாதுகாக்கும் பொருட்டும் போராட்டத்தில் குதித்துவிட்டார்கள் என்ற தேசிய எழுச்சியைப் பிரகடனப்படுத்தும் நாளாகவே 2ஆம் லெப். மாலதி, முதல் பெண் மாவீராக நாம் பிரிந்த நாள் தமிழீழப் பெண்கள் எழுச்சி நாளாகத் தோற்றம் பெற்றது.

விதிக்கப்பட்ட வாழ்விலிருந்து மீண்டெழுந்து தன்னைத் தானே தீர்மானிக்கும் உன்னத வாழ்வை நோக்கிய பயணத்தை ஆரம்பித்திருக்கும் தமிழீழப் பெண்களின் வல்லமை தேச விடுதலை எனும் தேசியக் கடமையைச் சரிவரப் பகிர்ந்து கொண்டிருக்கின்றது. மிகவும் நெருக்கடியான போர் மேகம் சூழ்ந்த நாள்களில் தமிழீழப் பெண்கள் வாழ்ந்த வாழ்க்கையும் பெற்றுக்கொண்ட வடுக்களும் புரிந்த போராட்டங்களும் மிகவும் கொடுமையானதும், மிக்க உன்னதம் வாய்ந்ததுமாகும். இதில் போராளிப் பெண் சாதாரண சமூகப் பெண் என்ற பாகுபாடு என்று தேவையில்லாமல் அனைவருமே இனவாதப் போரை எதிர்கொள்பவர்களாகவும் அதற்கெதிராக போராடவேண்டியவர்களாகவுமே இருந்தார்கள். அந்த அவலத்தின் புதை குழியிலிருந்துதான் தமிழீழப் பெண்களின் எழுச்சியின் வேர் இறங்கத் தொடங்கியது.

காலாகாலமாய் நிலவி வந்த பெண் என்ற விம்பத்தை போராட்ட களத்திலே குதித்த பெண்கள் மாற்றினர். பெண்களால் முடியாது என்ற கருத்தை அவர்களின் செயலாற்றல் மாற்றியமைத்தது. கடின உடல் உழைப்பை செலுததவும், தனித்து நின்று தீர்மானம் எடுக்கவும் பெண்களால் முடியும் என்பதை நெருக்கடி மிக்க போர்க்காலங்களில் போர்ப்பணிகளில், நிர்வாகப் பணிகளில் மிகவும் துல்லியமாக நிரூபித்துக் காட்டினார்கள். இதானால் இதுவரை காலமும் பெண் என்றதுமே மென்மை என்ற சிந்தனையோட்டம் மாறி பெண்ணும் வல்லமையின் ஒரு வடிவம் என்ற உண்மை உணரப்படத்தொடங்கியுள்ளமையானது ஒரு நீண்ட சமூக மாற்றத்துக்கான பயணத்தின் ஆரோக்கியமான ஆரம்பமாகவுள்ளது.

உரிமை என்பது ஒவ்வோர் உயிரின் பிறப்போடும் சேர்ந்தே பிறப்பது. அதை எடுக்கவோ கொடுக்கவோ இன்னொருவருக்கும உரிமை இல்லை. தமிழ்த் தேசிய இனம் எவ்வாறு தனது உரிமைகளை நிலைநாட்டத் தானே போராடுகிறதோ, சர்வதேசத்தின் முன்னிலையில் தன் உரிமைக் குரலை கம்பீரத்தோடு முன்வைக்கிறதோ அதுபோலவே தமிழீழப் பெண்களின் உரிமையும் அவர்களின் பிறப்புரிமை. அவளே அதன் குரலை ஒலிக்கவேண்டியவள். அதனால் தான இந்த எழுச்சி தினத்தில் அவளின் உரிமைக் குரல் சர்வதேசத்தின் செவிககளிலும் எழுச்சியுடன் ஒலிக்கின்றது.

ஓர் இனத்தின் மீதான அழிப்பின் போது ஆக்கிரமிப்பாளர்களின் கைகள் முதலில் நீள்வது பெண்களை நோக்கியே ஆகும். நேரடியானதாகவும், மறைமுகமானதாகவும், பல்வேறு வடிவங்களில் அதன் வடிவங்களில் அதன் பரிமாணங்கள் அமைகின்றன. நேரடியான உயரிழப்புக்கள், உடைமை இழப்புக்கள், கைதுகள், பாலியல் வன்முறைகள் என்பனவும் மறைமுகமான குடும்பப் பாதிப்புக்கள், சமூக சீரழிவுகள் என்பனவும் தனித்தனியே விரிவாக்கம் காணும்போது அதன் முழு வடிவமும் ஓர் இனப்படுகொலை வடிவத்தையே தரும். எனவேதான் ஓர் இனத்தின் விடுதலை என்பது பெண் விடுதலை அடையும்போதுதான் முழுமைய அடையமுடியும் என்பதை தமிழீழத் தேசியத் தலைவர் அவர்கள் மிகவும் தெளிவாகக் கூறியிருக்கின்றார்.

இன்று போர் ஓய்ந்து சமாதான முன்னெடுபபுக்களால் தமிழீழம் களை கட்டத் தொடங்கியுள்ளது. ஒவ்வொரு தமிழ்க் குடிமகனதும் சுய விருத்தியுடன் கூடிய ஒட்டுமொத்த தேச அபிவிருத்தி எனப் போராட்ட வடிவம் புதுமையான புதிய பரிமாணத்தை நோக்கி நகருகிறது. இதில் பெண்களின் அபிவிருத்தி மிகவும் பிரதான இடத்தை வகிக்கிறது என்பதை தமிழீழ தேசம் தெளிவாக உணர்ந்துள்ளது. தமிழீழப் பெண்கள் கல்வி, பொருளாதார சமூக முன்னேற்றப் பணிகளில் ஓய்வொழிச்சல் இல்லாமல் உழைக்கத் தயாராகிவிட்டார்கள். ஆனாலும் அவர்களுக்கான தடைகள் சில இன்றும் தளராமலே உள்ளன.

சமூக அபிவிருத்திக்காக பெண் உழைக்கும்போது வீட்டில் இருக்கும் ஒவ்வொரு பெண்ணும் வீதிக்கு வருகிறாள் அந்த ஆற்றலின் வடிவத்தை மதிப்பளித்து வரவேற்க சமூகம் தயாராகவேண்டும். இங்கேதான் புதிய சிக்கலகள் முடிச்சவிழ்கின்றன. இன்னும் பெண்ணை வெறும் பாலியல் பண்டமாகக் கருதும் கருத்துருவாக்கலின் ஆதிக்கம் அவளுக்கான பெரும் தடையாக உள்ளது. இது அரச கட்டுப்பாட்டுப் பகுதிகளிலேயே கோரவடிவம் கொண்டுள்ளது. காரணம் அங்கு நிலவும் பொழுதுபோக்குச் சாதனங்களின் பெண் தொடர்பான வெளிப்பாடுகளும் போதை மருந்து பாவிப்புக்களும். இடம்பெயர் வாழ்வும் வெறும் கனவு வாழ்க்கைக்குள் இளைய தலை முறையினரை மூழ்கடிக்கும் தந்தி ரோபாயங்களுமே ஆகும். இதிலிருந்து அந்த மக்கள் மீளும்போது தான் அங்கு வாழும் பெண்களின் அபிவிருத்திக்கு தடையற்ற வழிபிறக்கும்.

இத்கைய மீட்சிக்கு தமிழர் தாயகப் பிரதேசத்தில் நிலைகொள்ள வைக்கப்பட்டிருக்கும் இராணுவப் பிரசன்னம் அகலவேண்டியது அவசியமானது; இன்றியமையாதது. இதன் மூலமே அனைத்து மக்களும் தமது சொந்த வாழ்விடங்களில் மீளக் குடியமர முடிவதுடன் நெருக்கு வாரமற்ற தமது இயல்வு வாழ்வுக்கு திரும்பவும் முடியும். இது நிகழும் போதுதான் தேசத்தின் அபிவிருத்திப் பாதையில் முன்னேறத்துடிக்கும் தமிழீழப் பெண்களின் தேவை நிறைவேற்றப் படக்கூடிய சூழல் உருவாகும். அதுவே எங்களின் செய்தியுமாகும்.

*- இவ்வாறு அந்த அறிக்கையில்* தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம)

---

நீண்ட கால இடைவெளியின் பின்னர்

## சிறப்புற நடைபெற்ற அஞ்சல் தின நிகழ்வுகள்

யாழ்ப்பாணம்,ஒக்.10

உலக அஞ்சல் தின நிகழ்வுகள் நீண்டகால இடைவெளிக்குப் பின்னர் நேற்று யாழ்ப்பாணத்தில் வெகு விமரிசையாக இடம்பெற்றன.

இலங்கை வங்கியின் அனுசரனையுடன் வடமாகாண பிரதி அஞ்சல்மா அதிபதி அலுவலகத்தில் நேற்று காலை 9மணியளவில் நிகழ்வுகள் ஆரம்பமாகி நண்பகல் 12மணிவரை நடைபெற்றன.

இந்த நிகழ்வுகளில் கொடி யேற்றல் மற்றும் சிறப்புரைகள் ஆகியவற்றுடன் மாகாண ரீதியில் நடத்தப்பட்ட கட்டுரை, ஓவியம் மற்றும் முத்திரை சேகரித்தல் போட்டிகளில் வெற்றியீட்டிய மாணவர்களுக்கு பரிசில்களும் சான்றிதழ்களும் வழங்கப்பட்டன.

நிகழ்வில் யாழ். பிரதேச அஞ்சல் அத்தியட்சகர் எஸ்.சிவராசசிங்கம், பிராந்திய நிர்வாக உத்தி யோகத்தர், எஸ்.மார்க்கண்டன், பிரதம தபாலதிபர் எஸ்.இராஜதுரை, பிரதேச பிரதம கணக்காளர் திருமதி கலைச்செல்வன் மற்றும் தபால் திணைக்கள உத்தியோ கத்தர்கள், ஊழியர்கள் ஆகியோரும் கலந்துகொண்டனர்.

போட்டிகளில் வெற்றியீட்டிய மாணவர்களுக்கு இலங்கை வங்கியில் 250ரூபா வைப்புக்கணக்கு ஆரம்பிப்பதற்கான அனுமதிக்கடிதங்கள் நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட இலங்கை வங்கியின் பிராந்திய முகாமையாளர் சி. நடராஜலிங்கத்தினால் கையளிக்கப்பட்டன. இந்தக் கடிதங்களை மாணவர்கள் தமக்கருகில் உள்ள இலங்கை வங்கியின் கிளை முகாமையாளரிடம் ஒப்படைத்தால் அவர் வங்கியின் பணத்தில் 250 ரூபாவை மாணவர்களின் பெயரில் வைப்பில் இட்டு அதற்குரிய வங்கிப் புத்தகங்களை கையளிப்பார் என்று தெரிவிக்கப்பட்டது. (எ-10)

### இன்றைய ஆட்டங்கள்

யாழ்ப்பாணம் கல்விக் கோட்டப் பாடசாலை அணிகளுக்கு இடையே நடைபெறும் உதைபந்தாட்ட சுற்றுப் போட்டியில் இன்று பி.ப. 2.00மணிக்கு யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி மைதானத்தில் இடமபெறவுள்ள ஆட்டங்களில் கலந்துகொள்ளவுள்ள அணிகளின் விவரங்கள் வருமாறு:-

**14 வயதுப்பிரிவு**

★புனித சாள்ஸ் ம.வி எதிர் நாவாந்துறை றோ.க.வித்தி.

**16 வயதுப்பிரிவு**

★புனித சாள்ஸ் ம.வி. எதிர் வைத்தீஸ் வராக்கல்லூரி.

★யாழ்.மத்திய கல்லூரி எதிர் நாவாந்துறை றோ.க.வித்தியாலயம்.

**18 வயதுப்பிரிவு**

★நாவாந்துறை றோ.க.வித்தி. எதிர் புனித சாள்ஸ் ம.வி.

★யாழ்.மத்திய கல்லூரி எதிர் வைத்தீஸ்வராக் கல்லூரி. (ம-86)

---

## யாழ்.பஸ் நிலையத்தில்...

(2ஆம் பக்கத் தொடர்ச்சி)

அரசியல்துறைக்கு தெரியப்படுத்தப்பட்டதையடுத்து நேற்று மாலை சம்பவ இடத்துக்குச் சென்ற யாழ். மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் இளம்பரிதி மற்றும் அரசியல் துறைப் பிரமுகர் ஈஸ்வரன் ஆகியோர் போக்குவரத்து சபையின் தொழிற் சங்கப் பிரதிநிதிகளுடன் பேச்சு நடத்தினர்.

இதன்போது ஏற்பட்ட இணக்கப்பாட்டையடுத்து மீண்டும் சேவையை ஆரம்பிப்பதற்கு சாரதிகள் சம்மதித்தனர். எனினும் -

பெரும்பாலான பஸ்கள் டிப்போவுக்கு கொண்டுசெல்லப்பட்டுவிட்டதால் நேற்று மாலை சில பஸ் சேவைகள் மட்டுமே இடம்பெற்றன.

இந்தச் சம்பவத்தில் காயமடைந்த போக்குவரத்துச் சபை ஊழியர்கள் ஐவர் உட்பட ஆறுபேர் யாழ்போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இவ்வாறு அனுமதிக்கப்பட்டவர்களின் பெயர் விவரம் வருமாறு:-

எஸ்.சிவகுமார் (வயது 30 - பண்டத்தரிப்பு), எஸ்.ஜெயராஜா (வயது 38 - யாழ்ப்பாணம்), பி.இராசேந்திரம் (வயது 38 - மல்லாகம்), ரி.இராசேந்திரம் (வயது 30 - கொக்குவில்), எஸ்.பத்மராஜா (வயது 37 யாழ்ப்பாணம்), ஓம்முருகன் (வயது 23 - தெல்லிப்பழை).

இதற்கிடையில்:-

இந்தச் சம்பவத்துடன் தொடர்புடையவர்கள் எனக் கூறப்படும் ஓட்டோ சாரதிகள் ஆறு பேரை கைதுசெய்த பொலீஸார் அவர்களது நான்கு ஓட்டோக்களையும் யாழ்.பொலீஸ் நிலையத்தில் தடுத்து வைத்துள்ளனர்.

சம்பந்தப்பட்ட பஸ் சாரதிக்கும், மினிபஸ் சாரதிக்கும் இடையில் சேவை தொடர்பாக கடந்த ஒருவார காலமாக நிலவிவந்த பகைமையுணர்வே இந்த களேபரத்துக்குக் காரணம் என்று மற்றொரு தகவல் தெரிவித்தது. (எ-4-8-9-10-15)

---

## கைதுசெய்த பத்து, பன்னிரண்டு பொலீஸார் கடுமையாகத் தாக்கி வாக்குமூலம் பெற்றனர்

### விடுதலை செய்யப்பட்ட புலி உறுப்பினர் தெரிவிப்பு

கொழும்பு,ஒக்.10

"எம்மைக் கைது செய்த பொலீஸார் கடுமையாகத் தாக்கி வற்புறுத்தியே வாக்குமூலம் பெற்றனர்."

- இவ்வாறு நேற்று பிணையில் விடுவிக்கப்பட்ட புலி உறுப்பினர்களில் ஒருவரான கந்தசாமி ராமசாமி தெரிவித்தார்.

நடந்தவை பற்றி அவர் மேலும் கூறியதாவது:-

"நீங்கள் விடுதலைப்புலிகள் அலலர் கடத்தல்காரர்கள் என்று சொல்லுங்கள்!" என்று கூறி கடுமையாகத் தாக்கியே பொலீஸார் எம்மிடம் ஒப்புதல் வாக்குமூலம் பெற்றனர்.

சம்பவம் இடம்பெற்ற தினத்தன்று நாம் காட்டில் மரம் வெட்டிக்கொண்டு நின்றோம். திடீரென அங்கு வந்த 10, 12பொலீஸார் எம்மைக் கைது செய்தனர். பொலீஸ் நிலையத்துக்கு வரும்படி பணித்தனர்.

நகரினுள் செல்லவேண்டாம் என்று எமக்குப் பொறுப்பாளர் பணித்திருக்கிறார். அதனால் வரமாட்டோம் என்று நாம் கூறினோம்.

முதலில் பொலீஸ் நிலையத்துக்கு வாருங்கள்; உங்களை விட்டு விடுவோம் என்று கூறி எம்மைக் கூட்டிச் சென்று ஜீப்பில் ஏற்றினர். எம் வசமிருந்த கோடரிகளையும் ஆயுதங்களையும் வாங்கிக் கொண்டனர்.

ஜீப்பில் ஏற்றியவுடன் நாம் கட்டியிருந்த சாரங்களைக் கழற்றி கோடரியால் கிழித்து எமது கைகளைக் கட்டினர்.

எம்மை எங்கே கொண்டு செல்கிறீர்கள் என்று கேட்டபோது, ஈச்சிலம்பற்று பொலீஸ் நிலையத்துக்கு கொண்டு செல்கிறோம் என்றனர்.

பின்னர், வேறொங்கோ ஜீப் சென்றது. நாம் அதைக் கேட்டபோது, அங்கே பொறுப்பதிகாரி இல்லை; கந்தளாய் பொலீஸ் நிலையத்துக்கு கொண்டு செல்கிறோம் என்றனர் பொலீஸார்.

அங்கு சென்றபோது மாலை 5.30 இருக்கும் எம்மிடம் வாக்கு மூலம் பெறப்பட்டது. பின்னர் நாம் இருவரும் திருகோணமலைச் சிறையில் அடைகப்பட்டோம். சிறையில் எமக்கு எந்த ஆபத்தும் நேரவிலலை; எவரும் தாக்கவுமில்லை. - இவ்வாறு அவர் கூறினார். (ம)

---

வடக்கு - கிழக்கு மாகாணங்களில்

## பனை மரங்கள் தறிக்க முற்றாகத் தடைவிதிப்பு

வடக்கு-கிழக்கு மாகாணங்களில் பனை மரங்களைத் தறிப்பது முற்றாகத் தடைசெய்யப்பட்டுள்ளதாக தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம் அறிவித்துள்ளது.

வடக்கு-கிழக்கு மாகாணத்தில் கடந்த 10 வருடங்களில் 25 லட்சம் பனை மரங்கள் யுத்தத்தால் அழிக்கப்பட்டுள்ளன. பனையை நம்பியுள்ள 40 ஆயிரம் குடும்பங்களின் வருமானங்கள் பாதிப்படைந்துள்ளன. தற்போது மீள் நடுகை செய்யப்படும் பனை மரங்கள் முழுமையான பயனைத் தருவதற்கு குறைந்தது 30 வருடங்கள் எடுக்கும். எனவே, இன்று வியாழக்கிழமை முதல் வடக்கு - கிழக்கு மாகாணங்களில் பனைமரம் தறிப்பது முற்றாகத் தடைசெய்யப் பட்டுள்ளதாக தமிழீழ பொருண்மிய மேமபாட்டு நிறுவனம் அறிவித்துள்ளது.

கட்டட வேலைகளுக்கு பனை மரங்களுக்குப் பதிலாக ஏனைய மரங்களைப் பாவிக்குமாறும் கோரப் பட்டுள்ளது. அவ்வகையான பதிலீட்டு மரங்கள் தென்பகுதியிலிருந்து கொணடு வருவதற்கான தீர் வைகள் விலக்கு அளிக்கப்பட்டுள்ளமையும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது (ம)

---

## கண்காணிப்புக்குழு நெடுந்தீவுவிஜயம்

யாழ்ப்பாணம்,ஒக்.10

நெடுந்தீவில் ஈ.பி.டி.பி. முகாம் மீது கடந்த சனிக்கிழமை பொதுமக்கள் தாக்குதல் நடத்தியதாகக் கூறப்படும் சம்பவம் தொடர்பாக ஆராய்வதற்கென யுத்த நிறுத்தக் கண்காணிப்புக் குழுப் பிரதிநிதிகள் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை நெடுந்தீவுக்கு விஜயம் செய்தனர்.

நெடுந்தீவுப் பிரதேச மக்களுடன் கலந்துரையாடிய மேற்படி குழுவின் பிரதிநிதிகள், நெடுந்தீவில் தமது உப அலுவலகம் ஒன்றை விரைவில் திறக்கவுள்ளதாகவும், அதற்கு நெடுந்தீவு மக்கள் ஒத்துழைப்பு வழங்கவேண்டும் என்றும் தெரிவித்தனர்.

அத்துடன், சேதமாக்கப்பட்ட ஈ.பி.டி.பியின் நெடுந்தீவு முகாமையும் கண் காணிப்புக் குழுவினர் சென்று பார்வையிட்டனர். (எ-9)

### வாராந்த வெள்ளி நிகழ்வு

சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவையினர் சந்நிதியான் ஆச்சிரம மண்டபத்தில் நடத்தி வரும் வாராந்த வெள்ளி நிகழ்வு வரிசையில் இவ்வார நிகழ்வாக கலாபூஷணம் எல்.திலகநாயகம் போலின் இன்னிசை நிகழ்வு பக்க வாத்தியங்கள் சகிதம் இடம்பெறவுள்ளது. இந் நிகழ்வின் அறிமுகவுரையை இசைமணி சி.துரைராசா வழங்கவுள்ளார்.

---


# வெற்றிடங்கள்

வன்னிப் பிரதேசத்தில் பின்வரும் பதவிகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

★ பக்க வடிவமைப்பாளர் *(PAGE MAKER)*

★ ரைப் செற்றர் *(TYPE SETTER)*

அனுபவம் உள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும். சம்பளம் நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்.

தகுதியானவர்கள் விண்ணப்பங்களை பின்வரும் முகவரிக்கு நேரடியாகவோ அல்லது தபால்மூலமாகவோ அனுப்பிவைக்கவும்.

**விளம்பர இல. 1668.**

(C/24156) மே/பா, உதயன், யாழ்ப்பாணம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அதிரடிப் படையினர் சுட்டதில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) னர் கேட்டபோது மூவரும் கொடுக்க மறுத்துவிட்டனர். வாக்குவாதம் மூண்டது. அதை அடுத்தே தாக்குதல் நடந்தது எனக் கூறப்பட்டது.

இந்தத் தாக்குதல் சம்பவத்துக்கு அம்பாறை மாவட்ட தமிழ்ப்பகுதிகள் எங்கும் காலையிலேயே மக்கள் எதிர்ப்பு தெரிவிக்கத் தொடங்கிவிட்டார்கள். அது மாலையில் உச்சக் கட்டத்தை அடைந்தது.

தம்பிலுவில், திருக்கோயில், விநாயகபுரம் ஆகிய பகுதிகளைச் சேர்ந்த மக்கள் ஆயிரக்கணக்கில் அணிதிரண்டு காஞ்சிரங்குடா விசேட அதிரடிப்படை முகாமை நோக்கி பேரணியாகச் சென்றனர்.

பேரணி முகாமை அண்மித்ததும் முகாமில் இருந்து துப்பாக்கி வேட்டுக்கள் சீறிப் பாய்ந்தன.

16பேர் காயமடைந்தனர். அவர்கள் திருக்கோயில் மருத்துவமனையில் சிகிச்சைக்காக சேர்க்கப்பட்டனர். அவர்களில் படுகாயமடைந்திருந்த இருவர் மரணமடைந்தனர்.

காயமடைந்திருந்தவர்களில் 11பேர் திருக்கோயில் மருத்துவமனையில் இருந்து கல்முனை மருத்துவமனைக்கு மாற்றப்பட்டனர்.

ஜெயராசா ஜெயப்பிரகாஷ் (வயது 19), குமாரகுலசிங்கம் (வயது 35 ) ஆகியோரே உயிரிழந்தவர்கள் என்று அடையாளம் காணப்பட்டுள்ளது.

முகாமுக்குள் இப்போது ஐந்து சடலங்கள் இருக்கின்றன என்று கூறப்படுகிறது.

இச்சம்பவங்கள் தொடர்பாக அம்பாறை மாவட்ட கண்காணிப்புக் குழுவுக்கு ஏற்கனவே அறிவிக்கப்பட்டுவிட்டது.

குழுவினர் நேற்று முடிந்தவரையில் தகவல்களைத் திரட்டினர். இன்று முகாமுக்கு நேரில் சென்று விசாரணைகளை நடத்த இருக்கின்றனர்.

அவர்கள்தான் முகாமுக்குள் ஐந்து சடலங்கள் இருக்கின்றன என்று கூறப்படுவதில் உண்மை உண்டா, இல்லையா என்பதை தெளிவுபடுத்த வேண்டும்.

அதிரடிப்படை முகாம் அதிகாரிகளைப் பொறுத்தவரையில் அவர்கள் காலைச் சம்பவத்துக்கும் மாலைச் சம்பவத்துக்கும் புலிகளே பொறுப்பை ஏற்க வேண்டுமென்கின்றனர்.

காலையில் சோதனைக்காக முகாமருகில் டிராக்டரை நிறுத்தும்படி சமிக்ஞை கொடுத்தும் அது நிறுத்தப்படவில்லை என்றும் அதையடுத்தே பிரச்சினை எழுந்தது என்றும் விசேட அதிரடிப் படையினர் கூறுகின்றார்கள்.

மாலையில் புலிகளே பொதுமக்களைத் திரட்டிக்கொண்டு முகாமைத் தாக்க வந்தார்கள் என்றும் அவர்கள் முகாமைநோக்கி சுட்டபின்னரே பாதுகாப்புக்காகத் தாம் நடவடிக்கை எடுக்கவேண்டி வந்தது என்றும் அவர்கள் மேலும் கூறுகின் றார்கள்.

நேற்றுக்காலை பால முனையிலும் அதிரடிப் படையினர் பொதுமக்களைத் தாக்கிய ஒரு சம்பவம் நிகழ்ந்தது. சிறையிகளில் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் தமிழ் அரசியல் கைதிகளை அரசு விடுவிக்க வேண்டுமென்று கோரி கல்முனை மருத்துவமனைக்குச் சமீபமாக நின்று பொது மக்கள் ஆர்ப்பாட்டம் செய்தனர்.

வீதியும் மக்களால் நிரம்பிவிட்டது. அப்போது அங்கே அதிரடிப்படையினரின் வாகனம் ஒன்று வந்தது. வாகனம் செல்வதற்கு வழி இல்லை என்று கண்டதும் அதிரடிப்படையினர் வாகனத்தில் இருந்து இறங்கி விதியில் நின்ற பொதுமக்களைத் தாக்கி அவர்களை அப்புறப்படுத்த முனைந்தனர். ஏற்கனவே காஞ்சிரங்குடாவில் தாக்குதல் சம்பவம் நடந்ததை அறிந்திருந்த மக்களுக்கு ஆத்திரமேற்பட்டது. எனினும் அவர்கள் எதிர்த்தாக்குதல் நடவடிக்கையில் இறங்கவில்ல.

வீதிகளில் ரயர்கள் எரிப்பு, கடையடைப்பு, ஹர்த்தால் ஆகியவை மூலம் தமது ஆத்திரத்தைத் தணித்துக்கொள்ள முயன்றனர்.

இன்று நிலைமை எப்படி இருக்குமோ என்று அச்சம் தெரிவிக்கப்படுகின்றது.

கண்காணிப்புக் குழுவினர் காஞ்சிரங்குடா விசேட அதிரடிப்படை முகாமுக்குச் சென்று சடலங்கள் பற்றிய உண்மைத் தகவலை நேரில் அறிந்து இன்று வெளியிடுவார்கள் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

அந்தத் தகவல்தான் அம்பாறை மாவட்ட நிலைமை எப்படி இருக்குமென்பதைத் தீர்மானிக்கும். (ம)


நூல் வெளியீடு

ஏணி

கவிதை ஓவியத் தொகுப்பு

காலம் : 11.10.2002 வெள்ளி பி.ப 3.00 மணி

இடம் : யாழ். தேசிய கல்வியியற் கல்லூரி

பிரதம விருந்தினர் :
கலாநிதி. திருநாவுக்கரசு கமலநாதன்
(பீடாதிபதி, யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி)

சிறப்பு விருந்தினர் : கவிஞர். சோ.பத்மநாதன்
(ஓய்வுபெற்ற அதிபர், பலாலி ஆசிரிய கலாசாலை)

நூல் ஆசிரியர் : மானியூர் ரட்ணேஸ்

நூல் அறிமுகம் : கலாநிதி. எஸ்.சிவலிங்கராஜா
(சிரேஸ்ட விரிவுரையாளர், தமிழ்த்துறை யாழ் பல்கலைக்கழகம்)

முதல் பிரதி பெறல் : திரு.க.தேவராஜா
(வணிகத்துறைத்தலைவர், யாழ் பல்கலைக்கழகம்)

நூல் ஆய்வு :
திருமதி. கோகிலா மகேந்திரராஜா
(உதவிக் கல்விப் பணிப்பாளர், வலிகாமம் கல்வி வலயம்)
திரு. கந்தையா ஸ்ரீகணேசன்
(விரிவுரையாளர், யாழ்பல்கலைக்கழக வவுனியா வளாகம்)

இலக்கிய ஆர்வலர்களை அழைக்கின்றோம்

நுண்கலை மன்றம்,
யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி.

வாழ்த்துபவர்கள்

நியூ நகுலா ஜீவல்லறி
T.P:- 01-2223433 74, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்

நியூ லலிதாஸ் ஜீவல்லறி
171, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்

நகுலா நகை மாடம்
241G, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்


## சேவைகள் வழமைக்குத் திரும்பும்

யாழ்.பஸ் நிலையத்தில் போக்குவரத்துச்சபை சாரதி ஒருவர் தாக்கப்பட்டதை அடுத்து ஏற்பட்ட களேபரத்தால் பாதிக்கப்பட்ட பஸ் சேவைகள் அனைத்தும் இன்று மீண்டும் வழமைகுத் திரும்புமென்றும் அனைத்து பஸ சேவைகளும் வழமைபோல் நடைபெறும் என்றும் வடபிராந்திய போக்குவரத்துச் சபை முகாமையாளர் மணிவாசகம் அறிவித்துள்ளார்.

## 9முஸ்லிம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) முன்தினம் நாடாளுமன்றத்தைப் பகிஷ்கரித்தனர். இவர்களுடன் நேற்று நெடுஞ்சாலை அமைச்சர் ஏ. எல்.எம். அதாவுல்லா, பிரதி அமைச்சர்களான நூர்தீன்மசூர், மொகைதீன் அப்துல் காதா ஆகியோரும் நாடாளுமன்ற உறுப்பினர்களான திமர் தௌபீக், எம்.எச்.தௌபீக், என்.ஜி.ஏ.அஸிஸ், றிசாட் பதூர்தீன் ஆகியோரும் இணைந்துகொண்டனர் என அறிவிக்கப்படுகிறது.

"இன்றைய சமாதான - யுத்த நிறுத்த - சூழ்நிலையை முஸ்லிம் மக்கள் பெரிதும் வரவேற்று ஆதரவளித்துள்ளனர். என்றாலும் இன்றைய சூழ்நிலையில் முஸ்லிம்கள் பாதிப்படையக் கூடாதுஎன்பதில் நாம் உறுதியாகவுள்ளோம்" - முஸ்லிம் காங்கிரஸ் தவிசாளரும் நெடுஞ்சாலைகள் அமைச்சருமான ஏ.எல்.எம்.அதாவுல்லா இப்படித் தெரிவித்தார். (ம)

## தமிழீழ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) மணிக்கு நினைவுச் சின்னம் திறப்பு நிகழ்வு இடம்பெறும்.

கிளிநொச்சி மத்திய விளையாட்டு மைதானத்தில் பிரதான நிகழ்வுகள் இடம்பெறும். பிற்பகல் 3 மணிக்கு எழுச்சி நிகழ்வுகள் ஆரம்பமாகும். மகளிர் படையணிகளின் இராணுவ அணி வகுப்புக்கள், மகளிர் படையணியின் போராட்ட வரலாற்றை சித்திரிக்கும் ஊர்திகள் பவனி மற்றும் கலை நிகழ்வுகள் என்பன அங்கு தொடர்ந்து இடம்பெறும்.

அமெரிக்க 'கிறின் பரே' அணியிடம் விசேட பயிற்சிகள் பெற்ற ஸ்ரீலங்காவின் வண் கொமாண்டோ, ரூ கொமாண்டோ அணிகள் மகளிர் படையணியின் புதிய போர்த் தந்திரோபாய யுத்தத்தினால் முறியடிக்கப்பட்ட மன்னகுளச் சமரின் 'மாதிரித் தாக்குதலும்' இடம்பெறவுள்ளது.

மாலதி படையணியின் உருவாக்கமான 'வெஞ்சமரின் வரிகள்' என்ற ஒலிப்பேழையும் வெளியிட்டு வைக்கப்படும்

கிளிநொச்சியில் இடம்பெறும் நிகழ்வுகளில் பொதுமக்கள் கலந்து கொள்ள வசதியாக கோட்ட ரீதியாக இலவச போக்குவரத்து ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

யாழ். நகரின் சகல பகுதிகளில் இருந்தும் வாகனங்கள் நண்பகல் 11 மணியளவில் கிளிநொச்சியை நோக்கி புறப்படும் எனத் தெரிவிக்கப்பட்டது.

கிளிநொச்சியில் இடம்பெறும் நிகழ்வுகளில் பல ஆயிரக்கணக்கான மக்கள் திரள்வர் என எதிர்பார்க்கப் படுகிறது. எழுச்சி நிகழ்வுகளை யொட்டி கிளிநொச்சி நகர் விழாக் கோலம் பூண்டுள்ளது.

மட்டக்களப்பு சிவானந்தா தேசியக் கல்லூரி மைதானத்தில் இன்று மாலை மூன்று மணிக்கு எழுச்சி நிகழ்வுகள் இடம்பெறும். அங்கு பெண் போராளிகளின் வீரதீரச் செயல்களை சித்திரிக்கும் புகைப்படக் கண்காட்சி மற்றும் பேரணி என்பன நடைபெறவுள்ளன.

தமிழீழப் பெண்கள் எழுச்சி தினத்தில் கலந்துகொள்வதற்கு மன்னாரில் இருந்து சுமார் 1,500 பொது மக்கள் செல்லவுள்ளனர். இவர்களுக்கான போக்குவரத்து ஏற்பாடுகளை புலிகள் செய்துள்ளனர்.

இதேவேளை, மன்னார் மாவட்டத்தில் தமிழீழப் பெண்கள் எழுச்சி தினம் ஆண்டானகுள அரசினர் தமிழ்ப் பாடசாலையில் நடைபெறவுள்ளது. (எ-9-10)


A/L 2004

கணக்கீடு

திரு.பாலவாசன்
B.B.A.(F.M.Spl)

தனி வியாபார முடிவுக்கணக்கு

Sat., Sun. 9 - 10a.m.

ஆரம்பம் 12.10.02 Sat. 9a.m.

(C-24151)

விக்னா
கல்வி நிறுவனம்


## புலிகள் இருவரும்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) தாபிமான அடிப்படையில் விடுவிக்கப்பட்டார்.

தமது உறுப்பினர்கள் இருவர் விடுவிக்கப்பட்டாலேயே எஞ்சிய ஆறு படையினரையும் விடுவிக்க முடியும் எனப் புலிகள் நிபந்தனை விதித்தனர்.

இதனையடுத்து, சம்பந்தப்பட்ட புலி உறுப்பினர்கள் இருவரையும் பிணையில் விடுவிப்பதற்கான மனுக்கள் மேன்முறையீட்டு நீதிமன்றதில் தாக்கல் செய்யப்பட்டன. அவர்களுககு பிணை அனுமதி வழங்கப்பட்டது.

சம்பந்தப்பட்ட இருவரும் திருமலை மாஜிஸ்திரேட் நீதிமன்றத்தால் நேற்று நண்பகல் பிணையில் விடுவிக்கப்பட்டனர்.

இதனைத் தொடர்ந்து நேற்று மாலை 5.10 மணியளவில் கும்புறுப்பிட்டி சனசமூக நிலையத்தில் வைத்து ஆறு படையினரையும் புலிகள் விடுவித்தனர். இதை ஒட்டி நடைபெற்ற நிகழ்வில் செஞ்சிலுவைச் சர்வதேச குழுப் பிரதிநிதிகள் இந்தப் படையினரைப் பெறுபேற்றனர். பின்னர் அவர்களை திருகோணமலை 'மங்கி பிரிட்ஜ்' முகாமுக்குள் செஞ்சிலுவைப் பிரதிநிதிகள் கூட்டிச் சென்று இராணுவ அதிகாரிகளிடம் ஒப்படைத்தனர்.

விடுவிக்கப்பட்ட இராணுவத்தினர், தங்களைப் புலிகள் நன்கு உபசரித்து தங்களுடன் அன்பாகவும் பண்பாகவும் பழகியதாகக் கூறினர்.

தேவையான பொருள்களைத் தந்தனர். வானொலி, தொலைக்காட்சி உட்பட சகல வசதிகளும் கிடைத்தன. துன்புறுத்தலோ, மிரட்டலோ இருக்கவில்லை. சுதந்திரமாக நடமாட அனுமதித்தனர். மொத்தத்தில் மனிதாபிமானத்துடன் நடந்து கொண்டனர். இப்படிப் புலிகளைப் புகழ்ந்தார்கள் விடுவிக்கப்பட்ட ஆறு இராணுவத்தினரும். (ம)

## இன்று...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) னில் பாலசிங்கம் தம்பதியரின் இல்லத்தில் பயணச்சீட்டுக்களை ஒப்படைக்கும் என அவரிடம் தெரிவிக்கப்பட்டிருந்தது.

அதற்கமைய பெட்டி படுக்கைகளுடன் அன்ரன் பாலசிங்கம் தம்பதியர் பயணத்துக்காக காத்திருந்தனர். ஆனால், பயணச்சீட்டுக்கள் உரிய நேரத்தில் வந்துசேரவில்லை.

ஆதலால், வேறு வழியின்றி பயணத்தைப் பிற்போடவேண்டியதாயிற்று.

முன்னைய ஏற்பாடுகளின்படி அன்ரன் பாலசிங்கம் தம்பதியர் பயணம் செய்யவிருந்த விமானம் இன்று மாலை 3.30 மணிக்கு கட்டுநாயக்கா விமான நிலையத்தை வந்தடையும் என எதிர்பார்க்கப்பட்டது.

விமானத்தில் இருந்து இறங்கியதும் வழமையான பணிகளை முடித்துக்கொண்டு அன்ரன் பாலசிங்கம் தம்பதியர் அங்கிருந்து விசேட ஹெலிகொப்டர் மூலம் வன்னிக்கு புறப்பட எற்பாடாகியிருந்தது.

அந்நடவடிக்கைகள் தாமதமின்றி குழப்பம், தடை ஏதுமின்றி - பூர்த்தியாவதை உறுதிப்படுத்துவதற்காக, கொழும்புக்கான நோர்வேத் தூதுவர் ஜோன் வெஸ்ட்பேர்க் கட்டுநாயக்கா விமான நிலையத்துக்கு நேரில் செல்லவிருந்தார்.

அன்ரன் பாலசிங்கம் வன்னிக்கு பயணம் செய்யவிருந்த ஹெலிகொப்டரில் அவருடன் அதன் விமானி, உதவியாளர்கள் தவிர வேறு எவரும் பயணிக்கமாட்டார்கள் என்றும் தெரிவிக்கப்பட்டிருந்தது.

அமைச்சர்களோ, நோர்வேத் தூதுவரோ பாலசிங்கம் தம்பதியருடன் ஹெலியில் வன்னிக்குச் செல்லும் ஒழுங்குகள் ஏதும் செய்யப்பட்டிருக்கவில்லை.

பாலசிங்கம் தம்பதியர் செல்லும ஹெலிகொப்டர் புதுக்குடியிருப்பு மகா வித்தியாலய மைதானததில் தரையிறங்குவதாக இருந்தது.

பாலசிங்கம் தம்பதியரின் புதிய பயணத் திகதி பற்றிய விபரம் ஓரிரு நாள்களில் தெரியவரும் என எதிர்பார்க்கப்படுகின்றது. (ம)

## குடாநாட்டு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) மற்றும் பொது அமைப்புக்கள், வங்கிகள் ஆகியவற்றின் முன்னால் அவற்றின் ஊழியர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள் நண்பகல் 12மணிமுதல் ஒரு மணி நேரம் எதிர்ப்பு நடவடிக்கையில் ஈடுபட்டனர்.

போக்குவரத்தில் ஈடுபட்ட வாகனங்கள் நிறுத்தப்பட்டு , அதிலிருந்த பொதுமக்கள் வீதியில் இறங்கி எதிர்ப்பு நடவடிக்கையில் ஈடுபட்டதைக் காணமுடிந்தது.

யாழ்.நகரப் பகுதியில் - கஸ்தூரியார் வீதியில் வர்த்தகர்கள் ஒன்றுகூடி கைகோத்து வீதியை மறித்தவாறு தமது எதிர்ப்பை வெளிப்படுத்தினர்.

யாழ்.பிரதான வீதியில் சிறைச்சாலைக்கு முன்பாக சென்.ஜேம்ஸ் பாடசாலை மாணவர்கள் வீதியில் நின்று தமது எதிர்ப்பை வெளிப்படு த்தினர். இவ்வேளையில் மேற்படி வீதியூடாக வந்த அனைத்து வாகனங்களும் வீதியில் நிறுத்தப்பட்டன. இதனால் போக்குவரத்து முற்றாக ஸ்தம்பித்தது.

3ஆம் குறுக்குத்தெரு அமைந்துள்ள அகதிகள் புனர்வாழ்வு நிறுவன ஊழியர்களும் வீதியில் இறங்கி எதிர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

திருநெல்வேலி பரமேஸ்வராச் சந்தியை இடைமறித்து யாழ். பல்கலைக்கழக மாணவர்கள் எதிர்ப்புப் போராட்டம் நடத்தினர் இதன்போது, பலாலி வீதி வழியாக யாழ். நகரப் பகுதி நோக்கி வந்த இராணுவ வாகனங்களும் தடுத்து நிறுத்தப்பட்டன.

இதேவேளை - யாழ். செயலகம், யாழ். பிரதேச செயலகம், யாழ். மாநகர சபை, யாழ்.கல்வித் திணைக்களம் ஆகியவற்றின் ஊழியர்களும் எதிர்ப்பு நடவடிக்கைகளில் ஈடுபட்டனர்.

மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ். அலுவலகம் முன்பாகவும் நேற்று இரண்டு மணிநேர எதிர்ப்புப் போராட்டம் நடைபெற்றது. மனித நேய அமைப்புக்களின் ஒன்றிய ஏற்பாட்டில் நடைபெற்ற இப்போராட்டத்தில் பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள், அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகள், சர்வமத குருமார்கள் ஆகியோர் கலந்துகொண்டனர். இப்போராட்டத்தில் மனிதநேய அமைப்புக்களின் ஒன்றியத்தினால் மனித உரிமைகள் ஆணைக்குழுவுக்கு மகஜர் ஒன்றும் கையளிக்கப்பட்டது.

இதேபோன்று வடமராட்சி, தென்மராட்சி உட்பட குடாநாட்டின் அனைத்துப் பகுதிகளிலும் கைதிகளுக்கு ஆதரவு தெரிவிக்கும் வகையில் இந்தப் போராட்டங்கள் முன்னெடுக்கப்பட்டன. (ம-எ-8-10-9-4-17-31-70)


ஐந்தாம் ஆண்டு நிறைவு நினைவலைகள்



அருள்மிகு அறிவர்

டேவிட் ஜெயரத்னம் அம்பலவாணர்

மலர்வு 28.02.1928 உதிர்வு 10.10.1997

'சாவின் இருள்சூள் பள்ளத்தாக்கில் நான் நடக்க நேர்ந்தாலும், நீர் என்னோடு இருப்பதால் எத்தீங்கிற்கும் அஞ்சிடேன்.'

திருப்பா: 23:4

(9102) குடும்பத்தினர்.


இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 10.10.2002இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org